**அலகு-1 மொழி மற்றும் இலக்கியம்**

**முன்னுரை**

மொழி (Language) என்ற வார்த்தை பிரெஞ்சு வார்த்தையான Langue மற்றும் லத்தீன் வார்த்தையான Linga ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டது. இது மனிதர்கள் பேசும் மற்றும் எழுதப்பட்ட வடிவங்களின் அர்த்தத்தை வெளிப்படுத்தும் ஒரு தகவல் தொடர்பு அமைப்பாகும்.

தான் நினைக்கும் கருத்தை பிறர் அறியச் செய்ய பயன்படும் ஒலிக் கூறே மொழி ஆகும்.

**உலக மொழிகள்**

உலகில் ஏறத்தாழ 6500 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றில் 2000 மொழிகள் ஆயிரத்திற்கும் குறைவான மக்களாலேயே பேசப்படுகின்றன. உலக மொழிகளை மொழியியல் அறிஞர்கள் கீழ்காணும் இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றனர்.

**1. இனவழி மொழிக் குடும்பம்**

ஒரு காலத்தில் ஒரு மொழியாக இருந்து பின்னர் அந்த மொழியிலிருந்து பல மொழிகள் உருவாக்கம் பெறுவது இனவழி மொழிக்குடும்பம் ஆகும். (எ.க);தமிழும் மலையாளமும் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்து பிற்காலத்தில் அவை இரண்டாகப் பிரிந்ததுபோல்.

**2. அமைப்புவழி மொழிக் குடும்பம்**

ஒரு மொழியானது எந்தவித மாற்றமும் இன்றி அதேபோல் தொடர்ந்து வழக்கில் இருப்பது அமைப்புவழி மொழிக்குடும்பம் எனப்படும். (எ.கா)ஆங்கிலம்.

**இந்தியாவில் உள்ள மொழிக்குடும்பங்கள்**

உலகிலேயே இந்தியாவில்தான் அதிக மொழிகள் பேசும் நாடாகவும், பல்வேறு இனக்குழுக்கள் நிறைந்த நாடாகவும் திகழ்கின்றது. இந்திய நாட்டில் 1652-க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. பேசுவோரின் எண்ணிக்கையினை அடிப்படையாக கொண்டு இந்திய மொழிக் குடும்பங்களைக் ஆறு வகையாகப் பிரிக்கலாம். அவை,

1. ஆரியன் (அ) இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம்

2. திராவிட மொழிக் குடும்பம்

3. ஆஸ்ட்ரோ-ஆசிய (அ) முண்டா (அ) கோல் மொழிக் குடும்பம்

4. திபத்தோ-சீன மொழிக் குடும்பம்

5. அந்தமான்-நிகோபார் மொழிக் குடும்பம்

6. நகலி மொழிக் குடும்பம்

இந்த ஆறு மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் இந்தியாவில் தற்போது வழக்கில் உள்ளன. எனினும் முதலில் கூறப்பட்ட நான்கு (1 முதல் 4) மொழிக் குடும்பங்களையே இந்தியாவின் மொழிக் குடும்பங்கள் என்று கூறுகின்றனர்.

. **ஈராஸ் பாதிரியார்**

இவர் கீழ்வருமாறு தமிழ் என்ற வார்த்தை மாற்றமடைந்தது என்று கூறுகிறார்.

தமிழ் -தமிலா -தமிழா -டிரமிழா -ட்ரமிழா –த்ராவிடா- திராவிடா

**திராவிட மொழிகளின் வகைகள் (இலக்கியத்தின் அடிப்படையில்)**

எழுத்தின் வடிவம் மற்றும் இலக்கிய நடையை பொறுத்து திராவிட மொழிகளை கீழ்காணும் இரண்டு வகையாக **டாக்டர்.கால்டுவெல்** பிரித்தார்.

1. திருந்திய திராவிட மொழிகள்

2 திருந்தாத திராவிட மொழிகள்

**திராவிட மொழிகளின் வகைகள் (பிரிவுகள்) (நில அடிப்படையில்)**

திராவிட மொழிகள் மொத்தம் 28 (எருகளா, தங்கா, குரும்பா, சோளிகா ஆகிய 4 மொழிகளையும் சேர்த்து). இம்மொழிகளை பேசும் மக்கள் வசிக்கும் நிலப்பகுதிகளின் அடிப்படையில் 3 வகைகளாக பிரிக்கப்படுகிறது.

**1. தென் திராவிட மொழிகள்**

தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொற்றகொரகா, துளுவம், குடியா ஆகிய 10 மொழிகள் தென் திராவிட மொழிகள் எனப்படும்.

**2. நடுத் திராவிட மொழிகள்**

தெலுங்கு, கூயி,கூவி, கோண்டா, கோலமி, நாய்கி, பெங்கூ, முன்டா, பர்ஜி, கதபா, கோண்டி, கோயா ஆகிய 12 மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனப்படும்.

**3.வட திராவிட மொழிகள்**

குரூக், மால்தோ, பிராகுய் ஆகிய 3 மொழிகள் வட திராவிட மொழிகள் எனப்படும்.

**கீழ்காணும் 6 மொழிகளும் இலக்கியம் பெற்ற திராவிட மொழிகளாகும்**.

1. தமிழ் 2. தெலுங்கு 3. கன்னடம் 4. மலையாளம் 5. துளு 6. குடகு

திராவிட மொழிகளிலேயே தமிழ்மொழி மட்டும்தான் பிறமொழிக் கலப்பு இன்றியும், இலக்கிய வளம் மிகுந்தும் இருக்கின்றது. மலையாள மொழி தமிழுடன் நெருங்கியத் தொடர்புடையது. தமிழின் கிளை மொழிதான் மலையாளம் என்னும் அளவிற்கு ஒற்றுமைக் கூறுகள் மலையாளத்தில் உள்ளன.

## தமிழ் ஒரு செம்மொழி

**செம்மொழி** - வரையறை

செம்மொழி என்பது ஒரு மொழியின் இலக்கியப் பழமை அடிப்படையிலும், பிற பண்புத் தகுதிகளின் அடிப்படையிலும் தேர்வு செய்யப்படும் ஒரு மொழியாகும்.

i) அந்த மொழியின் இலக்கியப் படைப்புகள் வளம் மிகுந்ததாகவும், பழமையானதாகவும் இருக்க வேண்டும்.

ii) அதன் தோற்றம் மற்ற மொழிகளைச் சாராதிருத்தலும் வேண்டும்.

ii) பிற மொழிச் சொல் கலப்பு இல்லாமலும் இருக்க வேண்டும்.

## செம்மொழி தகுதிக்கான தேவைகள்

ஒரு மொழி செம்மொழி என்ற தகுதியை அடைவதற்கு அம்மொழியில் இடம் பெற்றிருக்கும் இரண்டு முக்கியமான சிறப்புகள் தேவையாய் இருக்கின்றன.

1. இலக்கியப் படைப்புகள்
2. கலைப் படைப்புகள்

இந்த இரு படைப்புகளைக் கொண்டே ஒரு மொழி செம்மொழியாக தேர்வு செய்யப்படுகின்றன.

### 1. இலக்கியப் படைப்புகள்

ஒரு மொழியின் சிறப்பிற்கு முதல் அடையாளமாகத் திகழ்வது அம்மொழியின் பழமை வாய்ந்த இலக்கியங்கள்தான். இதில் முக்கியமாக கருத்துச் செறிவுகளும் இருக்க வேண்டும்.

### 2. கலைப் படைப்புகள்

ஒரு மொழியின் பழமைக்கு இலக்கியம் மட்டுமல்லாமல் கலைப் படைப்புகளும் அந்த மொழியின் பழமையை உணர்த்தும் அடுத்த சான்றாக இருக்க வேண்டும். கலைப் படைப்புகள் என்பது கட்டடக் கலை, சிற்பக் கலை போன்ற பழமை வாய்ந்த கலைச் சான்றுகளாக இருக்க வேண்டும்

**மொழியை செம்மொழியாக தகுதி உயர்த்த தேவையான விதிகள்**

ஒரு மொழியை செம்மொழியாக தகுதி உயர்த்த மொழியியல் அடிப்படையில் சில விதிகளை வகுத்துள்ளனர். அந்த விதிகள் அனைத்தும் தமிழுக்குப் பொருந்தி வருவதால் செம்மொழி எனும் நிலைக்கு தமிழ் உயர்ந்து விட்டது.

செம்மொழிக்கான தகுதிகள் 11 விதிகளாக வழங்குகின்றனர்.

1. தொன்மை

2. தனித் தன்மை

3. பொதுமைப் பண்பு

4. நடுவு நிலைமை

5. தாய்மைப் பண்பு

6. பண்பாட்டுக் கலை அறிவு பட்டறிவு வெளிப்பாடு

7. பிற மொழித் தாக்கமில்லா தன்மை

8. இலக்கிய வளம்

9. உயர் சிந்தனை

10. கலை இலக்கியத் தனித் தன்மை

11. மொழிக் கோட்பாடு

**தமிழ் செவ்விலக்கியங்கள்**

செவ்வியல் – பொருள் - செம்மை + இயல் = செவ்வியல்

செவ்வியல் என்னும் சொல் ஆங்கிலத்தில் classical என்னும் வார்த்தையாகும். இந்த சொல்லிற்கு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சிறப்புடைய, மேம்பாடுடைய, முதல் தரமான, தூய்மை வாய்ந்த, முதலான சொற்பொருள் விளக்கங்கள் காணப்படுகின்றன. செவ்விலக்கியங்களின் சிறப்பியல்புகள் செவ்வியல் எனப்படுகின்றன

**செவ்வியல் நூல்கள்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய சங்க இலக்கியங்கள், சங்க மருவிய கால இலக்கியங்கள், காப்பியங்கள் என 41 நூல்களை இனங்கண்டு 'செவ்வியல் நூல்கள் எனப் பட்டியலிட்டுள்ளது.

1. தொல்காப்பியம்

**எட்டுத்தொகை நூல்கள்**

2. நற்றிணை
3. குறுந்தொகை
4. ஐங்குறுநூறு
5. பதிற்றுப்பத்து
6. பரிபாடல்
7. கலித்தொகை
8. அகநானூறு
9. புறநானூறு

**பத்துப்பாட்டு**

10. திருமுருகாற்றுப்படை
11. பொருநராற்றுப்படை
12. சிறுபாணாற்றுப்படை
13. பெரும்பாணாற்றுப்படை
14. முல்லைப்பாட்டு
15. மதுரைக்காஞ்சி
16. நெடுநல்வாடை
17. குறிஞ்சிப்பாட்டு
18. பட்டினப்பாலை
19. மலைபடுகடாம்

**பதினென்கீழ்க்கணக்கு நூல்கள்**

20. நாலடியார்
21. நான்மணிக்கடிகை
22. இன்னா நாற்பது

23. இனியவை நாற்பது

24. கார் நாற்பது

25. களவழி நாற்பது

26. ஐந்தினை ஐம்பது

27. திணைமொழி ஐம்பது

28. ஐந்திணை எழுபது

29. திணைமாலை நூற்றைம்பது

30. பழமொழி

31. சிறுபஞ்சமூலம்

32. திருக்குறள்

33. திரிகடுகம்

34. ஆசாரக்கோவை

35. முதுமொழிக்காஞ்சி

36. ஏலாதி

37. கைந்நிலை

**காப்பியங்கள்**

38. சிலப்பதிகாரம்

39. மணிமேகலை

40. முத்தொள்ளாயிரம்

41. இறையனார் களவியல் உரை

**சங்க இலக்கியத்தில் பகிர்தல் அறம்**

சங்ககாலத்தில் தமிழர் பொருள் ஈட்டி அறம்செய்து இன்புற்றனர். இவ்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர். உலகே பரிசாகக் கிடைத்தாலும், பழிதரும் செயல்களை செய்ய மறுத்தனர். மனிதன் தனியானவன் அல்லன், அவன் சமூகக் கடலின் ஒரு துளி. அவனுக்குள்ளே சமூகம் - சமூகத்துக்குள்ளே அவன். ஒரு மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது.

இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.

**அறம் - பொருள்**

அறம் என்ற சொல்லுக்கு கடமை, கற்பு, புண்ணியம், தர்மம், கண்ணியம் எனும் பலபொருள் உண்டு.

**அறம் - வரையறை**

ஒரு மனிதன், தனக்குத் தானே தலைவனாகுவதற்கு உருவாக்கிய நெறிமுறைகள், கொள்கைகள் ஆகியவற்றின் தொகுப்பே 'அறம்' எனப்படுகிறது. நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டமாக அறம் விளங்குகிறது.

**1. அறத்தின் முதற்கட்டம்**

அறம் என்பதை சங்ககால மக்கள் ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ, சமயமாகவோ கருதாமல் வாழ்க்கை நெறியாகவே கருதிப் போற்றினார்கள். அறம் ஒழுக்க நெறிக்குரிய விதிமுறைகளின் தொகுப்பாகவே கருதப்பட்டது.

**2. அறத்தின் இரண்டாவது கட்டம்**

சமண - பௌத்தத்தையும் உள்ளடக்கிய மரபே இங்கு வடமரபு எனப்படுகிறது. வடமரபின் செல்வாக்கு முதலில் நகரங்களிலும், அரச அவைகளிலும், உயர்குடி மக்கள் இடத்திலும் பரவியது. இதற்கு காரணம் வைதீக சமயத்தினர் தொடர்ச்சியாக குடும்பம் குடும்பமாக வடக்கிலிருந்து வந்து தமிழக மையப்பகுதிகளில் குடியேறியதேயாகும். இதனால் சங்ககால தமிழர்கள் கடைபிடித்த அறத்தன்மை குறைந்தது.

**அற ஒழுக்கம்**

தூய்மையான பழக்க வழக்கங்கள், எண்ணம், செயல், பொய் சொல்லாதிருத்தல், திருடாதிருத்தல், பிறருக்கு தீங்கு செய்யாதிருத்தல், தீய சொற்களை சொல்லாதிருத்தல், பிறரிடத்தில் அன்பும், அருளும் கொண்டிருத்தல் இவை அனைத்தையும் நம்முடைய இலக்கியங்கள் நம்மை செய்யப் பழக்குவதே அற ஒழுக்கம் என்று கூறலாம்.

**அறநெறிக்கால அறம் மற்றும் சங்ககால அறம்**

சங்ககாலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை | அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்ககால அறங்கள் இயல்பானவை. சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன. சங்க அறங்கள் சமயங்களிடமிருந்து இரவல் பெறப்பட்டவை அல்ல.

**சங்ககாலத்தின் பல்வேறு செயல்களில் பகிர்தல் அறம்**

சங்ககால இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள பல்வேறு செயல்களில் கடைபிடிக்க வேண்டிய அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு கீழ்கண்ட சான்றுகள் முக்கியமானவை.

**1. வணிக நோக்கத்தில் அறம்**

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது என்று சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது என்று கீழ்காணும் புறநானூற்று வரிகள் கூறுகிறது. "**இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" – புறம்.** அதாவது, நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

**2. அரசியலில் அறம்**

சங்க இலக்கியத்தில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன. **"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்".** நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப் பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்கப்பட்டது என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார்.

**3.அமைச்சரின் அறம்**

அரசன் அறநெறியில் ஆட்சி செய்வதற்கு, அமைச்சரும் உதவி என்று சங்க இலக்கியம் கூறுகிறது. '**நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை**"- மதுரைக்காஞ்சி

**4.போர் அறம்**

தமிழர்கள் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்து போர் செய்யாமை, பசு, பார்ப்பணர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோர்க்கு தீங்கு வராமல் போர் புரிதல், தம்மைவிட வளமை குறைந்தாரோடு போர் செய்யாமல் இருப்பது போன்றவைகளை கடைப்பிடிப்பதே போர் அறம் ஆகும். "**ஏறியார் எறிதல் யாவணது எறிந்தோர் எதிர்சென்று எறிதலும் செல்லான் - புறம்.**

5. **கொடை அறம்**

வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது. ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி. அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும், ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும், நாள்தோறும் கொடுத்தலும், கொடைப் பெருமைகளாக சங்க இலக்கியத்தில் சொல்லப்படுகின்றன

**"செல்வத்துப் பயனே ஈதல்**

**துய்ப்பேம் எனினே தப்புந பலவே" - (புறம். 1897-8)**

'வழங்குவதற்குப் பொருள் உள்ளதா? என்று கூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை' என்று நக்கீரர் பாராட்டுகிறார். 'வள்ளலின் பொருள் இரவலனின் பொருள் வள்ளலின் வறுமை இரவலலின் வறுமை' என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார். **"உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார்." ஔவையார்.**

தன்னை நாடி வந்த பரிசிலன் பொருள் பெறாமல் திரும்புவது. தான் நாட்டை இழந்த துன்பத்தைவிடப் பெருந்துன்பம் எனக் குமணன் வருந்தினான்' என்று பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். விட்டுவிடுதல் 'இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை மேலானது' என்று கலித்தொகையில், கூறப்பட்டுள்ளது.

6.**உதவி செய்வதில் அறம்**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எறு என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம்.

**"பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன்அறிதல் சான்றவர்க்கு எல்லாம் கடன்" (கலித்தொகை 139)**

பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல்' என்கிறார் நல்லந்துவனார். 'உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார் நல்வேட்டனார். உறவினர் கெட,வாழ்பவனின் பொலிவு அழியும்' என்கிறார் பெருங்கடுங்கோ. உடல் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவுவது போலச் சமூக உறுப்புக்களான மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ள வேண்டும். பிறருக்கு உதவாமல், மனிதத்திற்குக் கொடும்பாவி கட்டுவது சங்க காலத்தில் இல்லை.

**நற்றினையில் அறம் - 'தலைவனின் குறையை, தலைவி தோழிக்கு அறத்தோடு கூறுவது'**

தலைவியின் குறையை தீர்ப்பதற்கு தோழி தலைவியிடம் "நின் மேனி வாடிற்று; நெற்றி ஒளி குன்றிற்று. ஆனால் அவற்றின் காரணத்தை நீ உரைக்கவில்லை. ஆயினும் நான் அறிவேன்" என்கிறாள் தோழி. அதற்கு தலைவி அதற்காக நீ வருத்தப்படாதே தினைப்புனத்தில் தலைவன் என் முதுகை அணைத்தான் அதனால் அவ்வாறு இருக்கிறேன் என்று தோழியிடம் நயமாகக் கூறி தன் ஒழுக்கம் குன்றாதவாறு அறத்தோடு நிற்கின்றாள்.

**7. காதலின் அறம்**

ஒரு ஆணும் பெண்ணும் கருத்தொருமித்துக் காதல் கொள்வது அறமாக இருந்தது. தலைவியின் காதல் தோழிக்குத் தெரிய வந்து, பின் செவிலித் தாய் மூலம் நற்றாய்க்குத் தெரியவந்து, நற்றாய் மூலம் தமையன். தந்தைக்கு தெரியவரும். அப்படியில்லாமல் தலைவி நேரடியாகத் தன் காதலை வீட்டாரிடம் சொல்வது சிறந்த அறம் அல்ல என்பதை சங்க இலக்கியங்கள் சொல்கின்றன.

**அறத்தின் நன்மை**

ஒருவன் அறம் செய்வதால் கீழ்காணும் நன்மைகள் கிடைக்கும் என சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

1. அறமானது அறிவு வரும்போது காக்கும் அழியாத துணையாகும்.
2. அறம் மனிதனின் ஆயுள் காலத்தை கூட்டும்.
3. அறத்தினைப் ப3. பின்பற்றினால் மதிப்பும் செல்வமும் வளரும்.
4. அறம் நல்வழியில் செல்வதற்கு துணை நிற்கின்றது.
5. அறத்தினால் வாழ்வுக்கு நன்மை விளையும்.
6. மனிதனுடைய மலர்ச்சிக்கு பயனை தரும் ஒழுக்கம், மிகவும் பயனுடையதாகும்.

**திருக்குறளில் மேலாண்மைக் கருத்துக்கள் மேலாண்மை**

ஒரு குறிக்கோளை நோக்கிப் பலரை உழைக்கும் ஆற்ற உடையவர்களாக ஆக்குவதுதான் மேலாண்மை என்பர்.

(அல்லது) ஆளுமையின் மேம்பட்ட கூறுகள் ஒன்றிணைந்து ஆகின என்றும் கூறலாம். மேலாண்மை

**மேலாண்மையில் அடங்கும் பணிகள்**

1. திட்டமிடுதல் (Planning)

2 கட்டமைத்தல் (Organizing)

3. பணியமர்த்தல் (Staffing)

4. நெறிப்படுத்துதல் (அ) இயக்குதல் (Directing)

5. கட்டுப்படுத்துதல் (Controlling)

ஆகிய ஐந்தும் மேலாண்மையில் அடங்கும் பணிகள் ஆகும். இதன் அடிப்படையிலேயே திருக்குறளின் மேலாண்மை கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

1. **திட்டமிடுதல்** (Planning)

திட்டமிடுதல் என்பது, என்ன செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? என்பவற்றை முன்கூட்டியே தீர்மானிக்கும் செயல்.

ஒரு கிளை அலுவலகம் ஆரம்பிக்க முற்படும்போது, ஒரு மேலாளர் தன் பணியாளர்களுடன் சிறப்பாக ஆலோசித்து திட்டமிட்டு துவங்கினால் அந்நிறுவனம் மிகச் சிறப்பாக முன்னேறும். இல்லையேல் யார் வந்து துணை செய்தாலும் அந்த நிறுவனத்தை உயர்த்த இயலாது.

ஒரு செயலை செய்யத் தொடங்கும் முன் அதனை முடிக்கும் வழியை திட்டமிட்டு பிறகு தொடங்க வேண்டும். தொடங்கிய பின் பிறகு திட்டமிட்டுக் கொள்ளலாம் என்று சொல்வது தவறு என்று குறள் சொல்கிறது.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**

**எண்ணுவம் என்பது இழுக்கு (குறள்.467)**

ஒரு செயலை திறமையாக செய்வதற்கு அறிவும், அனுபவமும், ஆற்றலும் தேவை. இவை அனைத்தும் ஒருவரிடத்தில் இருக்க வாய்ப்பில்லை. அதனால் ஒரு செயலை தொடங்கும் முன் தேவையான துறைகளில் அறிவு, அனுபவம், பயிற்சி, தேர்ச்சி ஆகியவற்றில் சிறந்தவர்களோடு கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**2.கட்டமைத்தல் (Organizing)**

ஒரு குறிக்கோளை திட்டமிட்ட பிறகு அதை அடைவதற்குப் பல செயல்களை செய்ய வேண்டியதாக இருக்கும். அந்த செயல்களை முதலில் வரிசைப்படுத்த வேண்டும்.பிறகு ஒன்றன்பின் ஒன்றாக செய்ய வேண்டும். சில செயல்களை ஒரே சமயத்தில் செய்யலாம்.

**உதாரணம்**

ஒரு வீடு கட்டும்பொழுது, அடித்தளம் அமைத்த பிறகுதான் மேல்தளம் கட்டமுடியும். ஆனால், மேல்தளம் முடிந்தபிறகு, வீட்டிற்குள்ளே செய்ய வேண்டிய செயல்களையும், வெளியே செய்ய வேண்டிய செயல்களையு ஒரே சமயத்தில் செய்யலாம்.

**3. பணியமர்த்தல் (Staffing)**

பணியமர்த்தல் என்பது பணிகளைச் செய்வதற்கு ஆட்களை தேர்ந்தெடுப்பர்த்தாடு நிறுத்திவிடாமல், அவர்களுடைய வளர்க்க 1 அவர்களைப் பணிகளில் தக்கவைத்தல் ஆகியவற்றையும் குறிக்கும். ஒறு மேலாளர் பணியமர்த்தல் என்ற பணியை சரியாகச் செய்தால், சரியான | ஆட்கள் சரியான பதவிகளில், சரியான நேரத்தில், தங்கள் பணிகை சரியாகச் செய்துமுடிக்க முடியும்.

**சான்று - 1**

ஒரு செயலின் தன்மை இது, செய்யும் வழிகள் இவை, இன இவனால் செய்ய முடியும் என்பதை ஆராய்ந்து, அதற்குரியவனி அச்செயலை ஒப்படைக்க வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறா

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து**

**அதனை அவன்கண் விடல்" (குறள் 517)**

மேலாண்மையில் இருப்பவர்கள், தமக்கு கீழே பணிபுரிபவர்களை தேர்ந்தெடுக்கும்பொழுது 4 வகைகளில் ஆராய்ந்து தேர்வு செய்ய வேண்டும்.

i) அறநெறிகளைப் பின்பற்றுபவர்களா?

ii) பொருள்மீது மிகுந்த பற்றுடையவர்களா?

iii) இன்பத்தில் மிகுந்த ஆசை உடையவர்களா?

iv) தன் உயிருக்கு அஞ்சுபவர்களா?

**"அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்**

**திறம் தெரிந்து தேறப்படும்" (குறள் 501)**

**4. இயக்குதல் (அ) நெறிப்படுத்துதல்**

இயக்குதல் என்பது ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்காக, ஒரு மேலாளர் தங்களிடம் பணிபுரிபவர்களிடம் நன்கு வேலை வாங்க வேண்டும் என்றால், கீழ்காணும் பணிகளை செய்ய வேண்டும்.

i) முறையாக பணிகளை தொழிலாளர்களிடம் ஒப்படைத்தல் (Delegation)

ii) தொழிலாளிகளுக்குத் தேவையான பயிற்சி அளித்தல் (Training)

iii) தொழிலாளர்களை ஊக்குவித்தல் (Motivating)

iv)தொழிலாளர்களின் பணிகளையும், பணியாற்றும் திறமையையும் மேற்பார்வை செய்தல் (Supervising)

**"செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு**

**எய்த உணர்ந்து செயல்" (குறள். 516)**

**5. கட்டுப்படுத்துதல் (Controlling)**

ஒரு பணி திட்டமிட்டபடி சரியான காலத்தில் நடைபெறுகிறது. திட்டமிடும்பொழுது நிதி ஒதுக்கியபடி செலவழிக்கப்படுகிறதா? என்று ஆராய்வதும், திட்டப்படி நிகழ்வுகள் நடைபெறாவிட்டால் அவற்றை திட்டத்திற்கேற்ப சரிசெய்வதும், திட்டங்களை மாற்றி அமைப்பது கட்டுப்படுத்துதல் என்ற கட்டத்தில் நடைபெறும் பணியாகும்.

ஒரு மன்னன் தன் நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தையும் மற்றும் பகைவர்களின் செயல்களையும் முன்னெச்சரிக்கையாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். இவ்வாறு நாட்டு நிகழ்வுகளையும் பகைவர்களின் செயல்களையும் தெரிந்துகொள்வதற்கு மன்னன் எவ்வாறு ஒற்றர்களைப் பயன்படுத்த வேண்டும் என்று வள்ளுவர் ஒற்றாடல் என்ற அதிகாரத்தில் கூறுகிறார்.

**எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்**

**வல்லறிதல் வேந்தன் தொழில்" (குறன்.582)**

இதைப்போல் மேலாளர் தன்னிடம் பணிபுரிபவர்களிடமிருந்தும். தன்னுடைய நுண்ணறிவாலும், கண்காணித்தலாலும், திட்டத்திற்கேற்ப பணிகள் நடைபெறுகின்றனவா என்பதை அறிந்து கொள்ளமுடியும்.

**ஐம்பெருங் காப்பியங்கள்**

முற்காலத்தில்தமிழில்எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி என்னும் காப்பியங்கள் ஒருங்கே **ஐம்பெருங் காப்பியங்கள்** என அறியப்படுகின்றன. இவற்றுள் **சிலப்பதிகாரமும் மணிமேகலையும்** சங்கம் மருவிய காலத்திலேயே தோன்றியவை. ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவையாகும்.

தமிழில் தோன்றியுள்ள காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெரியபுராணம் மட்டுமே தமிழ்நாட்டுக் கதைகளை மூலக் கருவாகக் கொண்டு

இயற்றப்பட்டுள்ளன. மற்றவைகள் சமசுகிருதம், பிராகிருதம் ஆகிய மொழிகளின் தழுவல்களாகவோ அல்லது தமிழாக்கங்களாகவோ உள்ளன.

**அணிகலன்கள்**

இந்த நூலின் பெயர்கள் அணிகலன்களின் பெயரால் அமைந்துள்ளன.

1. **சிலப்பதிகாரம்** - சிலம்பு என்பது மகளிர் அணியும் காலணி - கண்ணகியின் சிலம்பால் அதிகரித்த வரலாறு
2. **மணிமேகலை** - ஆடை நழுவாமலிருக்க மகளிர் இடுப்பில் அணியும் அணி - இத்தொடர் அன்மொழித்தொகையாக அதனை அணிந்த பெண்ணை உணர்த்தும். இந்தப் பெயர் இடப்பட்ட பெண்ணின் வரலாறு.
3. **குண்டலகேசி** - குண்டலம் என்பது மகளிர் அணியும் காதுவளையம். - குண்டலமும் கூந்தல் அழகும் கொண்டவள் குண்டலகேசி - குண்டலகேசி என்பவளின் வரலாற்றை கூறும் நூல்.
4. **வளையாபதி** - வளையல் அணிந்த பெண் வளையாபதி - வளையாபதியின் வரலாறு கூறும் நூல்.
5. **சீவகசிந்தாமணி** - சிந்தாமணி என்பது அரசன் முடியில் (கிரீடத்தில்) பதிக்கப்படும் மணிக்கல். - சீவகனை மணிமுடியாக்கி எழுதப்பட்ட வரலாறு.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் சேர நாட்டவரான இளங்கோ அடிகளால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டது. சோழ நாட்டின் தலை நகரமாக விளங்கிய பூம்புகாரைச் சேர்ந்த கோவலன் என்னும் வணிகன் மற்றும், அவனது மனைவியாகிய கண்ணகி ஆகியோரது கதையைக் கூறுவதே இக்காப்பியமாகும். கோவலனுடன் தொடர்பு கொள்கின்ற நடன மாதான மாதவி, இன்னொரு முக்கிய கதாபாத்திரம் ஆகும்.

*அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்,*
*உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,*
*ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்,*
*சூழ் வினைச் சிலம்பு காரணமாக,*
*சிலப்பதிகாரம் என்னும் பெயரால்*
*நாட்டுதும் யாம் ஓர் பாட்டு உடைச் செய்யுள்*

என்கிற பதிக வரிகளில், முழுக் காப்பியத்தின் முக்கியச் செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**மணிமேகலை**

மணிமேகலை, ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. இதனை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார்.மணிமேகலையின் கதைக்களன், கதை மாந்தர், கதை நடக்கும் காலம் ஆகியவை சிலப்பதிகாரத்தை ஒத்து இருப்பதால், மணிமேகலையும் சிலப்பதிகாரமும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இக்காப்பியத்தின் நாயகி மணிமேகலை, சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியின் மகளாவாள். கோவலன் மற்றும்

கண்ணகியின் சோக மறைவிற்குப் பிறகு, மாதவி பொது வாழ்விலிருந்தும் கலைப் பணியிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டாள். தான் கடந்த காலத்தில் வாழ்ந்த முறையையும் நினைவுகளையும் மாற்ற நினைத்த மாதவி, அவற்றின் சுவடுகளும், உலக சுகங்களும் இன்றி மணிமேகலையை வளர்க்க எண்ணி, புத்த சமய மடம் ஒன்றில், அவளைச் சேர்த்து வளர்த்தாள்.

அவள் வாழ்ந்து வந்த நாட்டு இளவரசன், மணிமேகலையின் மேல் காதல் கொள்ளவே, அவனிடமிருந்து விடுபட்டு மணிபல்லவத் தீவுக்குச் சென்று புத்த சமயத் துறவியானாள். அங்கு அவளுக்கு, பசிப்பிணி போக்கும் 'அட்சய பாத்திரம்' கிடைத்தது. அன்று முதல் மக்களின் பசியைப் போக்குவதையே தன் கடமையாகக் கொண்டு வாழ்ந்த மணிமேகலை, அவள் மறைவிற்கு பின் தெய்வமாகப் போற்றப்பட்டாள்.

இக் காப்பியத்தில் இருந்து சில வரிகள்:

*அறமெனப் படுவது யாதெனக்கேட்பின்*
*மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்*
*உண்டியும் உடையும் உறையுளும் அல்லது*
*கண்ட தில்லை.*

**குண்டலகேசி**

தமிழின் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற குண்டலகேசி என்னும் நூல், ஒரு பௌத்தம் சார்ந்த நூலாகும். பல்வேறு தமிழ் நூல்களுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் தங்கள் உரைகளிலே குண்டலகேசிப் பாடல்களை எடுத்தாண்டுள்ளார்கள். இந்நூலிலிருந்து கிடைத்துள்ள பாடல்கள் அனைத்தும் வேறு நூல்களிலிருந்து கிடைத்தவையே. பத்தொன்பது முழுமையான பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. தன்னைக் கொல்ல முயன்ற கணவனைக் கொன்றுவிட்டு, பௌத்த துறவியாகி, அச்சமயத்தின் பெருமையைப் பரப்புவதில் ஈடுபட்ட குண்டலகேசி என்னும் வணிகர் குலப் பெண்ணொருத்தியின் கதையே, இக்காப்பியத்தின் கருப்பொருளாகும்.ஆசிரியர் நாத குத்தனார்

**வளையாபதி**

தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் என அழைக்கப்படும் ஐந்து நூல்களுள் ஒன்றாக விளங்குவது வளையாபதி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இது, சமண சமயம் சார்ந்த ஒரு நூல். இதனை எழுதியவர் யாரென்பதும் அறியப்படவில்லை. இந்நூல் தற்காலத்தில் முழுமையாகக் கிடைக்கவில்லை. இந்நூலுக்குரிய 72 பாடல்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டுப் புதிப்பிக்கப் பட்டுள்ளன. இக்காப்பியத்தின் கதைப் பொருள் பற்றி ஊகங்கள் நிலவினாலும், கிடைத்துள்ள பாடல்களைக் கொண்டு இக்காப்பியத்தின் கதை இன்னதுதான் எனக் கூறமுடியாதுள்ளது. கிடைத்துள்ள பாடல்களைக் கொண்டு, இக்காப்பியம் இலக்கியச் சுவையும் பொருட் செறிவும் கொண்ட பாடல்களால் அமைந்தது என்பதைக் கூறமுடியும். திருக்குறள், குறுந்தொகை போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து, கருத்துக்களை மட்டுமன்றிச் சொற்றொடர்களையும் கூட வளையாபதி ஆசிரியர் எடுத்துப் பயன்படுத்தியுள்ளமை, கிடைக்கும் பாடல்களை அவதானிக்கும் போது தெரிகின்றது.

**சீவக சிந்தாமணி**

திருத்தக்க தேவர் என்ற சமணப் புலவர் இயற்றியுள்ள 'சீவக சிந்தாமணி', தமிழ் இலக்கியத்திலுள்ள மகா காப்பியங்களுள் - ஐம்பெரும் காப்பியங்களுள் தலை சிறந்ததாக மதிக்கப்படுகிறது. இது வாதீபசிம்பனின், 'சத்திர சூடாமணி'யைப் பின்பற்றியது; அந்த மூல நூலோ, கி.பி. 898 இல் குணபத்திரன் எழுதிய 'உத்தரபுராண'த்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே, சீவக சிந்தாமணி பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருக்க வேண்டும். சிந்தாமணியைத் தந்த ஆசிரியர், சோழ வம்சத்தில் பிறந்தவர் என்று நச்சினார்க்கினியர் சொல்கிறார். சமண புராணங்களில் தொன்று தொட்டு நிலவிவரும் கதைகளை சனரஞ்சகமாகவும், இனக்கவர்ச்சியுடனும், கற்பனையுடனும் தமிழில் எழுத, திருத்தக்க தேவர் விரும்பினார்; அம்முயற்சியில் அவர் வெற்றிகண்டார் என்பதும் உண்மை.

நமக்கு இப்போது கிடைத்திருக்கும் **சீவக சிந்தாமணி** செய்யுட்கள் ஒவ்வொன்றும், நான்கு வரிகள் கொண்ட 3,141 செய்யுட்கள் உடையன. ஆசிரியர், 2,700 செய்யுட்களையே செய்தார் என்று அறியப்படுகிறது. ஏனைய 445 செய்யுட்களில், சில, அவருடைய குருவாலும், வேறு சில, வேறு யாரோ ஒருவராலும் எழுதப்பட்டவை. இரண்டு செய்யுட்களை, 'இவை குருவால் எழுதப்பட்டவை' என்று உரையாசிரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஏனைய செய்யுட்களை யார் எழுதியது என்ற விவரம் இல்லை. பெரிய புராணம் எழுதப்பட, சீவக சிந்தாமணி நேரடியாகக் காரணமாக இல்லை; ஆனாலும், சீவக சிந்தாமணி, அதற்கு தூண்டுகோலாக இருந்திருக்கும் என்று அறியப்படுகிறது.

## ஐஞ்சிறு காப்பியங்கள்

பழந்தமிழ் இலக்கியங்களின் தொகுப்பில் ஐம்பெருங் காப்பியங்கள், **ஐஞ்சிறு காப்பியங்கள்** என்கிற முக்கியப் பிரிவும் உண்டு. அறம், பொருள், இன்பம் , வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்களில் ஒன்றோ பலவோ குறைந்து காணப்படும் காப்பியங்கள் ‘சிறுகாப்பியம்’ எனப்பட்டன.

**உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி** ஆகிய ஐந்தும் ஐஞ்சிறு காப்பியங்கள் என்கிற பிரிவின் கீழ் வருவன.

### *உதயணகுமார காவியம்*

வத்தவ நாட்டரசன் சதானிகனுக்கும் அவன் மனைவி மிருகாவதிக்கும் பிறந்த உதயணனின் கதையைக் கூறுவது இக்காவியம். 6 காண்டங்களில், 367 (தமிழண்ணல்) விருத்தப்பாக்களால் ஆன இந்நூல் கந்தியார் (சமணப் பெண்துறவி) ஒருவரால் இயற்றப்பட்டது.

இந்நூலில் உதயணன் நான்கு மனைவியரை மணந்து இறுதியில் துறவு நிலையை மேற்கொண்டதை அறிய முடிகிறது. கதையமைப்பு சிக்கலானதாகவும், இரு கதைத் தலைவர்களைக் கொண்டும் உள்ளது. பெயர் தான் காவியமே தவிர காவிய இயல்போ ஏற்றமோ நடை நலமோ சிறிதும் இல்லாதது . பெருங்கதை என்கிற நூலின் சுருக்கம் என்று கூட இதனைச் சொல்லலாம். இதன் காலம் கி.பி.15-ஆம் நூற்றாண்டு .

### நாககுமார காவியம்

இதன் ஆசிரியரும் ஒரு சமணப் பெண்துறவியே. பெயர் அறியக் கிடைக்கவில்லை. 5 சருக்கங்களில் 170 விருத்தப்பாக்களில் நாகபஞ்சமியின் கதையை உரைக்கும் சிறுகாப்பியமாகும் இது. **முழுக்க முழுக்க மணத்தையும் போகத்தையும் மட்டுமே பேசுகிறது**. 519 பெண்களைக் கதையின் நாயகன் மணக்கிறான். காவிய அமைதியோ கவி நயமோ எத்துணையும் இல்லாத சொத்தை நூல் இது என மது.ச.விமலானந்தம் குறிப்பிடுவார். காலம் கி.பி.16-ஆம் நூற்றாண்டு.

அழிந்து போன நூல் என்று கருதப்பட்ட இதனை சமண அறிஞர் **ஜீவபந்து ஸ்ரீபால்** அவர்களின் உதவியால் மு.சண்முகம் பிள்ளை பதிப்பித்துள்ளார்.

**யசோதர காவியம்**

5 சருக்கங்களில் 320 விருத்தப்பாக்களால் ஆன இதன் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. இராசமாபுரத்து அரசன் **மாரிதத்தன்** உயிர்களைப் பலியிட்டு வந்தான். அவனுக்கு உயிர்க்கொலை தீது என்று உணர்த்துவதற்காக எழுதப்பட்ட காப்பியம் இது. மறுபிறவிகள், சிற்றின்பத்தின் சிறுமை, பேரின்பத்தின் பெருமை, ஒழுக்கத்தின் உயர்வு போன்றவற்றை விவரிப்பது இந்நூல். இஃது ஒரு வடமொழி நூலின் தழுவல். எளிய நடையும் நயமான பாக்களும் உடைய நூல் இது. காலம் 13-ஆம் நூற்றாண்டு. இசை காமத்தைத் தூண்டும் என்பதையும், கர்மத்தின் விளைவுகளையும் எடுத்தியம்பும் இக்கதை உத்தரபுராணத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்றும் புட்பந்தர் கதையின் தமிழ் வடிவம் என்றும் இதன் ஆசிரியர் வெண்ணாவலுடையார் வேள் என்றும் கூறுவோர் உண்டு.

நூலின் எளிமைக்கு உதாரணமாக ஒரு பாடல்:

ஆக்குவ தேதெனில் அறத்தை ஆக்குக
போக்குவ தேதெனில் வெகுளி போக்குக
நோக்குவ தேதெனில் ஞானம் நோக்குக
காக்குவ தேதெனில் விரதம் காக்கவே

**சூளாமணி**

இதன் ஆசிரியர் வர்த்தமான தேவர் எனப்படும். **தோலாமொழித் தேவர்** 12 சருக்கங்களில் **2131** விருத்தப்பாக்களால் இயற்றப்பட்டது இந்நூல். ஆருகத மகாபுராணத்தைத் தழுவியது. பாகவதத்தில் வரும் ***பலராமன்***, ***கண்ணன்*** போன்று இக்காப்பியத்திலும் **திவிட்டன், விசயன்** என்னும் இரு வடநாட்டு வேந்தர்களின் வரலாறாக இந்நூல் உள்ளது. பாகவதமும் சூளாமணியும் கதை நிகழ்ச்சிகளில் ஓரளவு ஒத்து உள்ளன. **சிரவணபெல்கோலா** கல்வெட்டில் இந்நூல் பற்றிய குறிப்பு உள்ளது.

இந்நூலின் பாயிரம் தரும் குறிப்பின்படி, கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவனி சூளாமணி மாறவர்மன் என்னும் பாண்டியன் அவைக்களத்தில் அரங்கேறியது என்று தெரிகிறது. இது சிறுகாப்பிய வகையில் இருந்தாலும் பெருங்காப்பியப் பண்புகள் மிகுந்த நூலாகக் கருதப்படுகிறது.

**நீலகேசி**

நீலகேசித் திரட்டு என்றும் வழங்கப்படும் நீலகேசி காவியம், குண்டலகேசி என்னும் பௌத்த காவியத்துக்கு எதிரான சமண காப்பியமாகும். ஆசிரியர் பெயர் அறியக்

கிடைக்கவில்லை. 10 சருக்கங்களில் 894 பாக்களால் ஆனது. கி.பி.பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. காப்பியத் தலைவி நீலி. பழையனூரில் பேயுருவில் இருந்து **முனிச்சந்திரர்** என்கிற சமண முனிவரால் பேய்மை நீங்கி அவருக்கே மாணவியாகவும் சமணத் துறவியாகவும் ஆகி பௌத்தர்களை வாதில் வென்ற கதையே இக்காப்பியம்.

**பன்னிரு திருமுறைகள்**

**பன்னிரு திருமுறைகள்** என்பவை பல்லவர் காலத்திலும் அதன் பின்னரும் தோன்றிய சைவ சமய நூல்களின் தொகுப்பாகும். இவை திருமுறைகள் என்றும் அறியப்படுகின்றன. இவை மொத்தம் 12 திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

10 ஆம் நூற்றாண்டில் இராஜராஜ சோழனின் ஆட்சியின்போது, சிதம்பரம் கோயிலிலே கவனிப்பாரற்றுக் கிடந்த திருமுறைகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டு அழிந்தவை போக எஞ்சியவற்றை, நம்பியாண்டார் நம்பி என்பவர் திருமுறைகளாகத் தொகுத்தார்.

திருமுறைகள் பழந்தமிழ் இசையையொட்டிய பண்களுடன் பாடப்பட்டு வருகின்றன. சைவக் கோயில்களிலும், சைவர்கள் வீடுகளிலும், பாடசாலை முதலிய இடங்களிலும், சமய நிகழ்ச்சிகளின் போதும் திருமுறைகள் இன்றளவும் பாடப்பட்டு வருகின்றன.

**பன்னிரு திருமுறைகள்**

<table>
<tr><th>இல</th><th>திருமுறை</th><th>நூல்</th><th>ஆசிரியர்</th></tr>
<tr><td>1</td><td>முதலாம் திருமுறை</td><td rowspan="7">தேவாரம்</td><td rowspan="3">திருஞானசம்பந்தர்</td></tr>
<tr><td>2</td><td>இரண்டாம் திருமுறை</td></tr>
<tr><td>3</td><td>மூன்றாம் திருமுறை</td></tr>
<tr><td>4</td><td>நான்காம் திருமுறை</td><td rowspan="3">திருநாவுக்கரசர்</td></tr>
<tr><td>5</td><td>ஐந்தாம் திருமுறை</td></tr>
<tr><td>6</td><td>ஆறாம் திருமுறை</td></tr>
<tr><td>7</td><td>ஏழாம் திருமுறை</td><td>சுந்தரர்</td></tr>
<tr><td>8</td><td>எட்டாம் திருமுறை</td><td>திருவாசகம்<br>திருக்கோவையார்</td><td>மாணிக்கவாசகர்</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 9 | ஒன்பதாம் திருமுறை | திருவிசைப்பா | சேந்தனார்<br>கருவூர்த் தேவர்<br>பூந்துருத்தி நம்பிகாடநம்பி<br>கண்டராதித்தர்<br>வேணாட்டடிகள்<br>திருவாலியமுதனார்<br>புருடோத்தம நம்பி<br>சேதிராயர்<br>சேந்தனார் |
| 10 | பத்தாம் திருமுறை | திருமந்திரம் | திருமூலர் |
| 11 | பதினோராம் திருமுறை | | திரு ஆலவாய் உடையார்<br>காரைக்கால் அம்மையார்<br>சேரமான் பெருமான் நாயனார்<br>நக்கீர தேவ நாயனார்<br>கபிலதேவ நாயனார்<br>பரணதேவ நாயனார்<br>இளம்பெருமான் அடிகள்<br>அதிராவடிகள்<br>பட்டினத்தார்<br>நம்பியாண்டார் நம்பி |
| 12 | பன்னிரண்டாம் திருமுறை | பெரியபுராணம் | சேக்கிழார் பெருமான் |

**பன்னிரு ஆழ்வார்கள்**

வைணவ சமயத்தின் முதன்மைத் தெய்வமாகிய திருமாலைப் போற்றித் தமிழ்ச் செய்யுட்களால் பாடியவர்கள் **ஆழ்வார்கள்** ஆவர்.

தென்மொழியாம் தமிழ் மொழியில் வைணவ இலக்கியங்களை வளர்த்தவர்கள் பரம்பரையில், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (அல்லது) ஆழ்வார் அருளிச்செயல் என்னும் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள பாடல்களைப் பாடிய ஆழ்வார்கள் 12 பேர். அவர்களுள், இறைவனை இறைவனாகக் காணாது, இறைவனோடு உறவுமுறையில் வாழ்ந்ததால் ஆண்டாளையும், இறைவனைப் பாடாது ஆசானைப் பாடினார் என்பதால் மதுரகவியாழ்வாரையும் வேறு வரிசையில் தொகுத்து, ஆழ்வார்கள் பதின்மர் 10 பேர் மட்டுமே எனக் காட்டுவாரும் உண்டு. 5 முதல் 9 நூற்றாண்டுக் கால அளவில் வாழ்ந்தவர்கள்.

**சொற்பொருள்**

மரபுப்படி இறைவனின் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர்களை ஆழ்வார்கள் என்று சொற்பொருள் கூறுவர். ஆயினும் இந்தச் சொல் ஆள்வார் என்றும் வழங்கினதாகவும் பிறகு ஆழ்வார் என்று ஆனதாகவும் எஸ். பழனியப்பன் என்ற இந்தியவியல்/மொழியியல் ஆய்வாளர் பதிப்பித்துள்ளார்.[2]

**வரலாறு**

பொ.ஊ. 5-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வைணவம் புத்துயிர் பெறத் தொடங்கியது. திருமால் அழகிலும் குணத்திலும் ஆழ்ந்து நெஞ்சுருக ஆழ்வார்கள் பாடிய ~4000 பாடல்களையும் (பாசுரங்கள்) 10-ஆம் நூற்றாண்டில் நாதமுனி என்பவர் திவ்விய பிரபந்தம் (அ) அருளிச்செயல் என்னும் பெயரில் நூலாகத் தொகுத்தார்.

பன்னிரு ஆழ்வார்களின் நூல்களே வைணவப் பக்தி இலக்கியங்களாகும். நம்மாழ்வாரின் திருவாய்மொழி, தமிழ் வேதம்/ திராவிட வேதம் என்றும் போற்றப்படுகின்றது. **திருவாய்மொழிக்கு உருகாதார் ஒருவாய்மொழிக்கும் உருகார்** என்ற சிறப்பும் உண்டு.

**பன்னிரு ஆழ்வார்கள்**

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவி ஆழ்வார்
7. குலசேகர ஆழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. தொண்டரடிப்பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

## சிற்றிலக்கியம்

தமிழ் இலக்கியத்தில் **சிற்றிலக்கியம்** என்பது கீழ்காணும் அடிப்படைகளைக் கொண்டுள்ளது.

- சிற்றிலக்கியம் அளவில் (பாடல் எண்ணிக்கை அல்லது அடிகளின் எண்ணிக்கை) சுருங்கியதாக அமைவது.
- அகப்பொருள், அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும். (கோவை போன்ற சில சிற்றிலக்கியங்கள் பல துறைகளைக் கொண்டு அமைவதும் உண்டு.)
- பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக: உலா இலக்கியம் தலைவன் உலாவரும் காட்சியை மட்டுமே சிறப்பித்துப் பாடப்படுவது.
- அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது சிற்றிலக்கியம்.

இவ்வகையில் **பள்ளு**, **தூது**, **உலா**, **பிள்ளைத்தமிழ்**, **கலம்பகம்**, **கோவை**, **குறவஞ்சி** போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் என்ற வகைமையுள் அடங்கும்.[1] சிற்றிலக்கியங்கள் வடமொழியில் **பிரபந்தங்கள்** எனப்படுகின்றன. பிரபந்தம் என்பது இலக்கிய வகைகள் பலவற்றைக் குறிக்கும் ஒரு பொதுப்பெயர் ஆகும். சமக்கிருதத்தில் பிரபந்தம் என்னும் சொல், "கட்டப்பட்டது" எனப் பொருள்படும்.

**சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை**

சிற்றிலக்கியவகைகளின் எண்ணிக்கை **தொண்ணூற்றாறு** என மரபாக கூறப்படுகிறது. இந்த தொண்ணூற்றாறு வகைகளையும் தாண்டி பலவகை சிற்றிலக்கியங்கள் வளர்ந்தும் விரிந்தும் தொண்ணூற்றாறு என்ற எண்ணிக்கைக் கடந்து பிற்காலத்தில் கூடிவிட்டது. இதன் எண்ணிக்கைக் குறித்து அறிஞர்களிடையே எண்ணிக்கை மாறுபாடு உள்ளது. இந்த எண்ணிக்கையானது குறைந்தபட்சம் 186 என்றும், 417 என அதிகப்பட்சமாகவும் கூறப்படுகிறது.

## தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பாரதியார் மற்றும் பாரதிதாசன் ஆகியோரின் பங்களிப்பு

**பாரதியாரின் பங்களிப்பு**

தோற்றம்

இயற்பெயர் : சுப்ரமணியம் சுப்பையா

பெற்றோர் : சின்னசாமி ஐயர் - லட்சுமி அம்மாள்

ஊர்: எட்டயபுரம்

பிறந்த தேதி : 11.12.1882

**புனைப் பெயர்கள்**

'கவி', 'புதுநெறி காட்டிய புலவன்', 'பல்துறை அறிஞர்', 'தமிழின் கவிதை', 'காளிதாசன்', 'சக்திதாசன்', 'புரட்சி கவிஞன்', 'தேசாபிமானி' 'மீசைக் கவிஞன்', 'முண்டாசு கவிஞன்' போன்ற புனைப் பெயருடன் பாரதியாரை மக்கள் அழைத்தனர்.

**கல்வி மற்றும் பணி**

சிறுவயதில் பெற்றோரை இழந்த பாரதியார், தனது அத்தை | குப்பம்மாளுடன் காசி மாநகரில் கல்லூரி படிப்பை முடித்தார். இறுதியில் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியேற்றார். |ஆனால் அதே வருடம் சென்னை வந்து, 'சுதேசமித்திரன்' செய்தித்தாளில் | உதலி ஆசிரியராகப் பொறுப்பேற்றார். 'இந்தியா' என்னும் கிழமை இதழின் | பொறுப்பாசிரியராக செய்தித்தாள் துறையில் அடியெடுத்து வைத்தார்.

**மதுரைத் தமிழ் சங்கப் பணி**

இளமையிலேயே தமிழிலக்கியத்தில் ஈடுபாடு கொண்டிருந்த பாரதியார், பின்னாளில் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக பணியாற்றினார். நூல்கள் வெளியீடு

(1) தசரதன் குறையும் கைகேயி நிறையும், (ii) திருவள்ளுவர். di) சேரர் தாயமுறை, (iv) தமிழும் தமிழரும், (v) சேரர் பேரூர், (vi) அழகு, (vii) பழந்தமிழ்நாடு, (viii) நற்றமிழ், போன்ற பல இலக்கிய நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

இவையன்றி (i) மாரிவாயில், (ii) மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி ஆகிய இரு கவிதை நூல்களும் பாரதியாரின் படைப்புகளே.

**அரசியல் ஈடுபாடு**

திலகர் கொள்கையால் கவரப்பட்டு 'சுதந்திரப் போராட்டத்தில்' தீவிரமாக பங்கு பெற்றார். தனது கவிதைகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டினார். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று தமிழ் உணர்வை மக்களிடம் தூண்டியுள்ளார். பாரதியார், 'இந்தியா பத்திரிக்கையின்' மூலம் மக்களிடையே விடுதலை உணர்வை தூண்டும் வகையில் பல எழுச்சியூட்டும் கட்டுரைகளை எழுதினார். இதனால் 'இந்தியா பத்திரிக்கை' தடை செய்யப்பட்டது. அவரை கைது செய்து சிறையிலும் அடைத்தது. இவரை 'தேசிய கவியாக' அனைவராலும் போற்றப்பட்டார்.

**ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'** என்று சுதந்திரம் அடைவதற்கு முன்பே தனது சுதந்திர தாகத்தை தித்தான் வெளிபடுத்தியவர்.

**இலக்கிய காப்பியங்கள்**

சுதந்திரப் பாடல்கள், (ii) தேசியப் பாடல்கள், (iii) தலைவர் வாழ்த்துக்கள், (iv) பக்திப் பாடல்கள், (v) சமுதாயப் பாடல்கள், (vi) பாப்பாப் பாட்டு, (vii) புதிய ஆத்திச் சூடி திறமையால் மூன்றாண்டுகள் படிக்கக்கூடிய இளங்கலைப் பட்டத்தை இரண்டு

ஆண்டுகளிலேயே முடித்தார் 1919-ல் காரைக்காலில் உள்ள அரசு கலைக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பதவியேற்றார்.

**பாரதிதாசன் பங்களிப்பு**

தோற்றம்
இயற்பெயர் : சுப்புரத்தினம்
பெற்றோர் : கனகசபை - லட்சுமி
ஊர் புதுச்சேரி
பிறந்த தேதி : 29.04.1891

**பட்டப் பெயர்கள்**

அறிஞர் அண்ணா அவர்கள் பாரதிதாசனுக்கு 'புரட்சி கவிஞர்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார். 'பாவேந்தர்' எனவும் அழைக்கப்பட்டார். தனது இலக்கிய படைப்புகளுக்காக 'சாகித்ய அகாடமி விருது பெற்றுள்ளார்.

**கல்வி மற்றும் பணி**

பாரதிதாசன் இளம் வயதிலிருந்தே தமிழ் மொழி மீது அதீத பற்றுடையவராகத் திகழ்ந்தார். தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவ சித்தாந்த வேதங்களை முறையாக கற்றார். சிறு வயது முதலே சுவைமிக்க அழகானப் பாடல்களை எழுதும் திறமை பெற்றிருந்தார். இவரது

**பாரதியார் உடனான நட்பு**

பாரதியாரை நேரில் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்கப் பெற்றார். பாரதியாரிடம் இருந்து பாராட்டும் பெற்றதோடு அவரது நட்பும் கிடைத்தது. தனது நண்பனின் திருமணத்தில் பாரதியார் பாடலை பாடியபோது, தமிழ் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாக பாரதிதாசன் பாரதியாரை தனது மானசீக குருவாக ஏற்றார். அதோடு தன் பெயரையும் 'பாரதிதாசன்' என்று மாற்றிக் கொண்டார்.

**எழுத்துப் பணி**பாடல்கள், கட்டுரைகள், கதைகள் எழுதி நாளிதழ், கிழமையிதழ், திங்களிதழ்களில் வெளியிடும் பணியில் பாரதிதாசன் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

**திரையுலக மற்றும் அரசியல் தொடர்பு**

பாரதிதாசன் ஒரு சிறந்த சுதந்திர போராட்ட வீரர் என்பதாலும், தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை கடைபித்ததாலும், பல போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறைக்குச் சென்றார்.

இவரது இலக்கிய நடையைக் கண்டு வியந்து, திரைப்படத்துறையில் மி விரு கதை - வசனம் எழுதும் வாய்ப்பும் கிடைத்தது.

**பாரதிதாசன் கீழ்காணும் நூல்களை இயற்றியுள்ளார்.**

சிறுவர் சிறுமியர் தேசியகீதம், தொண்டர் நடைப் பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், தாழ்த்தப்பட்டோர் சமத்துப் பாட்டு etc.

**இலக்கிய வாழ்வு**

பாரதிதாசனின் இலக்கிய வாழ்வில் 1941-ஆம் ஆண்டு முதல் ஏற்றம் நிகழ்ந்தது. அவரது இலக்கிய காவியங்கள்,

(i) எதிர்பாராத முத்தம், (ii) குடும்ப விளக்கு, (iii) பாண்டியன் பரிசு, (iv) இருண்ட வீடு, (v) காதல் நினைவுகள், (vi) நல்ல தீர்ப்பு, (vii) அழகின் சிரிப்பு, (vii) தமிழியக்கம், (ix) எது இசை etc.,

இதுபோன்ற காவியங்களை படைத்து தமிழிலக்கியத்தின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்துள்ளார்.

**படைப்புகள்**

**பாரதிதாசனின் படைப்புகள் ஏராளம்**.

(i) முல்லைக்காடு, (ii) காதலா? கடமையா?, (iii) படித்த பெண்கள்,

(iv) குடும்ப விளக்கு (I, II, III, IV, V தொகுதிகள்), (v) சேர தாண்டவம்,

(vi) ஏற்றப்பாட்டு, (vii) அமிழ்து எது? (viii) இசையமுது,(ix) தேனருவி,

(x) தாயின் மேல் ஆணை, (xi) இளைஞர் இலக்கியம், (xii) குறிஞ்சித் திரட்டு, (xiii) மணிமேகலை வெண்பா etc.,

## அலகு - 2
## நடுகல் முதல் நவீன சிற்பங்கள் வரை

**நடுகல்**

நடுகல் இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக் கல் ஆகும். இவற்றை "வீரக் கற்கள்" என்றும் கூறுவர். நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கோ, ஒரு பிரதேசத்துக்கோ அல்லது தனிப்பட்ட பண்பாட்டைச் சேர்ந்தவர்களுக்கோ உரிய வழக்கம் அல்ல. உலகின் பல பகுதிகளிலும் பெருங்கற்காலம் முதலே இவ்வழக்கம் இருந்து வந்துள்ளது. இந்தியாவிலும் வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி நெடுங்காலமாகவே நடுகற்கள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. இறந்தவர் எவருக்குமே நடுகற்கள் எடுக்கப்படலாமாயினும் வீரமரணம் அடைந்தவர்களுடைய நடுகற்களுக்கே பெருமதிப்பு கொடுக்கப்பட்டு வந்தது. வீரர்களுக்காக எடுக்கப்படும் நிளைவுக் கற்களை மக்கள் வணங்கி வந்தமை பற்றியும் பண்டைக்கால இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

**இந்தியாவில் நடுகற்கள்**

இந்தியாவில் நடுகற்கள் அல்லது வீரக்கற்கள் வடக்கே இமாச்சலப் பிரதேசம் தொடக்கம் தெற்கில் கேரள மாநிலம் வரை காணப்படுகின்றன. வடக்கில் இமாச்சலப் பிரதேசம், குசராத், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் உட்பட்ட பல இடங்களில் இவை உள்ளன. தென்னிந்தியாவிலும் ஆந்திரா, கர்நாடகம், தமிழ்நாடு, கேரளா ஆகிய நான்கு மாநிலங்களிலும் பழங்கால நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவில்

கருநாடக மாநிலத்திலேயே அதிக அளவாக 397 நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 202 கற்களும், ஆந்திராவில் 126 கற்களும்.கேரளாவில் ஒரு கல்லும் கண்டறியப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் நடுகற்கள்**

தமிழ் நாட்டில் நடுகல் எடுக்கும் வழக்கம் மிகப் பழங்காலம் முதலே இருந்துள்ளமை, தொல்லியல் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இது தவிர சங்கப் பாடல்களிலும், பின்னர் எழுதப்பட்ட நூல்களிலும் நடுகற்கள் பற்றிய தகவல்கள் உள்ளன.செங்கம், தருமபுரி,தேன்கனிக்கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளிலேயே பெருமளவில் நடுகற்கள் காணப்படுகின்றன. இப் பகுதிகளில் ஆட்சி செய்த அதியமான் போன்ற அரசர்கள் காலத்தில் நடுகற்கள் எழுப்பப்பட்டு உள்ளது தெரிகின்றது. தமிழ் நாட்டில் சோன். சோழன், பாண்டியன் காலத்திலும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் வீரமரணம் அடைந்த மனிதர்களுக்கு 202 கற்களும், ஆந்திராவில் 126 கற்களும்.கேரளாவில் ஒரு கல்லும் கண்டறியப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் நடுகற்கள்**

தமிழ் நாட்டில் நடுகல் எடுக்கும் வழக்கம் மிகப் பழங்காலம் முதலே இருந்துள்ளமை, தொல்லியல் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இது தவிர சங்கப் பாடல்களிலும், பின்னர் எழுதப்பட்ட நூல்களிலும் நடுகற்கள் பற்றிய தகவல்கள் உள்ளன.செங்கம், தருமபுரி,தேன்கனிக்கோட்டை ஆகியவற்றை அண்டிய பகுதிகளிலேயே பெருமளவில் நடுகற்கள் காணப்படுகின்றன. இப் பகுதிகளில் ஆட்சி செய்த அதியமான் போன்ற அரசர்கள் காலத்தில் நடுகற்கள் எழுப்பப்பட்டு உள்ளது தெரிகின்றது.

தமிழ் நாட்டில் சோன். சோழன், பாண்டியன் காலத்திலும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் வீரமரணம் அடைந்த மனிதர்களுக்கு இந்தியாவிலும் பல இடங்களில் இப்பாறை ஓவியங்கள் கிடைத்துள்ளன. முதல் முதலாக உலகில் பாறை ஓவியமானது ஸ்பெயின் நாட்டில் அல்டமிரா என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல் இந்தியாவில் பீம்பேட்கா என்னுமிடத்திலும், தமிழகத்தில் மல்லபாடி என்னும் இடத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன

. தமிழகத்தில் இதுவரை ஐம்பது இடங்களுக்கு மேல் பாறை ஒவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறிவதற்கு இத்தகு பாறை ஓவியங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இவைகளுள் பல்வேறு கண்டங்களையும் தாண்டிய சில பொதுவான பண்புகளுடன் விளங்குகின்றன என்பதை அறிஞர்கள் இந்த ஓவியங்களை வைத்து நிறுவியுள்ளனர்.

பல்வேறு கண்டங்களிலும் கண்டறியப்பட்ட பாறை ஓவியங்களில், அவற்றின் தோற்றம், குறியீடுகள். அவை வெளிப்படுத்தும் சிந்தனைகள் ஆகியவை பொதுவானதாக அமைகின்றன. இதன் மூலம் வரலாற்றுக்கு முற்பட்ட மக்கள் ஓவியங்கள் மூலம் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றங்களை நிகழ்த்தினர் என்பதை அறிய முடிகிறது. ஜான் காலிங்வுட், ரொனால்டு மோரிஸ் ஆகியோர் இவ்வோவியங்கள் பற்றி ஆராய்ந்துள்ளனர் .

**வரலாற்றுக்கு முற்பட்ட காலம்**

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பதற்கு எழுத்துகளைப் பயன்படுத்துவதற்கு முந்தைய காலம் என வரலாற்று அறிஞர்கள் விளக்கம் தருவார்கள். வரலாற்றுக்கு உட்படும் காலத்தைவிடவும் பல மடங்கு அதிகமான கால எல்லைகளைக் கொண்டதாக வரலாற்றுக்கு முந்தைய காலச்சூழல் அமைந்திருக்கிறது. இன்றைய காலஅளவிற்கேற்ப சுமார் 20 இலட்சம் ஆண்டுகளிலிருந்து கி.மு 400 வரையிலான ஆண்டுகளை தொல்பழங்காலம் என உலக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இக்காலகட்ட சான்றுகள்தான் ஒரு சமூகத்தின் மிகக்கூடுதலான தொன்மையை,மூல கட்டமைப்பை வெளிப்படுத்த, விளக்க உதவுகின்றன. அவ்வகையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் மிக நீண்டதாக இருப்பினும், அக்காலத்து, மனித எச்சங்கள், மக்கள் விட்டுச் சென்ற சின்னங்கள் மிகவும் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன.
அந்தவகையில் மிகத் தொன்மையான ஊழிக்கால மனித எச்சங்கள் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவில் சோன்பள்ளத்தாக்கிலும், பீக்கிங், ஜாவா
வளர்ச்சி கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மனித இனத்தின் தோற்றம், முதலியவற்றைகுறித்து அறிய வரலாற்று அறிஞர்கள் அம்மக்களின் படைப்புகளைக் கொண்டும், தொழில் நுட்ப அடிப்படையிலும் பல்வேறு கால வரைமுறைகளையும் வகுத்துள்ளனர். சுருக்கமாக மனித இன வரலாற்றை..

**ஓவியங்கள்**

பழங்காலத்தில் மக்கள் இயற்கையான குகைத் தளங்களில் வாழ்ந்தனர். எனவே தாங்கள் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களை வரைந்தனர். குகைகளுக்கு அருகே இருந்த பாறைகளிலும் ஓவியங்களை வரைந்துள்ளனர். குகைகளில் இருட்டாக இருந்ததால் அதிக அளவில் பாறைகளில் ஓவியங்களை வரைந்துள்ளனர். எனவே இவ்வோவியங்களைக் குகை ஓவியங்கள் என்று அழைப்பதைவிடப் பாறை ஓவியங்கள் என அழைப்பது பொருந்தும்.

அக்கால மக்கள் தங்களது வாழ்வின் நிகழ்வுகளைப் பதிவு செய்ய வேண்டுமென்று எண்ணியதால் ஓவியங்களை வரைத்திருக்கல...அவர்களுக்கு வேட்டையாடுதலே முக்கியத் தொழில், எனவே பல்வேறு மிருகங்களைத் தாம் வேட்டையாடுவது போல ஓவியங்களை வரைந்தால், வேட்டையாடும் போது அதிக மிருகங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும், விலங்குகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெறலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் அவற்றை வரைந்திருக்கலாம்.

**வகைகள்**

பாறை ஓவியங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் மனித இனத்தின் வாழ்க்கைச் சூழலைச் சித்திரிப்பனவாக அமைகின்றன. அவர்களது எண்ணங்கள் நம்பிக்கைகள் முதலியவற்றைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. வெவ்வேறு விதமான வடிவங்களிலும், வண்ணங்களிலும்அமைகின்றன. இந்த ஓவியங்களின் வடிவம் மற்றும்

இந்த ஓவியங்களில் இடம் பெறுகின்ற உருவங்களை வைத்து அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**முதல் நிலை**

முதல் நிலை ஓவியங்கள் தொல்பழங்காலத்தைச் சேர்ந்த மிகத் தொன்மையான ஓவியங்களாகும். இவற்றில் விலங்கின வடிவங்கள் மிகுதியும் இடம் பெற்றிருக்கும். இத்தகைய ஓவியங்கள் தமிழகத்தில் குறைவாகவே காணப்படுகின்றன.

**இரண்டாம் நிலை**

இரண்டாம் நிலை ஓவியங்களில் மிகுதியாக வேட்டைக் காட்சிகளே இடம் பெறும்.இந்தியப் பாறை ஓவியங்களில், காண்டா மிருகம், சிங்கம், புலி போன்ற விலங்கினங்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும்.மான், ஆடு, பன்றி, மாடு முதலிய வேட்டைக்குரிய விலங்குகள் அதிகமாக இடம் பெறும்.

**மூன்றாம் நிலை**

இவ்வகை ஓவியங்களில் மனித வடிவங்கள் அதிகமாக இடம் பெறும். போர்க் காட்சிகள் சிறப்பாக இடம் பெற்றிருக்கும். வேட்டைக் காட்சிகளாக இருப்பினும் மனித உருவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருக்கும். சடங்கு மற்றும் நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கும்.

**பயன்படுத்திய வண்ணங்கள்**

முதல் நிலை ஒவியங்களில் கோடுகளாலான அமைப்பு மட்டுமின்றி அடர்த்தியான வண்ணப் பூச்சு அமைப்புக் காணப்படும். செந்நிறம் அதிக அளவில் பயன்படுத்தப் பட்டிருக்கும். இரண்டாம் நிலை ஓவியங்களில் செந்நிறம்,வெள்ளை, கருப்பு ஆகிய நிறங்கள் இடம் பெறும்.

பாறை ஓவியங்களில் பயன்படுத்தப் பட்ட வண்ணக் கலவையினை இரசாயனச் சோதனை செய்து அவற்றின் காலத்தைண்ணக்கல.ை மேலும் ஓவியங்களின் வரைவு முறையினை வைத்தும் அவற்றின் வடிவமைப்பைக் கொண்டும் குற்பட்ட காலத்திற்கு முற்பட்ட பாறை ஓவியங்கள் அடர்த்தியான லார் முறையில் செயப்பட்டிருக்கும். இவைகளில் ர்க்கிப்பு நிறண்ண அல்லது வெள்ளை நிறமோ அதிக அளவில் பயன்படுத்தப் பட்டிருக்கும். ஆனால் இரண்டு நிறங்கள் பயன்படுத்தப்விட்டடி முயன்றும்

அடர்த்தியான வண்ணப்பூச்சு முறையைத் தொடர்ந்து வரும் வளர்ச்சி நிலை கோட்டோவியம் எனப்படும் சுற்று வரை கோட்டு முறை ஆகும். இரு வண்ண ஓவியங்கள் எனப்படுபவை மேற்கண்டவற்றுள் பிந்தைய காலத்தைச் சேர்ந்த ஓவியங்களாகக் கருதப்படுகின்றன.

உருவம், வண்ணம், ஆகியவற்றைக் கொண்டு ஓவியத்தின் காலம் கணிக்கப்படுவதுடன் அவ்வோவியம் கிடைத்த இடத்தினருகில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளை வைத்தும் காலம் அவ்வகையில் தமிழகத்தில் கணிக்கப்படுகிறது. இதுவரை கண்டறியப்பட்ட பாறை ஒவியங்களைத் தொல்பழங் காலத்தவை என்று கூற இயலாது. இவை மூன்றாம் நிலை எனக் கூறப்படும் பெருங்

கற்காலத்தின் இறுதிக் காலத்தையும் வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தினையும் சார்ந்தவையாகும். சுருங்கச் சொன்னால் சங்க காலத்தை ஒட்டியவை எனலாம்.

**வடிவ அமைப்பு**

ஓவியங்களின் வடிவ அமைப்பைக் கொண்டு அவற்றை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை:

பக்கவாட்டு முறை

நேர் வடிவ முறை

திரும்பிக் காணும் முறை,

என்பனவாகும்.பக்கவாட்டு முறை என்பது ஓவியத்தில் முகம் மற்றும் உடம் ஆகியவற்றின் ஒரு பக்கம் தெரியும்படி வரைவதாகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் வரையப்பட்ட பாறை ஓவியங்கள் பக்க வாட்டு முறையில் அடர்த்தியான வண்ணக் கலவையால் வரையப்பட்டிருக்கும்.

**நேர் வடிவ முறை**

நேர்வடிவ முறை என்பது ஓவியம் நம்மை நேராகப் பார்ப்பது போல அமைந்திருப்பதாகும். நேர் வடிவ முறை முக அமைப்பைச் சிறப்பாகக் காட்டும். உதாரணமாக மனித உருவங்களைக் கூறலாம்.

**திரும்பிக் காணும் முறை**

உடலைப் பக்கவாட்டு முறையில் அமைத்து முகத்தை மட்டும் திருப்பிக் கொண்டிருப்பது போல் அமைந்திருப்பதைத் திரும்பிக் காணும் முறை என்பர். மிகத் தொன்மையான ஓவியங்களில் பசு, மான் முதலியவை திரும்பிக் காணும் முறையில் வரையப்பட்டிருக்கும்.

**நவீனச் சிற்பக் கலைஞர்கள்**

இக்காலச் சிற்பிகளில் சிறந்த படைப்புகளைத்தமக்கே உரிய பாணிகளில் படைத்துச் செல்வாக்குப் பெற்ற சிற்பிகள் ஓவியக் கலையிலும் தேர்ச்சி பெற்றவர்களே, அவ்வாறு சிற்ப, ஓவியக் கலைகளில் சிறந்து விளங்குபவர்களாகக் கலைச்செம்மல் மூக்கையா, தனபால், வித்யாசங்கர் ஸ்தபதி, கே.எம். கோபால் ஆகியோரைக் கூறலாம். இவர்களைப் பற்றிச் சுருக்கமாக இங்குக் காணலாம்.

**கலைச்செம்மல் மூக்கையா**

விருதுநகர் மாவட்டம், இராமசாமி புரம் என்னும் சிறு கிராமத்தில் பிறந்தவர் மூக்கையா. சென்னை ஓவியக் கலைக் கல்லூரியில் பயின்றவர். தமிழக அரசின் கலைச்செம்மல் விருது பெற்றவர். தாம் பிறந்து வளர்ந்தபடைப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. முறை ஆகியவை அவரது

மூக்கையா, சுடுமண் சிற்பங்கள் (Terracotta) செய்வதில் வல்லவர். இவரது சுடுமண் சிற்பங்களில் செவ்வியல் கலைக் கூறுகள் இல்லை; பிரதேசத் தன்மை (நாட்டுப்புறச் சாயல்) இருக்கிறது. எனினும் இவற்றை முற்றிய மிகுந்தவை இலை கலை வடிவமாகக் கொள்ள முடியாது. நவீனத் தன்மை

**தனபால்**

சென்னை ஓவியப் பள்ளியின் தலைமைப் பொறுப்பில் இருந்த எஸ். தனபால் சிறந்த சிற்பியும் ஓவியரும், நடனக் கலைஞரும் ஆவார். சுடுமண்ணால் பல சிற்பங்களை உருவாக்கியவர். தமிழ்க் கலை மரபுகளைத் தற்காலச் சிற்ப வெளிப்பாட்டில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுத்தியவர். மாணவர்களை உருவாக்குவதில் இரவும் பகலும் பாடுபட்டவர் இவர். ஆதிமூலம், பாஸ்கரன், தட்சிணா மூர்த்தி ஆகிய சிறந்த ஓவியர்கள் இவருடைய மாணவர்கள். சென்னை சிற்ப ஓவியக் கலைஞர்களிடையே பெரும் தாக்கங்களைஏற்படுத்தியவர். சோழ மண்டல ஓவியக் கிராமம் உருவாவதில் பெரும்பங்கு ஆற்றியவர். அதன் வளர்ச்சிக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தவர்.

இவர் பணியாற்றிய சென்னைக் கலைக் கல்லூரியில் மேற்கத்தியப் பாணி சார்ந்த நிலை இருந்த போதிலும், மேற்கத்தியப் பாணியில் இந்தியக் கலாச்சாரத்தைப் புகுத்தித் தமது சிற்பங்களைப் படைத்தார். மரத்தினால் சிற்பங்கள் செய்ததோடு மட்டுமல்லாது பீங்கானிலும் சிற்பங்கள் படைத்துள்ளார். பல புகழ் பெற்ற தலைவர்களின் சிற்பங்களைப் படைத்துள்ளார். இவர் படைத்த ஏசுநாதர் சிற்பமும், ஔவையார் சிற்பமும் புகழ் பெற்றவை.

**வித்யா சங்கர் ஸ்தபதி**

இவர் கும்பகோணம் கலை மற்றும் கைவினைக் கல்லூரியில் பணியாற்றியவர். இவர் மரபுக்கும் புதுமைக்கும் இணைப்புப் பாலமாக விளங்கினார். தமது சிற்பங்களில் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தனிப் பாணியை உருவாக்கினார். ரதி, விநாயகர், இராவணன், இரணிய வதைபோன்ற உலோகச் சிற்பங்கள் பழைமையின் பின்புலத்தில் நவீனமாக வடிவமைக்கப் பெற்றவை ஆகும். உலோகச் சிற்பங்கள் தவிரச் சுடுமண் சிற்பங்களைப் படைப்பதிலும் சாதனை படைத்தவர் இவர்.

இவர் கிராம வாழ்வின் அழகில் அதிக ஈடுபாடு கொண்டவர். கிராமியக் கலைகளாலும், சுடுமண் சிற்பங்களாலும் சுவரப்பட்டவர். இதனால் கிராமத்துச் சிற்பங்களின் உருவத்தைச் சிதைக்காமல் உண்மையை மிகைப்படுத்தல் என்ற உத்தியைக் கையாண்டார்.

**கே.எம். கோபால்**

சோழ மண்டல ஓவியக் கிராமத்தைச் சேர்ந்த சிற்பிகளுள் ஒருவரான கே.எம்.கோபால் தமிழக அரசின் கலைச் செம்மல் விருது பெற்றவர். இவரது படைப்புகள் உலோகத்தால் ஆனவை. இவர் இந்து சமயம் சார்ந்த இறையுருவங்களை அதிலும், குறிப்பாக விநாயகரது உருவத்தை அதிக அளவில் படைத்துள்ளார்.

**நவீனச் சிற்பங்கள்**

நவீனச் சிற்பிகளால் படைக்கப்பட்ட நவீனச் சிற்பங்களைச் சில வகைப்பாடுகளுக்கு உட்படுத்திஅவற்றைப் பற்றிக் காணலாம்

**உலோகச் சிற்பங்கள்**

மரபு சார்ந்த உலோகச் சிற்பங்கள் முன்பே நம் நாட்டில் உண்டு என்பதை நாம் அறிவோம். மரபு சார்ந்த கதைகளை அடிப்படையாய்க் கொண்டு நவீன உத்திகளைப் பயன்படுத்தி உலோகச் சிற்பங்கள் இப்போது செய்யப்படுகின்றன. அவை நவீனச் சிற்பங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. இவற்றை இரண்டு விதமாகப் பார்க்கலாம். ஒன்று மரபு சார்ந்த உலோகச் சிற்பங்கள், இரண்டு முற்றிலும் நவீனத்தைச் சார்ந்த சிற்பங்கள்.

வித்யாசங்கர் ஸ்தபதியின் மரபு சார்ந்த சிற்பங்கள் புகழ் பெற்றவை. இவரது அக்னி உலோகச் சிற்பத்தில் தீக்கடவுள் ஐந்து தலைகளுடன் கையில் சூலத்துடன் படைக்கப்பட்டு உள்ளார். தீக் கடவுளின் உருவத்தைச் சுற்றித் தீ நாக்குகள் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பம் நாட்டுப்புறச் சுடுமண் சிற்பத்தை அடியொற்றி அமைக்கப்பட்டுள்ளது.

**விற்பனை**

வித்யாசங்கரின் மற்றுமொரு படைப்பு இராவணன் உலோகச் சிற்பமாகும். சற்று வேறுபாடாக இதில் இராவணனது பத்துத் தலைகளும் மூன்று வரிசைகளில் (ஒன்றன் மேல் ஒன்றாக) அமைக்கப்பட்டு உள்ளன. முதலாவது வரிசையில் ஐந்து தலைகளும், இரண்டாவது வரிசையில் மூன்று தலைகளும், மூன்றாவது வரிசையில் இரண்டு தலைகளும் என அமைந்துள்ளன. கையில் பல்வேறு விதமான ஆயுதங்கள் தாங்கி, நின்ற நிலையில் சிற்பம் காட்சியளிக்கிறது. இச்சிற்பமும் சுடுமண்
கையில் பல்வேறு விதமான ஆயுதங்கள் தாங்கி, நின்ற நிலையில் சிற்பம் காட்சியளிக்கிறது. இச்சிற்பமும் சுடுமண் சிற்பத்தை அடியொற்றியே அமைக்கப்பட்டு உள்ளது. இது ஓர் ஆல இலையின் தலை கீழ் வடிவம் போல் காட்சியளிக்கிறது.

**கணேசர்**

கே.எம். கோபால் கணேசரது உருவத்தை மாறுபட்ட வடிவங்களில் அமைத்துள்ளார். சான்றாகக் கணேசருக்கே உரியதான பெரிய தொப்பை வயிற்றைச் சிறியதாகப் படைத்துள்ளார். பால கணபதியின் சிற்பத்தைக் குழந்தை, கால்களை நீட்டி அமர்ந்திருப்பது போன்று அமைத்துள்ளார். மேலும் விநாயகரைக் கணேஷ்வரி என்ற பெயரில் பெண் உருவிலும் அமைத்துள்ளார்.

**நவீன உலோகச் சிற்பங்கள்**

புதிய பல கருத்தாக்கங்களுடன் கூடிய நவீன உலோகச் சிற்பத்தில் மரபைக் காண இயலாது. இத்தகு நவீன உலோகச் சிற்பங்களில் சிற்பியின் மனத்தைப் பாதித்த உணர்வுகளுக்கு வடிவம் கொடுக்கப்பட்டிருக்கும்.

வித்யாசங்கர் ஸ்தபதி அவர்களின் நவீன உலோகச் சிற்பங்களி குறிப்பிடத் தக்கவை ஆலமரம், கற்பக விருட்சம் மற்றும் முப்பரிமாணப் படைப்பாக விளங்கும் ரேணுகா தேவி, யுவதி. மிதுனச் சிற்பம் ஆகியனவாகும். யுவதி சிறப்பானது. மேல்பகுதி மட்டும் பெண் போன்ற தோற்றத்திலும் கீழ்ப்பகுதி தீர்மானிக்க முடியாததாகவும் உள்ளது.
மிதுனச் சிற்பம் ஆண் பெண் இருவர் படுத்திருக்கும் காட்சியாககாணப்படுகிறது. இவ்வுருவத்தைப் பஞ்சலோகத்தில் படைத்திருக்கிறார். இச்சிற்பத்தில் மூக்கும், கண் இமையும் சிறப்பாகப் படைக்கப்பட்டு உள்ளன.

**அரசியல் தலைவர்களின் உருவங்கள்**

சிற்பி தனபால் அரசியல் தலைவர்கள் மற்றும் அறிஞர்களின் உருவங்களை உலோகத்தில் மிக அழகுறப் படைத்துள்ளார். அவற்றுள் குறிப்பிடத் தக்கவை சர்வ பள்ளி இராதாகிருஷ்ணன், தந்தை பெரியார் டாக்டர் எ.இலட்சுமண சுவாமி முதலியார், பெருந்தலைவர் காமராசர் ஆகியோருடைய சிற்பங்களாகும்.அவர் படைத்த ஔவையார் சிற்பம் சற்றே கூன் விழுந்து கையில் கம்புடன், பொக்கை வாயுடன், நீண்ட காதுகளுடன், தோளில் பையுடன் ஆழ்ந்த காணப்படுகிறது. கலைப் பார்வைக் உகுரியதாகக்

**சிற்பங்கள் செய்யப் பயன்படும் பொருட்கள்**

இன்றைய நவீனச் சிற்பங்களைச் செய்யச் சுடுமண், உலோகம் ஆகிய பொருட்கள் பயன்படுவதை ஏற்கெனவே கண்டோம். இவை தவிரக் கண்ணாடி, தோல் கழிவுப் பொருட்கள், ரப்பர், களிமண், தேங்காய் நார், பனங்கொட்டை, சிமெண்ட், மரம் என பல பொருட்களிலும் சிற்பங்கள் உருவாக்கப் படுகின்றன. வலூர்-பாறை ஓவியங்கள் முதல் நவீன ஓவியங்கள் வரை சிற்பங்கலை

சில்ப சாஸ்திரம். மானசாரா, அபிலாசித்தார்த்தா சிந்தாமணி ஆகியநூல்களில் பஞ்சலோகம் பற்றியும் சிலை செய்யும் விதிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. செம்பு, வெள்ளி, தங்கம், துத்தம், ஈயம் (copper, silver, pold, zinc and lead) ய.. (copper, silver, இவை தம் கூலந் தது ஐம்பொன்சிலை அல்லது பஞ்சலோகம் என்றும். இந்நூல்கள் கூறுகின்றன.

**சிலைசெய்யும்முறை**

முதலில் எந்த சிலையைச் செய்ய நினைக்கிறார்களோ அந்த சிலையைப் போல மெழுகில் கரு உருவாக்கப்படும். இதற்கென தனியாக மெழுகு உள்ளது. இந்த மெழுகு ஒருவகை மரத்தில் உருகி வழியும் மெழுகாகும். இதை பாலக்காட்டு மெழுகு என்பர்.

இந்த மெழுகில் சம அளவுக்குக் குங்கிலியம் கலந்து உருக்கி வைத்துக்கொண்டு, தேவையான அளவுக்கு மெழுகில் ஒருஉருவாக்கப்படும். காவிரிக் கரையோரம் படிந்து கிடக்கும் வண்டல் மண்ணை அள்ளிவந்து, அந்த மெழுகுச் சிலையின் மேல் பூசி வார்ப்பு செய்கிறார்கள். வார்ப்பின் கீழ்ப்பகுதியில் ஒரு சிறிய துலை வைக்கப்படுகிறது.

மண் காய்ந்த பிறகு அதை அடுப்பில் வைத்து சூடாக்கி மெழுகை வெளியேற்றிவிடுவர். இந்த உள்ளீடற்ற வார்ப்பில் நன்கு உருக்கப்பட்ட ஐம்பொன்னை

வார்ப்பில் உள்ள துளை வழியாக ஊற்றி, ஒருநாள் கழித்து மண்ணைத் தட்டி உடைத்து, உள்ளே உள்ள உலோகச் சிலையை எடுக்கின்றனர்.

பிசிறுகளோடு உள இந்தச்சிலையை அதை அரம் கொண்டு தேய்த்து, சீவிளி கொண்டு சீவி, பின் நகாசு வேலை செய்கின்றனர். எல்லாம் முடிந்த பின்னர் சிலைக்குக் கண் திறக்கப்படுகிறது.

தொழில் சார்ந்த கலைகள் கைவினைக் கலைகள் ஆகும். பெரும்பாலும் இவை கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாடப் பிழைப்புக்காக தங்களுக்கு அருகில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு பயன்பாட்டுப் பொருள்களைத் தயாரிப்பது ஆகும்.

**பழங்குடியினர் கைவினைக் கலைகள்**

மட்பாண்டங்கள் செய்தல், மூங்கில் கூடைகள் வனைதல்,பாய் முடைதல், பட்டு நெசவு செய்தல், பிரம்பு பின்னுதல், மண் பொம்மைகள் தயாரித்தல் மற்றும் பரதநாட்டிய நடன கலைஞர்கள் அணியும் கோவில் நகைத்தொழில் போன்றவை கிராமப்புறக் கைவினைக் கலைகள் ஆகும்.

**மட்பாண்டங்கள் தயாரித்தல்**

கிராமப்புறங்களில் வேளார் என்று அழைக்கப்படும் குயவர்களால் களிமண் கொண்டு திருவை மூலம் விதம் விதமான பாண்டங்கள் செய்யப்படுகின்றன ) மட்பாண்டங்கள்

தற்காலத்தில் மண்பானையில் தண்ணீர் சேகரித்துக் குடித்தால் உடலுக்குக் குளிர்ச்சி என்ற கருத்து மக்களிடையே பரவி இருப்பதால் மண்பானையில் திருகு குழாய் வைத்து செய்யப்பட்ட மண்பானைகள் சாலையோரங்களில் விற்பனைக்கு வைக்கப் படுகின்றன)

**மூங்கில் கூடைகள்**

உள்ளூரிலேயே கிடைக்கும் மூங்கில்களைக் கொண்டு வனையப்படும் கூடைகளைக் குறவர் இன மக்கள் அன்றாடம் விற்பனை செய்வதைக் காணலாம். (பொருட்களைச் சேகரம் செய்து வைக்கவும், பழக்கூடை, பூஜைக்கூடை, விளையாட்டுப் பொருட்கள் எனப் பல்வேறு வடிவங்களில் மூங்கில் தயாரிப்பு பிரசித்து பெற்று விளங்குகிறது. நெகிழி எனப்படும் பிளாஸ்டிக் பைகளுக்குப் பதில் மூங்கில் கூடைகளைப் பயன்படுத்துவது சிறப்பு.

**பாய் முடைதல்**

(கோரைப்பாய்- இதன் தனிச்சிறப்பு கோடைக்காலத்தில் குளிர்ச்சியையும், மழைக்காலத்தில் வெப்பத்தையும் தர வல்லது.)இதுமட்பாண்டங்கள்

(தற்காலத்தில் மண்பானையில் தண்ணீர் சேகரித்துக் குடித்தால் உடலுக்குக் குளிர்ச்சி என்ற கருத்து மக்களிடையே பரவி இருப்பதால் மண்பானையில் திருகு குழாய் வைத்து செய்யப்பட்ட மண்பானைகள் சாலையோரங்களில் விற்பனைக்கு வைக்கப் படுகின்றன)

**கரிகிரி மட்பாண்டங்கள்**

வேலூரில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கரிகிரி என்னும் கிராமத்தில் சீனக் களிமண்ணில் செய்யப்படும் புகழ்பெற்ற கரிகிரி மண்பாண்டங்கள் தயார் செய்யப்படுகின்றன.

சுமார் 400 வருடங்கள் முன்பு ஆற்காடு நவாப்களின் ஆதரவில், அவர்களுக்காக இந்த மட்பாண்டங்கள் தயார் செய்யப்பட்டன.

சில குடும்பங்கள் மட்டும் ஈடுபட்ட இந்த தொழில் தற்பொழுது அழியும் தருவாயில் உள்ளது. நீர்க் குவளையின் உள்ளே ஊற்றப்படும் நீர் திரும்ப மேல் வழியாக வருவதில்லை; அதன் நீர் ஊற்றும் துவாரத்தின் வழி மட்டுமே வரும்.

ஆற்காடு நவாப்களின் உணவுப் பாதுகாப்புக் காரணங்களுக்காக இதைப் போன்ற மண் பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. நீர்குவளைகள் தவிர மாய கிருஷ்ணன் மற்றும் சிவலிங்கம் போன்ற மண் பாண்டங்கள் செய்யப்பட்டுள்ளன. கிருஷ்ணர் அல்லது சிவலிங்க உருவம் பொறிக்கப்பட்ட மேல் பாகத்தில் ஊற்றப்படும் நீரானது ஒரு குறிப்பிட்ட உயரத்தை அடையும் வரை கீழ் வழி வருவதில்லை என்பதே இதன் சிறப்பு.

**பச்சை குத்துதல்**

உடலில் பச்சை 2வண்ணத்தில் வஊசி கொண்டு குத்திப் பல்வேறு வடிவங்களை வரைந்து அழகுபடுத்திக் கொள்வது பச்சை குத்துதல் எனப்படும்.)

87மார்பு, மேல் கை, முன்னங் கை, கால் போன்ற உடற் பகுதிகளில் பச்சை குத்தப் படுகிறது. குறவர் என்ற இனத்தைச் சேர்ந்தோர் பச்சை குத்தும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மஞ்சள் பொடியுடன் அகத்திக் கீரை சேர்த்து அரைக்கின்றனர். அதனை ஒரு துணியில் கட்டி, தீயிலிட்டு எரித்துக் கரியாக்கிக் கொள்கின்றனர். நீர் கலந்து அதனைப் பசையாக்குகின்றனர்.

கூர்மையான ஊசியினால் அந்தப் பசையைத் தொட்டுத் தோலில் குத்திக் குத்தி எடுத்துத் தேவையான உருவங்களை வரைகின்றனர். பச்சை குந்தப்பட்ட பின் சுடுநீரால் கழுவி அதனைச் சுத்தம் செய்கின்றனர். இப்பொழுது பச்சை குத்திய இடம் அழகாகத் தோற்றம் அளிக்கும். இது எந்நிலையிலும் அழியாது.

தெய்வ வடிவங்கள், கோலங்கள், தேள், பாம்பு போன்ற உருவங்கள். பெயர்கள் போன்றவை பச்சை குத்துதலில் இடம் பெறுகின்றன. குறிப்பாகப் பெண்கள் அழகிற்காகவும் அடையாளத்திற்காகவும் இக்கலையைப் பயன்படுத்தி வருகின்றனர். அரசியல் தலைவர்கள், சின்னங்கள், திரைப்பட நடிக, நடிகையர் படங்களைப் பச்சை குத்திக் கொள்ளும்பழக்கம் இன்றைய இளைஞர்களிடம் காணப்படுகிறது.

தற்பொழுது மருதாணிப் பசை கொண்டு இத்தகைய உருவங்கள் அச்சினால் உடலில் வரையப் படுகின்றன. இதனால் பச்சை குத்துதல் கலை இன்று வழக்கொழிந்து வருகிறது. இக்கலை தமிழகத்தில் மட்டுமல்லாது ஆசியாவின் பிற பகுதிகளிலும் அமெரிக்கா, நியூசிலாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலும் பரவிக் காணப்படுகிறது. ஜப்பானியரின் அக்குபஞ்சர் மருத்துவ முறையானது பச்சை குத்துதல் கலையோடு தொடர்பு படுத்திக் காணத் தக்கதாகும்.

**கொம்பு சார்ந்த கலைப் பொருட்கள்**

நாடோடி வாழ்க்கை நடத்தும் தொம்பர் இன மக்கள் மூங்கிலினால் உருவாக்கப்பட்ட பொருட்கள், மரச் சீப்புகள், மாட்டுக் கொம்புதங்களது பரம்பரைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

இவர்கள் சல்லிக் கட்டுக் காளைகளின் கொம்புகளைச் சீவிக் கூர்மைப்படுத்துதல், காடுகளில் தாமாக இறந்து போன காட்டு எருமைகளின் கொம்புகள், அவற்றின் எலும்புகளைச் சேகரித்துப் பக்குவப் படுத்திக் கலைப் பொருட்களா ழ்க்ய்தல் போன்றவற்றின் ஒதும் பக்குவப் படுத்தி கலைய தங்களின் வாழ்க்கையை நடத்தி வருகின்றனால் மாட்டுக் கொம்பினைக் கொண்டு மயில், கொக்கு, புறா போன்ற உருவங்களைக் கலை நேர்த்தியுடன் செய்கின்றனர்.

கொக்கு ஒற்றைக் காலில் நிற்பது, தாய்க் கொக்கு உணவினைக் தஞ்சுக்கு ஊட்டுவது. கொக்கு வாயில் மீனைப் பிடித்துக் கொண்டு இருப்பது, பறவைகள் பறப்பது போன்ற வடிவங்களில் கொம்பு சார்ந்த கலைப் பொருட்கள் உருவாக்கப் படுகின்றன. இவற்றை வீட்டு அலங்காரப் பொம்மைகளாகப் பலர் வாங்கிச் செல்கின்றனர்.

**தசரா முகமூடிகள்**

**த**சரா முகமூடிகளை உருவாக்கும் கலைஞர்கள் பாணர் என அழைக்கப் படுகின்றனர். முகமூடி செய்வதைத் தங்கள் பரம்பரைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

(முகமூடிக்கான அச்சுகளைப் பாணர்கள் களிமண் கொண்டு செய்கின்றனர். களிமண் அச்சின் மீது காகிதங்களை ஒட்டி, வண்ணமிட்டு முகமூடிகள் தயாரிக்கின்றனர்)

**மரப்பாச்சி**

மரப்பாச்சி என்பதற்கு மாப் பொம்மை மரப் பாவை என்பது பொருளாகும். கோயில்களுக்கு அருகில் உள்ள கடைகளில் மாப்பா பொம்மைகள் பெண்குழந்தைகள் மரப்பாச்சி பொம்மைகளின் மேல் மிகுந்த விருப்பம் விற்கப்படுகின்றனர். குழந்தைகள் கொண்டு வாங்கி, விளையாடி மகிழ்கின்றனர். குறிப்பாகப்

மரப்பாச்சிகள் அழகிய வேலைப்பாடுகளோடு மிக நேர்த்தியாகம்செய்யப்படுகின்றன. வண்ணம் பூசப்பட்டும், வண்ணம் பூசப்படாமலும் மரப்பாச்சிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

பெண்ணிற்கு நீண்ட நாட்களாகத் திருமணம் ஆகவில்லை என்றால் ஒரு சோடி மரப்பாச்சி பொம்மைகள் வாங்கி வந்து அவற்றிற்குத் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் காணப்படுகிறது. அவ்வாறு செய்தால் பெண்களுக்கு விரைவில் திருமணம் கூடும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.

**தேர்ச் சிற்பங்கள்**

மரங்களை வைத்துத் தேர் செய்யும் மரபு தமிழகத்தில் நூற்றாண்டுகளாக வழக்கிலிருந்துள்ளது. மரத் தேர்களின் அடிப்படையில் தான் கல்தேர்கள் என்னும் ஒற்றைக்கல் ரதங்கள், பல்லவர்களால் மாமல்ல புரத்திலும்,பாண்டியர்களால் கழுகு மலையிலும் அமைக்கப்பட்டன. இருப்பினும் பழங்காலத்தில் அமைக்கப் பட்ட தேர்களைக் முடியவில்லை. இருப்பினும் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் தேர்கள் அக்காலத்தில் இருந்தமைக்கான செய்திகள் உள்ளன.அவை நெடுந்தேர், பொற்றேர், கொடிஞ்சி நெடுந்தேர், கொடித்தேர் அணிகொள்தேர் என்றெல்லாம் அழைக்கப்பட்டிருக்கின்றன.சிலப்பதிகாரம் புத்தக் கடவுளுக்கு என்று தேர்த்திருவிழா நடைபெற்றதைக் குறிப்பிடுகிறது. காண2.5
தேரின் பயன்பாடு

தற்போது பெரும்பான்மையான கோயில்களில் தேர்கள் உள்ளன. இடைக் காலத்திலிருந்து இன்றுவரை செய்து அவை பட்டவையாகும். பல கோயில்களின் தேர்கள் விசயநகர நாயக்கர் ஆட்சிக் வைக்கப் செய்விக்கப்பட்டவை ஆகும். திருவிழாக் காலங்களில் காலத்தில் இறையுருவங்களை வீதிகளுக்கு எடுத்துச் செல்லவே கோயில் போன்ற இத்தேர்கள் 866 தேர்கள் இருப்பதாகக் கணக்கெடுப்பு அறிக்கை கூறுகிறது.

**தேரின் அமைப்பு**

இந்த நடமாடும் கோயில்கள் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட கனமான சக்கரங்களைக் கொண்டவையாகும். இவற்றின் மூன்று பக்கங்களிலும் இறையுருவங்களும், புராணக்கதைத் தொகுதிகளைக் காட்டும் சிற்பத் தொகுதிகளும், மிருகங்கள், செடி கொடிகள் ஆகியவற்றின் உருவங்களும், ஆங்காங்கே பக்தர்கள் மற்றும் கொடையாளிகளின் உருவங்களும் செதுக்கப் பட்டிருப்பதைக் காணலாம். திருவிழாக் காலங்களில் அவற்றின் மீது எண்ணெய் பூசுவதால் இச்சிற்பங்கள் அழகாகக் கற்சிற்பங்கள் போன்று கருமை நிறத்தில் காட்சியளிக்கும்.

**தேரிலுள்ள சிற்பங்கள்**

தமிழகத்துத் தேர்களில் முக்கியத் தட்டுகளில் உள்ள சிற்பங்கள் எட்டு அங்குலம் முதல் இரண்டரை அடி உயரமுள்ளனவாக அமைந்துள்ளன. சிற்றுருச் சிற்பங்கள் ஆறு அங்குலம் உயரம் உடையனவாகும். தேரின் அச்சுப் பகுதியில் கணபதி, முருகன், பூத கணங்கள் ஆகியோரின் உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் தேர்களின் பாதுகாவலர்களாகக் கருதப்படுகின்றனர். தேர்களில் அதிட்டானப் பகுதிகளில் இந்து சமயத் தொன்மக் கதைகளும், மக்களின் அன்றாட வாழ்க்கை முறைகளைச்சித்திரிக்கும் செய்திகளும், சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. தேரின்

பீடத்தில் நாட்டியப் பெண்கள். இசைக் கருவிகளை மீட்டுவோர். ஆச்சார்ய புருஷர்கள், அஷ்டதிக் பாலகர்கள், கஜலட்சுமி ஆகியோரின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**வாகனங்கள்**

கோயில்களில் திருவிழாக் காலங்களில் இறையுருவங்களை வீதி உலாவிற்கு எடுத்துச் செல்வதற்காக அந்தந்த இறையுருவத்திற்குத் தொடர்பான வாகனங்கள் மரத்தினால் செய்யப் பட்டன. தஞ்சாவூருக்கு அருகில் ஒரு கிராமத்தில் இன்றும் வாகனங்கள் செய்யும் தொழில் நடைபெற்று வருகின்றது.அங்கு அன்னம், மயில், சிங்கம், நந்தி, கருடன், யானை, காமதேனு போன்ற வாகனங்கள் செய்விக்கப் பட்டுக் கோயில்களுக்கு விற்பனை செய்யப் படுவதைக் காணலாம். இவ்வாகனங்கள் இந்து சமய மேல்தட்டுக் கருத்துகளுக்கும் நாட்டுப்புறக் கலைக்கும் பாலங்களாக அமைகின்றன. கோயில்களுக்குள் இறைவனின் கற்சிற்பங்களுடன் சேர்த்துச் செய்யப்படும் வாகனங்கள் அவ்விறைவனுக்கு நிகராகவே வணங்கப்படுகின்றன. இவை தற்காலிகமாக, முக்கியத் திருவிழாக்களில் மட்டுமே பயன்படுத்தக் கூடியனவாகும். இன்று பெரும்பான்மையான கோயில்களில் உள்ள வாகனங்கள் நானூறு ஆண்டுகளுக்கு உள்ளாகச் செய்விக்கப் பட்டவையாகும்.

**சுடுமண் சிற்பங்கள்**

தமிழகத்தில் உலோகச் சிற்பங்களுக்கு முன்பிருந்தே சுடுமண் சிற்பங்கள்செய்யப்பட்டு வந்துள்ளன. தமிழகத்தில் மட்டுமல்லாது பிற நாடுகளிலும் சிற்பங்கள் முதல் முதலாக மண்ணினால்தான் செய்யப்பட்டன. இந்தியாவில் சிந்து சமவெளியில் தோண்டி எடுக்கப்பட்ட புதைபொருள் சின்னங்களில் சுடுமண் சிற்பங்கள் கிடைத்துள்ளமை அவற்றின் பழைமையைத் தெளிவுறுத்துவதாக அமைகின்றது. சுடுமண் சிலைகள் இன்றைய சுடுமண் சிற்பங்களில் கிராமத்து நடனம், பறையடித்தல். ஜல்லிக் கட்டு என எது சிற்பியின் மனத்தைக் கவர்கிறதோ அது சிற்பமாக உருவாகிறது.

மூக்கையாவின் சுடுமண் சிற்பங்களில் அலங்காரங்கள் அதிக அளவில் காணப்படுவதில்லை. உருவங்களில் அங்க இலக்கணங்கள் மீறப்பட்டிருக்கும். சான்றாக இவரது படைப்பான பறையறையும் மனிதனது சிற்பத்தை எடுத்துக் கொண்டால் அவனது முகம் வெறும் உட்குவிந்த தட்டுப் போன்று இருக்கிறது. கனமான. எடுப்பான மூக்கும், உதடுகளும் தவிரக் கண், காது, தலைமுடி போன்றவை தெளிவின்றியே படைக்கப்பட்டு உள்ளன. கண்கள் இருக்கும் இடத்தில், அமைக்கப்பட்டு உள்ள குழியின் நிழல் கண்கள் இருப்பது போன்ற உணர்வைப் பார்வையாளர்களுக்கு ஏற்படுத்துகிறது.

பறை கொட்டுபவனின் பறையைத் தாங்கியுள்ள விரல்கள், உடம்பின் பிற உறுப்புகளை விடப் பெரியவையாகப் படைக்கப் பட்டிருக்கின்றன. இடையிலிருந்து மேற்பகுதியானது இடையிலிருந்து கீழ்ப்பகுதியை விடப் பெரிதாக இருக்கிறது.

ஜல்லிக் கட்டு எனும் சிற்பத்தில் காளை மாட்டின் வயிற்றுப் பகுதி பள்ளமாகக் குடைந்து எடுக்கப்பட்ட நிலையில் அமைக்கப்பட்டு உள்ளது. சண்டையிடும்

காளைக்குக் கனமான வயிறு தேவையில்லை என்பதால் தான் அதனை அவ்வாறு படைத்துக் காட்டியுள்ளார் மூக்கையா. எஸ். தனபாலின் 'தலை' (Head) என்னும் சுடுமண் சிற்பம் சிறப்புடையதாகும்.

## நாட்டுப்புறத் தெய்வங்கள்

நாட்டுப்பறக் கெய்வங்கள் என்பவை நாட்டுப்பற மக்களான கிராம மக்கள் வழிபடுகின்ற தெய்வங்களாகும். இந்தக் கெய்வங்களை நாட்டார் தெய்வங்கள் என்றும், சிறு தெய்வங்கள் என்றும் கூறுகின்றனர். இந்த நாட்டுப்பறக் கெய்வங்களின் வமிபாடு பெருந்தெய்வங்களின் வழிபாடுகளைப் போல் அல்லாமல் மாறுபட்டுள்ளது. இதனை சிறுதெய்வ வழிபாடு என்கின்றனர்.நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும்பாலும் தெலுங்கு, தமிழ் மொழி பேசுகின்றவர்களால் வழிபடப்படுகின்றன.

## தெய்வங்களின் தோற்றம்

நாட்டுப்புறத் தெய்வங்கள் தோன்றிய விதத்தினைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார் ஆறு. இராமநாதன். அவை வருமாறு, மனிதர்களின் அகால மரணத்திலிருந்து தோன்றுதல், வேள்விகளிலிருந்து தோன்றுதல், சிவபெருமான் - சக்தி உறவாலும், கேவர்கள் - அரக்கர்கள் கொடர்பாலம் கோன்றுகல் என மூன்று வகையான முறைகளில் நாட்டார் தெய்வங்கள் தோன்றுகின்றன.

இவற்றில் மனிகர்களின் அகால மாணக்கில் கோன்றும் நாட்டுப்பறத் தெய்வங்கள், தற்கொலையிலிருந்து தோன்றுதல்,கொலையிலிருந்து தோன்றுதல் என இரு வழிகளிலும், வேள்விகளிலிருந்து தோன்றும் நாட்டுப் புறத் தெய்வங்கள் சிவபெருமான் ஆணைப்படியும், மனிதர்கள் நடத்தும் வேள்வியிலிருந்ம் என மறைகளில் உருவாகின்றார்கள். பிறவழிகளான உடலுறவிலிருந்து தோன்றுதல் சிவபெருமான் சக்திதம்பதிகளின் மூலமாகவோ, தேவர்- அசுரர்- முனிவர்களின் உடலுறவாலும் தோன்றுகின்றன.

## குமரி முனையில் திருவள்ளுவர் சிலை

திருவள்ளுவர் சிலை என்பது திருக்குறள் எழுதிய திருவள்ளுவருக்கு தமிழ்நாடு அரசு குமரிக் கடலில், கடல் நடுவே, நீர் மட்டத்திலிருந்து 30 அடி உயரமுள்ள பாறை மீது அமைத்த 133 அடி உயரச் சிலை ஆகும். இந்த சிலை அமைக்கும் பணி 1990, செப்டம்பர் 6 இல் தொடங்கப்பட்டு 2000, சனவரி 1 இல் திறக்கப்பட்டது. விவேகானந்தர் நினைவு மண்டபம் நிறுவிய ஏக்நாத் ரானடே அதனருதே எனதய முழுத் திட்டம், வரைபடம் மற்றும் மதிப்பீட்டை அப்போதைய முதல்வர் து கருணாநிதியிடம் கொடுத்தார்.

1975ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திருவள்ளுவர் சிலை அமைக்கபூ திட்டமும் அறிவிக்கப்பட்டது. 1979ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி அப்போதைய ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி, பிரதமர் மொரார்ஜி தேசாய் தலைமையில் எம்.ஜி.ஆர் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கு அடிக்கல் நாட்டினார். 1990-91ல் நிதிநிலையில் சிலை அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1990 செப்டம்பர் 6 ஆம் நாள் சிலை அமைக்கும் பணியை முத்தமிழறிஞர் மு.கருணாநிதி தொடங்கிவைத்தார்.

மாமல்லபுர அரசு கட்டட மற்றும் சிற்ப கலைக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் கணபதி தலைமையில் சிலை செதுக்கும் பனி தொடங்கியது. ஆனால் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு கட்டுமானப்பணி கிடப்பில் போடப்பட்டது. 1997 இல் மீண்டும் புத்துயிர் பெற்று பணி விரைவு படுத்தப்பட்டது. சிலை அமைக்க கற்களை எடுத்து செல்ல கொச்சியிலிருந்து 'பாண்டூன்' என்ற படகு ஒன்று வாங்கப்பட்டது. மொத்தம் 3,681 கற்கள் பயன்படுத்தி ஆதாரப் பீடம் அமைக்கப்பட்டது. முகம் 10 அடி உயரம்.40 அடி உயரத்தில் கழுத்து இடுப்பு பகுதிகள், 40 அடி உயரத்தில் இடுப்பு முதல் கால்பாதம் வரையும், கொண்டை பகுதி 5 அடியிலும் அமைக்கப்பட்டு திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தை எட்டியது. மொத்தம் 6.14 கோடி செலவில் பணியாளர்கள், சிற்பிகள், உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் என 150க்கும் மேற்பட்டவர்கள் நாளொன்றிற்கு 16 மணி நேரம் உழைப்பில் உருவானது.

சிலையின் இடுப்பு வளைவு சற்று சவாலாக இருந்தாலும் நவீன அறிவியல் துணையோடு வாஸ்துசாஸ்திரப்படி இதனை மர மாதிரி உருவாக்கி அதன் எடை மையத்தை அளந்து அதன் பின்னர் கட்டப்பட்டது.

கன்னியாகுமாரி, அம்பாசமுத்திரம் மற்றும் சோழிங்கநல்லூர் எனசிலைக்கூடங்களில் பணிகள் எடை நடைபெற்றன. கொண்ட கற்களும், மூன்று அம்பாசமுத்திரத்திலிருந்து 5000 டன் சோழிங்கநல்லூரிலிருந்து 2000 டன் தரமான கருங்கற்களும் வந்தன. 13 அடி நீளமும் 15 டன் எடையும் கொண்ட பெரிய கற்கள் மட்டும் 1681 ஆகும் மற்றவை மூன்றிலிருந்து எட்டு டன் எடை கொண்டவை, காது, ஒரே கற்களாகும். பனைமரமும், சவுக்கு மரமும், இரும்புக் கம்பிகளும், சாரங்கட்டப் பயன்பட்டது. மொத்தம் 18,000 சவுக்கு மரங்கள் இரண்டு தூக்கந்து கொள்ளளவு கொண்ட கயிற்றால் மழு சாரமும் சுட்டப்பட்டது. 2000 ஜனவரி 1ம் தேதி நிலையைத் திறந்து வைத்தார்.

**சிலை அமைப்பு**

திருவள்ளுவர் சிலை பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட பல மாடிக் கருங்கற்களால் ஆன சிலை கிடையாது.சிலையினுள் 130 அடி உயரம் வரை வெற்றிடம் உள்ளது. இந்த வெற்றிடம் சிலையின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தும் நுட்பமுடையது. கல்லால் ஆன உத்திரங்களும், கட்டாயங்களும் பரவப்பட்டு சிலை எப்பக்கத்திலும் செய்யப்பட்டுள்ளது. சாய்ந்து விடாது நேரே நிற்குமாறு உறுதி

பீடத்தின் 38 அடி உயரமானது திருக்குறளின் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களையும், பீடத்தின் மேல் நிற்கும் 95 அடி உயரச் சிலையானது திருக்குறளின் பொருள் மற்றும் இன்பத்துப்பாலின் 95 அதிகாரங்களையும் குறிப்பதாகத் திகழ்கின்றது. மண்டபத்தின் உட்புறச் சுவற்றில் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்து ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் அவற்றுக்கு நிகராக ஆங்கில மொழி பெயர்ப்பிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

**சிலை குறிப்புகள்**

மொத்த சிலையின் உயரம் - 133 அடி

சிலையின் உயரம் -95 அடி

பீடத்தின் உயரம் 38 அடி98

பையன் / பாரம்பரியம்

சிலையின் உருவாக்கம் - 3 டன் முதல் 8 டன் வரை எடை கருங்கற்களைக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

சிலையின் மொத்த எடை -7,000 டன்

சிலையின் எடை 2,500 டன்

பீடத்தின் எடை - 1,500 டன்

பீடத்தைச் சுற்றி அமைத்துள்ள மண்டபத்தின் எடை - 3.000 L

**சிலை அளவுகள்**

முக உயரம் 10 அடி

கொண்டை - 3 அடி

முகத்தின் நீளம் -3 அடி

தோள்பட்டை அகலம் 30 அடி

கைத்தலம் -10 அடி

உடம்பு (மார்பும் வயிறும்)-30 அடி

இடுப்புக்குக் கீழ் தொடை மற்றும் கால் -45 அடி

கையில் ஏந்திய திருக்குறள் ஏட்டின் நீளம் -10 அடி

**பராமரிப்பு**

2004 டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியின் போதும் நிலநடுக்கத்த போதும் பாதிப்பின்றி இச்சிலை எதிர்கொண்டுள்ளது. உப்புக் காற்றிலிருந் சிலையைப் பாதுகாக்க எப்போசைட் என்ற ரசாயனக் கலை நான்காண்டுகளுக்கு ஒருமுறை பூச வேண்டும் என்று ஸ்தபதி கணந் பரிந்துரைத்தார். மேலும் சிலை முழுவதும் படிந்துள்ள உப்பை உறிது காகிதக்கூழ் பூசப்பட்டது உப்பு நீக்கப்படும். அதன் படி

இச்சிடைபராமசிக்கப்படுகிறது. இவ்வகையில் நான்காவது புதுப்பிக்கும் பணி 2017 அக்டோபர் 15 ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது.

**இசைக் கருவிகள்**

இருவகைப்படும். குரலால் பாடப்படுவது மிடற்றிசையாகும். கருவிகளால் இசைக்கப்படுவது இக்கருவிகள் பயன்படுகின்றன.

இசைக்கு மேலும் செறிவூட்டும் வகையில் அமையும் பொழுது இவற்றைத் துணைக்கருவிகள் என்பர். இசையில் அமையும் பொலங் இதான்றுவதற்கு இசைக் கருவிகளே துணை புரிந்துள்ள புதிய நாற்றிற்கும் மேலாக இசைக் கருவிகள் இந்தியாவில் உள்ளன. இவற்றில் கண்டறிருளாயிரு நூற்றைம்பது இசைக் கருவிகள் தமிழகத்தில் உள்ளன. இத்தகைய இசைக்கருவிகளை இசைக்கும். தரத்திற்கும் ஏற்ப வகைப்படுதியுள்ளனர். இவற்றைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்று வகைப்படுத்துவர்.

**தோற்கருவி**

இசையின் உயிராகத் தோற்கருவிகள் விளங்குகின்றன. தோலால் போர்த்தப்பட்ட கருவிகள் தோற்கருவிகள் என்று அழைக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் செய்தி அறிவிக்கத் தோற்கருவிகளே பயன்படுத்தப்பட்டன.

போர்ப்பறைகளாகவும், இறைவழிபாட்டுக்கருவியாகவும், அரசா ணைகளைத் தெரிவிக்கவும், இசை நிகழ்ச்சிகளுக்கும் இக்கருவிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

உடுக்கை, உறுமி, கஞ்சிரா,கடம், கிணை, தண்ணுமை, தவில், பம்பை, பறை,மிருதங்கம், முரசு போன்ற தோற்கருவிகள் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. இவை கருங்காலி, செங்காலி, வேம்பு, பலா, உலோகம், மண் போன்றவற்றால் செய்யப் படுகின்றன. ஆவின் தோல். ஆட்டுத்தோல், காளையின் தோல் போன்றவற்றால் போர்த்தப்படுகின்றன. தோல்களை இறுக வளைத்துக்கட்ட தோல் வார்களைப் பயன்படுத்த வருகின்றனர்.

**துளைக் கருவி**

துளைக் கருவிகள் தொன்மையான இசைக் கருவிகளாகும். இதலை இயற்கை தந்த இணையற்ற கருவி என்பர். வண்டு துளைத்த மூங்கில் மரத்தின் வழியாகக் காற்றுச் செல்கையில் எழுந்த இனிய ஓசையைக் நேட்டு மரத்தின்அடிசியாக மற்ற இவ்விசைக் கருவிகளை உருவாக்கினர். முல்லை நிலத்து மக்கள் கண்ட கருவியாகக் குழல் உள்ளது.

குழல் கருவிகளாக நாதசுரம், புல்லாங்குழல், கிளாரினெட், ஒத்து ஆர்மோனியம், கொம்பு, முகவீணை போன்ற கருவிகள் உள்ளன.

**நரம்புக் கருவி**

நரம்புக் கருவியைத் தந்தி வாத்தியம் என்பர். யாழ், வீணை, தம்புரா பிடில் போன்ற கருவிகள் நரம்புக் கருவிகளாகும். துளைக்கருவி ஆயர்கு மக்கள் தந்தது போல் நரம்புக் கருவிகளை வேடுவர்கள் வழங்கினர்.

**கஞ்சக்கருவி**

உலோகத்தால் செய்யப்பட்ட சுருவிகளைக் கஞ்சக் கருவி என்பர் கைத்தாளம், பிரும்மதாளம், எலத்தாளம், குழித்தாளம்,சல்லரி போன்று கருவிகளைக் கஞ்சக்கருவி என்பர். இவை வெண்கலம் என்னும் உலோகத்தால் செய்யப்படுகின்றன. மங்கல இசைக்குழு, தேவார இசைக்குழு, ஆடலிசைக் குழுவில் இன்றும் இவற்றைப் பார்க்கலாம். அரிகதை செய்வோர், பசனைக்குழு போன்றோரிடமும் இத்தகு கருவிகளைக் காணலாம். ஓசையமைதிக்கேற்பச் சிறிய, பெரிய, அகலமுள்ள தாளங்கள் அமையும். இரு கைகளிலும் ஏந்தித் தட்டும் பொழுது ஓசை அதிர்வு தடைபடாத வகையிலும் கையில் பிடித்துக் கொள்ளும் வகையிலும் சுயிறு கட்டப்பட்டு இருக்கும்

மிருதங்கம்

மிருதங்கம் அல்லது தண்ணுமை என்பது தென்னிந்தியாவில் பயன்படுத்தப்படும் ஒரு தாள வாத்தியமாகும். மிகப்பெரும்பாலான கருநாடக முக்கியமாக இடம்பெறும் . மிருதங்கம் தொன்மையான வரலாற்றைக் இசைக்கருவி சிந்துவெளி நாகரீக காலத்திலும் புழக்கத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.

'மதங்கம்' என்னும் பழந்தமிழ்ச் சொல்லின் திரிபே 'மிருதங்கம்' என்னும் வடமொழிச் சொல் எனக் கருதுகிறார்கள். தமிழின் 'மெது' என்பதே 'மிகுது' எனத் திரிந்தது.

பெரும்பாலும் பலாமரக் குற்றியைக் குடைந்து இக்கருவி செய்யப்படுகிறது. இது. இதன் வட்டவடிவ முனைகளில், ஒருமுளை, மற்றமுனையிலும் சற்றுப் பெரிதாகவும் நடுப்பாகம் இவ்விரு முனைகளின் அளவிலும் உருளை சற்றுப் பெரிய விட்டமுள்ளதாகவும் அமைந்த ஒரு பொள் வடிவினதாக அமைந்துள்ளது. திறந்த இரண்டு முனைகளும் தோலினால் மூடப்பட்டிருக்கின்றன. இத் தோற்பகுதிகள் இரண்டும் தோலினாற் செய்த பிணைக்கப்பட்டுள்ளன. வார்களினால் ஒன்றுடனொன்று இழுத்துப் வலது பக்கத்தோலில் "சோறு" என்று அழைக்கப்படும் ஒரு கரு நிறப் பதார்த்தம் நிரந்தரமாக ஒட்டப்பட்டிருக்கும். மறுபக்கத்தில் வாத்தியத்தை வாசிப்பதற்குச் சற்று முன்னர், மாவும் நீரும் கலந்த ஒரு கலவை தடவப்படும். நிகழ்ச்சி முடிவடைந்ததும் இது நீக்கப்படும். மிருதங்கம் இருந்த நிலையிலேயே வாசிக்கப்படுவது வழக்கம்.

## யாழ்

யாழ் என்பது பண்டைய இசைக்கருவிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தது ஆகும். யாழ் என்பதற்கு நரம்புகளால் யாக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்பது பொருள். நரம்புக் கருவியாகிய யாழே, தமிழர் வாசித்த முதல் இசைக் கருவியாகும். நரம்புக் கருவிகளின் வளர்ச்சிக்குக் காரணமான ஆதி கருவி யாழ். இக்கருவி முற்றிலுமாக மறைந்து அதன் வழி வந்த வீணை இன்று நரம்பிசைக் கருவிகளில் முதன்மையிடம் வகிக்கிறது. 14/ பாரம்பரியம்

## யாழின் வரலாறு

இந்தியாவின் காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலில் இசைக்கும் சிற்பம் உள்ளது. இது கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது

குறிஞ்சி நிலத்தில் வில்லில் முறுக்கேற்றிக் கட்டப்பெற்ற நாணிலிருந்து அம்பு செல்லும்பொழுது தோற்றுவாயாக வேண்டும். இந்த வில்லே வில்யாழாக மலர்ந்தது. பதிற்றுப்பத்து, வில்யார் முல்லை நிலத்திலேயே முதலில் தோன்றியது என்று கூறினாலும், குறிஞ்ர் நிலத்தில் தோன்றியது என்பதே பொருத்தமுடையது. ஏனெனில் குறிலு நிலத்தில் தான் வேட்டைத் தொழில் மிகுதியாக நடைபெற்றது. இந்த வில்யாழ் மனிதனின் முயற்சியால், உழைப்பால் பல்வகை யாழாக மலர்ந்தது

யாழின் வடிவத்தைத் துல்லியமாக அறியப் போதிய சிற்பங்களோ ஓவியங்களோ இன்று நம்மிடம் இல்லை. சங்க இலக்கியங்களான புறநானூறு, கலித்தொகை, பரிபாடல் மற்றும் ஆற்றுப்படை நூல்களிலும்திருக்குறளிலும் சிலப்பதிகாரம், பெருங்கதை, சீவகசிந்தாமணி முதலிய நாப்பியங்களிலும் பக்தியிலக்கியங்களிலும் யாழ் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. என்றாலும் யாழின் வகைகளைப் பேரியாழ், சீறியாழ், மகரயாழ், சகோடயாழ் என்று அறிய முடிகிறதே ஒழிய அதன் வடிவிளை அறிய முடியவில்லை.

பல்லவர் காலக் கோயிலான காஞ்சி கைலாசநாதர் கோயில் (இராஜசிம்மன் மற்றும் சோழர் காலக் கோயில்களான பொன்செய் நல்துணையீஸ்வரம் கோயில் (பராந்தகன்), திருமங்கலம் கோயில் (உத்தம சோழன்) ஆகியவற்றில் யாழ்ச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

## யாழ் கருவியின் வளர்ச்சி

வில்லின் அடியாகத் தோன்றிய வில்யாழ் முதலில் குறிஞ்சி நிலத்தில் தோன்றியது என்றாலும் நாளடைவில் முல்லை, மருதம், நெய்தல்,பாலை என்ற நான்கு நிலங்களுக்கும் உரியதாக அமைந்தது.யாழினை இசைப்பதற்கென்றே 'பாணர்' என்ற குழு இருந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். யாழ் மீட்டுவதையே தொழிலாக உடையவர்கள் என்றாலும் அவர்கள் யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப்பாணர் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டனர். அதில் யாழ்ப்பாணர், இசைக்கும் யாழின் அடிப்படையில் பெரும்பாணர், சிறுபாணர் என்று பகுக்கப்பட்டனர். யாழ் இசைக் கலைஞர்களான பாணர்கள் பெயரிலேயே இரண்டு சங்கநூல்கள் தோன்றியுள்ளதில் இருந்து யாழ் மற்றும் பாணர்களின் மதிப்பை அறியமுடிகிறது.

அந்நூல்களில், மன்னர்கள் பாணர்களைப் போற்றியும், புரந்தும் வந்துள்ளமையைக் காட்டுகின்றன. யாழ் பாடிக் கொண்டே இசைக்கும் கருவியாக இருந்துள்ளது. சாதாரண மக்களிடம் புழக்கத்தில் இருந்த யாழ் ஒரு காலகட்டத்தில் தெய்வத்தன்மை பெற்று வணக்கத்திற்கு உரியதாக மாறியது.

தமிழர்கள் யாழினின்று எழும் இசைக்கே முதன்மை அளித்தனர். அதனாலேயே ஒரு நரம்பில் தொடங்கி மூன்று, ஐந்து,ஏழு..... என்று ஆயிரம்நரம்புகள் கொண்ட யாழ் உருவாகியது. தொடக்கத்தில் வடிவம் பற்றிய சிந்தனை இல்லையென்றாலும் பின்னர் மகரயாழ், செங்கோட்டுயாழ் எனப் பல வகையான யாழ்கள் தோன்றின. இவ்வாறாக யாழ் கி.பி.9-ஆம் நூற்றாண்டுவரை பலவகையாக வளர்ந்தது. இதற்குப் பிறகு வடிவில் ஓரிரு வேறுபாடுகள் கொண்டு வீணையாக வளர்ச்சி கண்டது. அந்த வீணையே இசையுலகில் இன்றளவும் முதலிடம் வகிக்கிறது.

**யாழின் அமைப்பு**

யாழ் ஒரு மீட்டி வாசிக்கக்கூடிய நரம்புக்கருவி. இதன் இசையொலி பெருக்கி (resonator) தணக்கு எனும் மரத்தால் செய்யப்பட்டது. இது படகு வடிவமாய் இருக்கும். மேலே தோலால் மூடப்பட்டிருக்கும். இந்தத் தோலுக்குப் போர்வைத்தோல் என்று பெயர். போர்வைத்தோலின் நடுவிலுள்ள மெல்லிய குச்சியின் வழியாக நரம்புகள் கிளம்பி மேலே உள்ள தண்டியுடன் பிணைக்கப்பட்டிருக்கும். சில யாழ்களில் மாடகம் அல்லது முறுக்காணிகள் இருந்தன. அத்தகைய யாழ்களில் நரம்புகள் தண்டியின் துவாரங்களின் வழியாகச் சென்று முறுக்காணிகளில் சுற்றப்பட்டிருக்கும். சிலவற்றில் நரம்புக்கட்டு அல்லது வார்க்கட்டு தண்டியில் வரிசையாகக் காணப்படும். வார்க்கட்டுகளை மேலும் கீழுமாக நகர்த்தி நரம்புகளைச் சுருதி கூட்டினர். சங்க

**நூல்கள் யாழின் உறுப்பு**

- பத்தல்
- வறுவாய்
- யாப்பு
- பச்சை
- போர்வை
- .துரப்பமை ஆணி
- உந்து
- நரம்பு
- கவைக்கடை
- மருப்பு
- துவவு

ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன. பற்றுக் கூறுகிறது. தோன்றிய கல்லாடம் என்னும் நூல்

- ✓ வில் யாழ் (21 நரம்புகளை உடையது)
- ✓ பேரியாழ் (21 நரம்புகளை உடையது)
- ✓ மகர யாழ் (17 அல்லது 19 நரம்புகளை உடையது)
- ✓ சகோட யாழ் (16 நரம்புகளை உடையது)
- ✓ கீசக யாழ் (100 நரம்புகளை உடையது )
- ✓ செங்கோட்டி யாழ் (7 நரம்புகளை உடையது)
- ✓ சீறி யாழ் (7 நரம்புகளை உடையது)

இவற்றைவிட நாரதயாழ் (1000 நரம்புகளை உடையது). நாரத பெரியாழ், ஆதிகால பெரியாழ் (100 நரம்புகளை உடையது), தும்புருயாழ். மருத்துவயாழ் (தேவ யாழ்), ஆதியாழ் (1000 நரம்புகளை உடையது), கிளி யாழ், வல்லகியாழ், குறிஞ்சி யாழ், பாலை யாழ், மருத யாழ், முல்லை யாழ் எனப்பல வகைகள் இருந்ததாக பண்டைய நூல்கள் கூறுகின்றன. மகர யாழ் யவன தேசத்திலிருந்து எடுத்துவரப்பட்டதாகக் கூறப்படுகிறது. மகர யாம் குளம் அ.இராகவன் என்பவர் தனது நூலில் வகையான யாழ்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

**யாழ் நூலில் கூறப்படும் யாழ் வகைகள்**

வில் யாழ்
சீறி யாழ்
செங்கோட்டி யாழ்
பேரி யாழ்
சகோட யாழ்
மகர யாழ் (வேல்கொடி யாழ், காமன் கொடி யாழ், வர்ணர் ஊர்தி யாழ்)
கோவை தமிழ் செம்மொழி மாநாட்டில் நடைபெற்ற கண்காட்சியில் 700 ஆண்டுகள் பழைமையான சில யாழ்கள் காட்சிப்படுத்தப்பட்டன. அவை,
109செங்கோட்டு யாழ்
எருது யாழ்
மயில் யாழ்
மயூரி யாழ்

**யாழ் வாசிக்கும் முறை**

யாழில் உள்ள ஒவ்வொரு நரம்பும் ஒவ்வொரு சுரத்துக்குச் சுருதி கூட்டப்பட்டிருக்கும். சுத்தவெகளே அதில் வாசிக்கமுடியம், யாமைச் சுந்த மேளமாகிட்டி ருக்கும் ஒத்த அங்கது ஹரிகாம்போஜி மேளத்துக்கு முதலில் சுருதி கூட்டி, பின்னர் வேறு இராகங்களைக் கிரகபேதம் செய்து வாசித்தனர்.

**யாழின் வீழ்ச்சி**

யாம் கற்போது செல்வாக்கிழந்து வழக்கொழிந்தும் விட்டது. வீணையின் வரவோ யாழின் செல்வாக்கையழித்தது என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். யாழ் பல நூற்றாண்டுகள் உருவத்தில் முன்னேற்றம் அடைந்து வீணையாக மாறியது என்ற கருத்தையும் இவர்கள் தெரிவிக்கிறார்கள். நுட்ப சுருதிகளை வாசிக்கக்கூடியது வீணை. அத்துடன் உலோகத் தந்திகளோடு கூடிய மெட்டுக்கள் உள்ளது வீணை. யாழைக் காட்டிலும் வாசிப்பதற்குச் சுலபமானதும் அதே சமயத்தில் ஒலிக்கும் நாகம் அற்புதமாகவும் இருந்ததால், வீணையின் வரவு யாழின் செல்வாக்கைக் குறைத்தாலும், வீணையும் யாழும் சேர்ந்தே பல நூற்றாண்டுகள் இருந்திருக்கின்றன எனக் கருதப்படுகின்றது.

**நாதசுவரம்**

நாதசுவரம் என்பது துளைக்கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக்கருவியாகும். இது நாதசுவரம், நாதசுரம், நாகசுரம், நாகஸ்வரம். நாயனம் என்று பலவாறு அழைக்கப்படுவது உண்டு. சிறப்பாகத் தென்னிந்தியா, இலங்கை போன்ற இடங்களிலும், தென்னிந்திய இனத்தவர் வாழும் உலகின் பிற பகுதிகளிலும் இந்த இசைக்கருவி வழக்கில் உள்ளது. திறந்த இடத்தில் இசைப்பதற்கு ஏற்றது. வெகு தூரத்தில் இருந்து கேட்டாலும் இன்பத்தைத் தரும் இயல்பினைக் கொண்டது.

நாதஸ்வரம் தென்னிந்தியாவில் இது ஒரு மங்கலமான இசைக்கருவியாகக் கருதப்படுவதனால், பொதுவாக எல்லாவகையான நன் நிகழ்வுகளிலும் இதற்கு ஒரு இடம் உண்டு. வசதியான பெரிய கோயில்களில் அன்றாடம் இது பல தடவைகள் இசைக்கப்படுவது வழக்கம். ஏனையவற்றில் சிறப்பு வழிபாட்டு நிகழ்வுகளின் போது பயன்படுகின்றது. தவிரவும், தனிப்பட்டவர் களின் திருமணம், பூப்புனித நீராட்டுப் போன்ற நிகழ்ச்சிகளிலும், சமய சார்பற்ற பல பொது நிகழ்வுகளிலும் நாதசுவரம் சிறப்பிடம் பெறுகின்றது.

**ஒத்து**

நாதசுரத்திற்கு சுருதி கருவியாக விளங்குவது ஒத்து என்ற நாதசுவரத்தைப் போன்றவடிவமுள்ள ஒரு கருவி. இதிலிருந்து ஆதார சுருதி மட்டும் தான் வெளிவரும். இதனை ஒருவர் வாயில் வைத்து, தொடர்ச்சியான ஒலியை எழுப்பி வருவார். இன்று இந்தக்கருவிக்குப் பதிலாக சுருதிப்பெட்டி பயனபடுத்தப்படுகின்றது.

**பெரியமேளம்**

நாதசுவரத்துக்கு தாளக் கருவியாக அமைவது தவில் (அல்லது தவுல் ) என்ற தோற்கருவியாகும். இதனால் நாதசுவர இசைக்கலைஞர்கள் பொதுவாகத் தவில் இசைக் கலைஞருடன் சேர்ந்து குழுக்களாகவே செயல்படுவது வழக்கம். நாதசுவரக் கலைஞர், ஒத்து வாசிப்பவர், தவில் வித்துவான், தாளக் கலைஞர் (ஜால்ரா) ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்த இசைக்குழுவைப் பெரியமேளம் என அழைப்பர்.

**வாசிக்கும் முறை**

நாகசுவர வாசிப்பில் மல்லாரி வாசிப்பது என்ற ஒரு முறை உள்ளது. இது குரு சிஷ்ய பாரம்பரியத்தில் கற்பிக்கப்பட்டு பின்பற்றப்படுகிறது. கோயில்களில் தெய்வத் திருமேனிகளுக்கு அபிடேசம் செய்யும்போது தீர்த்த மல்லாரி, அபிடேகம் முடிந்து அலங்கரிக்கப்பட்ட பின் திருவமுது படைக்கும்போது தளிகை மல்லாரி, இறைவன் எழுந்தருளும்போது பெரியமல்லாரி, சின்ன மல்லாரி ஆகியவை நாகசுவரத்தில் வாசிக்கப்படும். மல்லாரி வாசிக்கப்படும் ஒழுங்கைக் கொண்டே கோயிலுக்கு வெளியே உள்ளவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

**கட்டுமானம்**

நாதசுவரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படும். இம்மரமும் வெட்டப்பட்டு நீண்ட நாட்களுக்குப் பிறகே இக்கருவி செய்யப் பயன்படும். இதனால் பழைமையான வீடுகளில் கட்டடமாக இருந்து, பிரிக்கப்பட்ட பொழுது இம்மரத்தை வாங்கி வந்து, இக்கருவியைச் செய்வர். இக்கருவியின் மேல் பகுதியை உளவு என்றும், கீழ்ப்பகுதியை

அணசு என்றும் கூறுவர் உளவுப் பகுதியில் 12 துளைகள் அமைக்கப்படும். இக்கருவியின் அளவிற்கேற்ப, முகவீணை, திமிரி நாயனம், பாரி நாயனம், இடைப்பாரி நாயனம், மத்திம சுருதி நாயனம் என்ற பெயர்களுடன் வழங்கி வருகின்றனர்.

**வகைகள்**

நாதசுவரத்தில் இரண்டு வகைகள் உண்டு: திமிரி, பாரி. திமிரி நாதசுவரம் உயரம் குறைவாகவும், ஆதார சுருதி அதிகமாகவும் இருக்கும். பாரி நாதசுவரம் உயரம் அதிகமாகவும், ஆதார சுருதி குறைவாகவும் இருக்கும். 116

**பயன்பாடு**

நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு பயன்படுத்த ஏற்ற இசைக்கருவியாகும் நாதசுவரம் மங்கல இசைக்கருவியாக பயன்படுகிறது. கோவில்கள் நாதசுவரங்கள் உட்புற நிகழ்ச்சிகளை விட திறந்த வெளிகளில் பயன்படுத்த மிகவும் ஏற்றதாகும். ஏனெனில் இவற்றின் இசை பெருக்கும் அதிகமாகும்.

**தமிழர்களின் சமூக பொருளதார வாழ்வில் கோவில்களில் பங்கு**

கோயில் அல்லது கோவில் என்பது திராவிடக் கட்டிடக்கலை கொண்ட இந்து கோவிலின் தனித்துவமான தமிழ்ச் சொல் கோயில் மற்று கோவில் ஆகிய பயன்படுத்தப்படுகின்றன. சொற்கள் ஒன்றுக்கொன்று

சமகால தமிழில், "வழிபாட்டிடம்" என்பதைக் குறிக்க 'கோவில்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அண்மைய உரைகளில், கோவில் பல இந்துக்களால் ஆலயம், தேவஸ்தானம் என்றும் குறிப்பிடப்படுகிறது. 19 ஆம் நூற்றாண்டின் தமிழ் துறவி வள்ளலாரின் பக்தர்கள் பயன்படுத்தும் மற்றொரு சொல் அம்பலம். மற்றொரு சொல் 'தளி,அதாவது கோயில் என்றும் பொருள்.

கோயில் அல்லது மந்திர் என்பது, கடவுளை வணங்குதல், வேள்விகள் நடத்துதல் போன்ற சமயம் சார்ந்த அல்லது ஆன்மீக நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட கட்டிடத்தைக் குறிக்கும். மிகப் பழைய காலத்தில் இருந்தே இந் நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட கோயில்கள் உலகம் முழுவதிலும் இருந்து வந்துள்ளன.

தமிழில் கோயில் என்னும் சொல் கோ + இல் எனும் இரண்டு சொற்களின் சேர்க்கையால் உருவானது. இங்கே கோ என்பது இறைவனையும், இல் என்பது இல்லம் அல்லது வீடு என்பதையும் குறிக்கும். எனவே கோயில் என்பது "இறைவன் வாழுமிடம்" என்னும் பொருள் தருகிறது.

பொது வழக்கத்தில் கோயில்மற்றும் கோவில்என்ற இரு சொற்களும் தேவஸ்தானம். அம்பலம் போன்ற சொற்களும் கடவுளை வணங்கும் இடத்தினை

குறிக்கும். கோயில் என்பதற்கு ஆலயம் என்றொரு உண்டு. பெயரும் உண்டு. ஆலயம் என்னும் சொல் "ஆன்மா லயப்படுகின்ற இடம்", "ஆன்மாக்கள் இறைவனை ஒரு மனதுடன் வணங்குவதற்கான இடம்" என்ற பொருள் கொண்டது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கோட்டம் என்னும் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**அலகு - 3**

**3.நாட்டுப்புறக் கலைகள் மட்டும் வீரவிளையாட்டுகள்**

**தெருக்கூத்து**

தெருக்கூத்து என்பது இந்தியாவின் தமில் மாகும். தெருதிகளிலும் மறை தமிழகத்திலும் இலங்கையின் வடிவமாகும். தெருக்கூத்து என்பது ஒரு வகையான பொழுதுபோக்கு, சடங்கு மற்றும் சமூக நிலையைக் கூறும் ஊடகமாகும்.

தெருவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து ஆகும். இது தமிழர்களின் பழங்கலைகளில் ஒன்று ஆகும். கதை சொல்லல், நாடகம், ஆடல், பாடல் எனபலதரப்பட்ட அம்சங்கள் தெருக்கூத்தில் கலந்திருக்கும். பொதுவாக ஒரு அல்லது விழிப்புணர்வுக் ஒன்றை மையமாக வைத்து தெருக்கூத்து நிகழும், சிற்றூர்ப் புறங்களில் உள்ள கோவில்களில் மேடையின்றி திரைச்சீலை போன்ற நாகரிகம் சாயல்களன்றி மூன்று பக்கமும் மக்கள் சூழ்ந்த ஆடுபரப்பில், ஆடவர் மட்டுமே ன்றிலெகும் மரக்கட்டைகளாலாகிய அணிகலன்களைப் பூண்டு. நடனம் பாடல் கட்டிமங்கலியற்ைறால் கதைப் பொருளைக் அறிமுகப்படுத்தப்பட்டு மணிக்குத் தொடங்கி மறுநாள் நிகழ்த்தப்படும். வழங்குவர். காலை முடியும் வண்ணம் இக்கூத்து பார்வையாளர்கள் கலைஞர்களுக்கு நன்கொடை

**வரலாறு**

தெருக்கூத்தினை கட்டைக்கூத்து என்றும் அழைப்பர். கட்டாய் என்ற வார்த்தையிலிருந்து பெறப்பட்டது, கட்டாய் என்பது நிகழ்ச்சிகளின் போது நடிகர்கள் அணியும் சிறப்பு ஆபரணங்களைக் குறிக்கிறது. எழுத்தாளர் எம்.சண்முகம் பிள்ளை தெருக்கூத்தை தமிழ் காவியமான சிலப்பதிகாரத்துடன் ஒப்பிட்டு, சிலப்பதிகாரத்தை தெருக்கூத்தின் எதிரி வடிவம் என்று அழைத்தார். சிலப்பதிகாரம் முன்மாதிரி கதை இன்னும் தெருக்கூத்து நடிகர்களால் நிகழ்த்தப்படுகிறது.தெருக்கூத்து நாடகம் சிலப்பதிகார காவியத்தின் ஒவ்வொரு படலத்தின் தொடக்கத்திற்கும் முடிவிற்கும் ஒத்த விதத்தில் தொடங்குகிறது மற்றும் முடிவடைகிறது. மேலும் நடிகர்கள் உரைநடையுடன் குறுக்கிடப்பட்ட வசனத்தில் பாடுகிறார்கள். வசனத்தின் பின்னர் வரும் உரைநடை அதன் விளக்கமாக உரையாடுகிறார்கள். சிலப்பதிகாரம் மற்றும் தெருக்கூத்து இரண்டும் பெண்களின் கற்பு மற்றும் தார்மீக சக்தியை மையமாகக் கொண்டுள்ளன.

இருப்பினும், வரலாற்று ரீதியாக, தெருக்கூத்து இரண்டு முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் இல்லை. ஆராய்ச்சியாளர் ரிச்சர்ட் ஏ.ஃப்ராஸ்காஅவரது நடிகர்-தகவலறிந்தவர்களில் சிலர், தெருக்கூத்து முதலில் செஞ்சி பகுதியில் இருந்து

வெளிவந்தது என்று நம்பினர் என எழுதினார். இது தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வரை பரவியது, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகியவற்றில் பிரபலமானது. ஆரம்பகால சிங்கள நாடகம் (சிறந்தவெளி நாடகம்) தெருக்கூத்து பாணியில் இருந்தது. நாடகங்களை விளக்கக்காட்சி

தெருக்கூத்து நடைபெறும் இடம் களரி எனப்படும். ஊரின் புறத்தே அல்லது கோவில் திடல்களில், அல்லது அறுவடை ஆன ல்யல்களின் புநதலே இக்கூத்தானது நடைபெறும், (கூத்து நடைபெறும் இடத்தை முதலில் சுத்தப்படுத்துவர். பின்பு அத்திடலில் இரு கழிகளை நட்டு அவற்றில் விளக்குகளைக் கட்டுவர். கழிகளுக்கு இடையில் உள்ள இடமே கூத்து தடைபெறும் இடமாகும். இதனை விட்டமாகக் கொண்டே மக்கள் வட்டமாகச் சுற்றி அமர்வார்கள். கழிகளுக்கு இடையாக ஓர் ஓரத்தில் ஒரு அகன்ற பலகை போடப்பட்டிருக்கும். அதன் பின்னே தென்னங் கீற்றுகலால் அறை அமைக்கப்பட்டிருக்கும். இது கூத்தில் நடிக்கும் நடிகர்களின் ஒப்பனை அறையாகும்.) சமீபத்திய காலங்களில், சில தெருக்கூத்து குழுக்களும் தொழில்முறை குழுக்களாக செயல்படத் தொடங்கியுள்ளன.

**மையக் கரு**

பல தெருக்கூத்து நிகழ்ச்சிகள் மகாபாரதத்தில் முக்கியத்துவம் வாய்ந்த திரவுபதி கதாப்பாத்திரத்தை மையப்படுத்தி அமையும். ராமாயணத்தை மையப்படுத்தி தெருக்கூத்து நாடகங்கள் மரியம்மன் திருவிழாக்களில் நிகழ்த்தப்படுகின்றன. மேலும் சில நாடகங்களில் உள்ளூர் தெய்வங்களும் அடங்கும்.

தமிழ் நாட்காட்டியின் முதல் மாதமான சித்திரையில் தொடங்கி இருபத்தி ஒரு நாள் கோயில் திருவிழா உள்ளிட்ட சடங்கு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக தெருக்கூத்து நாடகங்கள் உள்ளன. திருவிழாவின் நடுவில் தெருக்கூத்து நிகழ்ச்சிகள் தொடங்கி, இறுதி நாளின் காலை வரை தொடர்கின்றன.

**பாணி**

நடனம் ("புக்திசாலித்தனமான மேடை தந்திரங்களுடன்" பாடல், இசை, மற்றும் நாடகம் ஆகியவற்றின் கலவையாக தெருக்கூத்து நாடகங்கள் உள்ளன.

நடிகர்கள் வண்ணமயமான ஆடைகளை அணிவார்கள். தெருக்கூத்து இசைக்கலைஞர்கள் பயன்படுத்தும் இசைக்கருவிகளில் ஆர்மோனியம், டிரம்ஸ், ஒரு முகவனை மற்றும் சிம்பல்கள் ஆகியவை அடங்கும்.

ஒரு கோவில், திறந்த மைதானம் அல்லது வேறு ஏதேனும் வசதியான தனத்தின் முற்றத்தில் ஒரு நடிப்பு அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. செவ்வக அமர்கிறார்கள், பாடகர்கள் இசைக்கலைஞர்கள் மேடையின் பின்புற பக்கத்திலும், நடிகர்கள் முன் பிச்த்ைதையும் படுத்துகின்றனர். இந்த வைத்திருக்கும் இரண்டு என்பட் பக்கத்தையும் பயன்படுத்துகின் திரைச்சீலை ஞாவத்திருக் தோற்றத்தில் நுழையுறார்கள். இசைக்கலைஞர்களால் விநாயகருக்கு ஒரு பாடலைப் பாடி தொடங்குகிறது.

மேலும், பல தெய்வங்களுக்கும் பிரார்த்தனை செய்யப்படுகிறது. விநாயகராக நடிக்கும் நடிகர் இப்போது அரங்கிலிருந்து வெளியேறுகிறார். கட்டியங்காரன்

மேடையில் தோன்றுகிறார். வேண்டிய நாடகத்தின் கதையைச் சொல்லி கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்துகிறார். சில நேரங்களில், கதாபாத்திரங்களே தங்களை அறிமுகப்படுத்துக் கொள்கிறார்கள். கட்டியங்காரன் மேடையில் நடக்கும் நிகழ்வுகளுக்கு சூழலை வழங்கியும், காட்சிகளுக்கு இடையில் கேலி செய்தும் காட்சிகளை இணைக்கிறார். நடிகர்கள் இசைக்கலைஞர்கள் ஆதரவுடன் பாடுகிறார்கள்.

ஒரு தெருக்கூத்து நாடகத்தின் உரை ஒரு கருப்பொருளால் தொடர்புடைய பாடல்களின் தொடராகும். ஒவ்வொரு பாடலும் ஒரு ராகத்தில் வழங்கப்படுகிறது.இது ஒரு பாரம்பரிய பாடலின் வடிவத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னால் விருத்தம், பாடலின் அதே ராகத்தில் நான்கு வரி வசனங்களை உச்சரிப்பது பாடலுக்குப் பிறகு, ஒரு நடிகர் அதன் அடிப்படையில் ஒரு உரையை வழங்குகிறார். 3.2 கரகாட்டம்."கரகம்" (கரகம்: 'நீர் பானை' நடனம்) தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஒன்று. தலையில் சுரகம் வைத்து ஆடும் ஆட்டம் இதுவாகும். தொல்காப்பியத்தில்,

நூலே கரகம் முக்கோல் மனையே - (தொல், பொருள், இளம், நூற்பா, 615)

துறவிகள் வைத்திருக்கும் நான்கு பொருள்களில் ஒன்றாகிய கமண்டலத்தைக் குறிக்கிறது. எட்டுத்தொகை நூற்களில் ஒன்றாகிய புறநானூற்றில்,நீற வறியாக் கரகத்து (புறம். 1) என வருகிறது. இதற்குக் "குண்டிகை" என்று உரையாசிரியர்கள் பொருள் கூறுகின்றனர். குண்டிகை என்பது கரகம் போல, வாய்ப்புறம் குவிந்த ஒரு கலத்தையே குறிக்கிறது. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கரகாட்டம் குடக்கூட்டம் என்று

**கரகாட்டம்**

பல விதங்களில் அலங்கரிக்கப்பட்ட கரகத்தை தலையில் வைத்தபடி. சமநிலை கரகாட்டம் ஆடப்படும். மாரியம்மனைப் புகழ்ந்து பாடிய ஒரு 123பண்டைய நாட்டுப்புற நடனம். மதுரை, தஞ்சாவூர்,திருச்சிராப்பள் மாவட்டங்களில் கோவில் பொய்க்கா கோயம்புத்தூர். திருநெல்வேலி போன்ற திருவிழாக்களில் கரகாட்டத்தோடு காவடியாட்டம், குதிரையாட்டம் என பல்வேறு நடனங்கள் நடைபெறும்.

**கரகம் அமைக்கப்படும் முறை**

அலங்கரிக்கப்பட்ட செம்பு அல்லது பித்தனை குடத்தைத் தலையி வைத்துஅலங்கரிக்கப்பற்ய விழாதவாறு பெண்கள் மற்றும் ஆண்கள் ஆடும் ஆட்டம் கரகாட்டம் எனப்படும். கரகம் என்ற வார்த்தைக்கு கமண்டலம், பூக்குடம், கும்பம், செம்பு, நீர்க்குடம் என்ற பல அர்த்தங்கள் உண்டு.

கரகாட்டத்திற்கு 3 கிலோ எடையுள்ள செம்பினுள் 3 அல்லது 4 கிலோ மண்ணோ, அரிசியோ இட்டு ஒரு ரூபா நாணயமும் வைத்து கரகச் செம்பு தயாரிக்கப்படும். கரகம் என்பது விதைப்பாதுகாப்பின் ஓர் அங்கமாகவும் இருந்து வந்திருக்கிறது. கரகத்தின் உள்ளே விதைகளை இட்டு வைத்து வழிபட்டு, அந்த விதைகளை முளைப்பாரி என அழைக்கப்படும் விதைத்தேர்வு முறைக்கு அனுப்பி வைக்கும் கலாச்சாரம் நீண்ட

காலமாக இருந்து வருகிறது. ஒரு விதத்தில் விதைகளை கரகத்தின் வழியாக வழிபடும் முறை என்றும் சொல்ல முடியும்.

இந்த செம்பின் வாய்ப்பகுதியை தேங்காயால் மூடுவதற்கென்றே கட்டை வைத்திருக்கின்றனர். இதன் பின் டோப்பா எனப்படும் குடையை இதன்மேல் பொருத்தி வைப்பர். குடையின் மேலே கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப்பறவை உருவம் இருக்கும்.

தெய்வ வழிபாட்டிற்கு ஆடும் கரகம் "சக்திக்கரகம்' என்றும் தொழில்முறைக் கரகத்தை "ஆட்டக்கரகம்' என்றும் சொல்வர். தோண்டிக்கரகம் என்றால் மண்ணால் செய்யப்படுவது. பித்தளையால் செய்யப்படுவது செம்புக்கரகம் என்றும் அழைக்கப்படும்.

**கரகாட்ட வகைகள்**

சக்தி கரகம் - பக்தி கலந்து கோயில்களில் ஆடப்படுவது. ஆட்ட கரகம் - பொதுமக்கள் முன் அல்லது பொது நிகழ்வுகளில் ஆடப்படுவது

**திரைப்படம்**

இந்த கரகாட்டத்தை மையமாக வைத்து திரைப்படம் எடுக்கப்பட்டது. மிகவும் பிரபலமான கரகாட்டக்காரன் திரைப்படம் ஜூன் 16,1989ல் வெளியானது.

**வில்லுப்பாட்டு**

வில்லுப்பாட்டு அல்லது வில்லிசைஎன்பது தென்தமிழ்நாட்டில் நாட்டுப்புற கலைகளில் தனிச்சிறப்புடன் திகழும் தமிழர் கலை வடிவங்களில் ஒன்றாகும். வில்லின் துணைகொண்டு பாடப்படும் பாட்டு வில்லுப்பாட்டு எனப் பெயர் பெற்றது. துணை இசைக்கருவிகள் பல இருப்பினும் வில்லே இங்கு முதன்மை பெறுகிறது. துணைக்கருவிகளாகப் பயன்படுத்தப்படுபவை: உடுக்கை, வில்லுக்குடம், தாளம், வீசுகோல். கட்டை என்பனவாகும்.

வில்லுப்பாட்டின் தோற்றம்

வில்லுப்பாட்டின் தோற்றம் குறித்த காலத்தை வரையறுத்துக் கூற முடியவில்லை. மனிதன் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டிருந்த நேரம் அவனுக்கு உதவியது வில்லாகும். அதில் கட்டப்பட்டிருந்த மணி ஓசையில் அதனடிப்படையில் மயங்கி உருவாகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நாதஸ்வரத்தில் பாடல் வாசிக்க மேளம் முழங்க அந்த இசைக்கேற்ப கரகாட்டக் கலைஞர்கள் ஆடுவார்கள்.

**கரகாட்ட வகைகள்**

சக்தி கரகம் - பக்தி கலந்து கோயில்களில் ஆடப்படுவது. ஆட்ட கரகம் - பொதுமக்கள் முன் அல்லது பொது நிகழ்வுகளில் ஆடப்படுவது

**காப்பு விருத்தம்**

இறைவணக்கம் செய்தல் தமிழர் மரபாகும். அந்த முறையில் வில்லுப்பாட்டின் முதல் பகுதி காப்புப் பகுதியாக அமைகிறது

**வருபொருள் உரைத்தல்**

குறிப்பிட்ட கதையை இன்று வில்லில் கூறப்போவதாக ஆசிரியர் முன்கூட்டியே குறிப்பிடுவது வருபொருள் உரைத்தலாகும். இதனை நுதலிப்பாடுதல் எனவும் கூறுவர். இது அமையப்பெறும். பாடலாக

**குருவடி பாடுதல்**

தனக்கு ஆசிரியனாக இருந்தவரை நினைத்து வணங்கி நலம் உண்டாக உதவுமாறு கோருவது குருவடி பாடுதல் எனப்படுகிறது.

**அவையடக்கம்**

கதை கூறுவோர் தன்னை எளியோனாகவும், கேட்போரைச் சான்றோராகவும் கருதி கூறப்பெறுவது அவையடக்கம் ஆகும்.

பிழை நேருமிடத்துப் பொருத்துக்கொள்ள வேண்டுவதாக அப்பகுதி அமையப்பெறும்.

**நாட்டு வளம்**

கதையின் தொடக்கத்தில் பொதுவாக நாட்டு வளமே கூறப்படும்

**வாழிபாடுதல்**

இறுதிப் பகுதியாக வாழ்த்துப் பகுதி அமையும். கதை கேட்பே கதை மாந்தர், கதை கூறுவோர் என அனைவரும் நலம்பெற வாழ்த்துவதாக மங்களமாக முடிவு பெறும் நிலை வாழிபாடுதல் என்பது.

கலைஞர்கள் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகானாவி நடத்துகிறார்கள். வில்லடிவாத்தியம் நீண்டா வில்டைக் நிகழ்ச்சிலினை நட தொங்கவிடப்பட்டது, டெர்ரா-கோட்டா பானை மற்றும் குச்சிகள் கொண்டது.

**கணியான் கூத்து**

கணியான் ஆட்டம் அல்லது கணியான் கூத்து எனப்படுவது நாட்டுடுவதாகலை. கணியான் என்ற சாதியின இசைத்து நிகழ்த்தல் மாடுல, அம்மனக்கவை மகுடாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. சுடலை மாடன், அம்மன் மற்றும் சாஸ்தா கோவில்களின் திருவிழாக்களில் இக்கலை நிகழ்த்தப்படுகிறது. முற்றிலும் ஆண்களைச் சார்ந்தே இயங்கும் இக்கலை 16ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஆதிக்கலைஎன்பது ஆய்வாளர்கள் கருத்து. இந்தக் கலையாடல் ஏராளமான வரைமுறைக்கு உட்பட்டது. இடைவெளியே இல்லாமல் இரவு முழுவதும் ஆடப்படும் இது தெய்வத்தின் எதிர்ப்புறத்தில் மட்டுமே ஆடப்படும்.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில், குறிப்பாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் கிராமப்புறக் கோவில் கொடை விழாக்களில் இக்கூத்து நிகழ்த்தப்பட்டு வருகிறது.

**இசை**

கணியான் கூத்தில் இசை மிகவும் முக்கிய இடம் பெறுகிறது.மகுடம், ஜால்ரா போன்றவை முக்கியமான இசைக்கருவிகளாகும். மகுடம்,டேப்அல்லது தப்பட்டை என்னும் வாத்தியத்தை ஒத்ததாகும். வேம்பு, பூவரசு மாங்களால் செய்யப்பட்ட வட்டப்பகுதியில் பூம்பசுவின் தோலைக் கட்டி செய்யப்படுகிறது இந்த இசைக்கருவி. உச்சம், மந்தம் என நுண்ணிய மிக்க இரண்டு மகுடங்களை இசைக்கலைஞர்கள் பயன்படுத்துவர். மிகுந்த ஓசையைத் தர உச்சம். இளகிய ஓசையைத் தர வேறுபாடு சைாமியாடியின் திசைக்கப்படும். இசைக்கப்படுகிறது.

உடன்பாடுபவர் ஜால்ராவில் தாளம் போடுவர். ஆசிரியர் பாடும் போது இடது காதை இடது கையால் கையை ஸ் ஆங்காங்வார் விருசை கலந்த உரையாக இது அமைந்தி வருது. பாடல்கள் ஆங்காங்கே விரவி வரும். கர்நாடக சங்கீதம், கிராமிய இசை போன்ற இசைக்கூறுகளும் கல்யாணி, ஆனந்த பைரவி, முகாரி, பூபாளம், தோடி, நாட்டை, அடாணா, பைரவி போன்ற இராகங்களும் இடம் பெறும். இந்த இசைக்கருவிகளை அடிக்கடி நெருப்பில் வாட்டி உரமேற்ற வேண்டும்.

**ஒப்பனை**

சுடலை மாடன் கோவிலில் கணியான் கூத்துக் குழுவினர் 'வேதாள ஆட்டம்' என்னும் நிகழ்வினை நடத்தும்போது சாமியாடுபவர்கள் விகாரமான தோற்றத்துடனான தலைப்பாகைகளை அணிந்து கொண்டு மெய்சிலிர்க்க ஆடுவதும் உண்டு. மேலும் இரண்டு கணியான்கள் பெண் வேடம் கட்டி ஆடும்போது பெண்களுக்கான ஒப்பனை செய்திருப்பர். இவர்கள் நீளமான கூந்தல் கொண்டையும், கழுத்தில் ஆபரணமும், கேட்போரின் சோம்பலை கலைக்கும் பொருட்டு இரு கால்களிலும் சலங்கைகளையும் கட்டியிருப்பர்.

**கதை**

கணியான் கூத்தின் போது சிறு தெய்வக்கதையே ஆடப்படுகிறது. சுடலை பாடி மாடனுக்கும் கணியானுக்கும் தொடர்பு இருப்பதாகக் கதையில் கூறப்படுகிறது. சிவபெருமான் இரண்டு முரடர்களைப் படைத்து பூவுலகிற்கு அனுப்பினார் என்றும் அதில் ஒருவன் சுடலைமாடனாகவும் மற்றொருவன் கணியான் ஆகவும் அழைக்கப்பெற்று, கணியான் சுடலை மாடனுக்குப் பல வழிகளில் உதவி செய்து அவன் கொடுமைகளுக்கு ஆதரவாக இருக்கிறான் என்றும் கூறப்படுகிறது. இது கணியான் கூத்தின் ஒரு பகுதியாக அமைந்து வருகிறது.

தன் குருதி சிந்தி, சுடலைமாடனுக்கு, தனது விரல் அல்லது நாக்கை அறுத்ததியை ஓர் இலையில் னுக்கு தகாடு பொன். வெட்டிய இடத்தில் திருந்து பரப்படும். அப்போது பின்வரும் பாடல் பாடப்படும். குருதி கொடுத்து மாடனுக்கு மயிலின் தெய்றுதி உறுதியாக உதவும் கானிய சனது நடக்கும் கோயிலின் தொடும் பற்றிய கதைவை தோலில் பிரடிப் பின்மக்கள் விரும்பும் கதையைப் பாடும் வழக்கம் உள்ளது. நீலி அம்மன் கதை, சுடலை மாடன் கதை, பன்றி மாடன் கதை, வண்ணாரமாடன் கதை, கருப்பசாமி கதை, இசக்கியம்மன் கதை. முத்தாரம்மன் கதை, சந்தன மாரி கதை, முத்துப்பட்டன் கதை போன்றன குறிப்பிடத்தக்க கதைகளாகும்.

இது தவிர இராமாயணம், மகாபாரதக் கதைகளை வாய்மொழி வழக்கில் பாடியும் ஆடுவதுண்டு. வில்லுப்பாட்டுக்கும். கணியான் கூத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டு கலைகளிலும் எடுத்தாளப்படும் கதைகள் ஒன்றாகவே இருக்கின்றன. வில்லுப்பாட்டில் எழுதி வைத்து பாடப்படும் கதைகள், கணியான் கூத்தில் வாய் போன போக்கில் சொல் போன போக்கில் மனதில் இருந்தே பாடப்படுகிறது. வழிவழியாக இக்கலை தொடர்கிறதே ஒழிய, முறைப்படி பயிற்றுவிக்கவோ, ஆட்டுவிக்கவோ ஏற்பாடுகள் இல்லை.

**நோக்கம்**

சிறு தெய்வ வழிபாட்டில், சிறு தெய்வங்களின் கதைகளை முதன்மைப்படுத்துவதே கணியான் கூத்தின் நோக்கமாக உள்ளது. கணியான் கூத்துக் கலைஞர்கள் நிகழ்த்திக் காட்டும் 'பேயாட்டம்', 'அம்மன் கூத்து போன்ற நிகழ்வுகள் நாடகக் கூறுகள் அதிகம் கொண்டனவாகும். எனவே விழாவின்போது சடங்குகளைக் கதை நிகழ்ச்சியாகச் செய்து காட்டுவதும் கணியான் கூத்தின் நோக்கமெனக் கொள்ளலாம்.

**கால அளவு**

இரவு ஒன்பது மணியளவில் கணியான் கூத்து நிகழ்வு தொடக்கம் பெற்று நடக்கிறது. சுடலைமாடன் கோவிலில் வெள்ளி இரவிலும் அம்மள் கோவிலில் செவ்வாய் இரவிலும் கூத்து நடக்கிறது. நடு இரவு நேரத்தில் 'சாமியாடி' கணியானைக் கூப்பிடுகிறார். வழிபாட்டுக்குரிய தெய்வம் பூசாரியின் மீது வந்து இறங்கும் என்பது சமய நம்பிக்கை.

அப்போது அவர்நாட்டுப்புறக் கலைகள் மட்டும் வீரவிளையாட்டுகள் தன்னை மறந்த நிலையில் ஆடுவார். அவரைச் 'சாமியாடி' என்று குறிப்பிடுவார்கள். அப்போது அவரிடமிகுந்து வெளிப்படும் பேச்சு கட்டளையாகக் கருதப்படும். இரத்தப் பலிக்கான வேண்டுகோள் விடும் சாமியாடி தன் ஆட்டத்தை நிறுத்துவதற்கும் கணியான் தெய்வத்தின் ஆடுவதற்குமான ' குழுவினர் ஆடு வழிபாட்டோடு சூழல் உருவாக்கப்படுகிறது. தெய்வ தொடர்புடைய கலையாகக் கணியான் விளங்குவதால் அதன் கால அளவு குறித்த கவலை ஏற்படுவதில்லை.

**நடத்தும் முறை**

கணியான் கூத்தில் மொத்தம் ஏழு கலைஞர்கள் இரண்டு பேர் பெண்வேடமிட்டு ஆடுவார்கள். அதை சகறிப் இட்டும் பெறுவர். அண்ணாவி' எனப்படுவார். இவரே குழுவுக்குத் தலைவராகவும் இருப்பார். ஒரு துணைப்பாடகர், ஜால்ரா இசைப்பவர், மகுடம் எனும் வருந்தியர். ஒருவர் அண்ணாவியின் பாட்டை பின்பற்றி பின்பாட்டு பாடுவார். மற்றொருவர் ஜால்ரா இசைப்பவர். இது தவிர அம்மன் ஆட்டம் ஆடுபவர். ற்றொருவர் ஆடுபவர், திரளை போடுபவர் என துணையாட்டக்குழுக்களும் உண்டு. இது தேவைக்கும், இடத்துக்கும் தகுந்தவாறு வேறுபடும். கணியான் கூத்து நடைபெறும் போது முதன்மைக் கலைஞர் மேடையின் நடுவில் நிற்பார். இவர் திறம்பட்ட கலைஞராக விளங்குவார்.

இவரை மையப்படுத்தியே கணியான் கூத்தின் தரம் நிர்ணயிக்கப்படுவதுண்டு. கூத்தின் போது ஆசிரியர் மேல் துண்டை வேட்டிக்கு மேல் இடுப்பில் கட்டிக் கொள்வார். மகுடக்காரர்கள் அவருக்கு இருபக்கங்களிலும் நின்று கொள்வார்கள். இவர்கள் மகுடத்தை இடுப்பில் கயிற்றினால் கட்டிக் கொண்டு தோற்றமளிப்பார்கள். 'அண்ணாவி' முதலில்பாட அப்போது பெண்வேடமிட்ட ஆண்கள் ஆட, மகுட இசை, பக்கவாத்திய மேளக்காரர் களின் குரல்கள், ஜால்ரா இசை போன்ற பின்னணிகளுடன் கூத்து நடத்தப்படும். பாடல்களை அண்ணாவி விளக்கும் போது பின்னணி இசை குறைவாகவே இருக்கும்.

இந்தச் சமயத்தில் பெண் வேடதாரிகள் ஆடுவது இல்லை. அண்ணாவியின் வலது புறத்தில் ஒருவரும் இடதுபுறத்தில் ஒருவருமாக நின்று இவர்கள் தங்களது கால் சலங்கைகள் ஒலிக்குமாறு தரையில் கால்களைத் தட்டிக் கொண்டே இருப்பார்கள். பொதுவாக, பெண் வேடதாரிகளின் நடனத்தில் பாத வேலைப்பாடு அதிகம் காணப்படுகிறது. வேகமான பாத அசைவுகளில் தேர்ந்து விளங்குகிற கலைஞர்களாக இவர்கள்இருப்பார்கள். அண்ணாவி பாடும்போதும், கதையினைக் கூறும்போதும் மகுடக்காரர்கள் இசைத்துக் இருப்பார்கள். கொண்டே கலைகளுக்கே உரிய மண்ணின் பாவனைகள், நகைச்சுவை, ல் குறியீடுகள் அனைத்துமே இக்கலையில் ஆங்காங்கே பரவிக் கிடக்கின்றன. நாட்டர்

**சடங்குகள்**

இது தெய்வவழிபாட்டோடு இசைந்த கலையாக விளங்குவதால் சடங்குகளும் இக்கூத்தின் வாயிலாகப் படைக்கப்படுகின்றன. இவற்றில் என்னும் 'கைவெட்டு' இவ்வகையில் ஒரு கதையானது கூத்து, சடங்கு என்னும் இருவகைப் படிநிலைகளில் கோவில் விழாவின்போது செயல்படுவதைக் காணலாம்.

**ஒயிலாட்டம்**

ஒயிலாட்டம் என்பது ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக்கொண்டு, கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றை வைத்து இசைக்கேற்ப வீசி ஆடும் அழகான குழு ஆட்டம், அழகு, அலங்காரம், சாயல், ஒய்யாரம் எனப் பல பொருள் தாங்கி நிற்கும் ஒயில் என்ற வார்த்தையே, இவ் ஆட்டத்தின் பெயராகியுள்ளது. இது முற்றிலும் ஆண்கள் சார்ந்த கலை ஆண்மையின் கம்பீரத்தை உணர்த்தும் இந்தக் கலையாட்டத்தினைப், பெண்கள் கலந்து கொண்டு ஆடுவதில்லை.[1] இந்த ஆட்ட அடவுகள், ஆண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை ஆகும். பத்து முதல் 12 பேர் கொண்ட இந்த ஆட்டத்தில், எதிரெதிர் திசையிலோ, அல்லது நேர்த்திசையிலோ நின்று கொண்டு ஆடுவார்கள். சிறகை விரித்தால் மயிலாட்டம். சேர்ந்து குதித்தால் ஒயிலாட்டம் என்று இக்கலையின் தன்மை வர்ணிக்கப்படுகிறது.

**தோல்பாவைக்கூத்து**

தோல்பாவைக்கூத்து அல்லது பாவைக்கூத்து என்பது உயிரற்ற பாவைகளை,உயிருள்ள பாத்திரங்களைப் போல் இயக்கி நிகழ்த்தப்படும் ஒரு கூத்து ஆகும். பதப்படுத்தப்பட்ட ஆட்டுத் தோலில் வரையப்பட்ட வண்ணப்படங்களை விளக்கின் ஒளி மூலம் திரைச்சீலையில் அதன் நிழல் தெரியுமாறு ஆட்டி நிகழ்த்துவது தோல்பாவை கூத்து. இக்கலை. தோல்பாவைக் கூத்து, தோல்பாவை நிழல் கூத்து, நிழலாட்டம், பொம்மலாட்டம் என வெவ்வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

இக்கலையானது இந்தியாவில் ஆந்திரா, கர்நாடகம், கேரளம். ஒரி தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நிகழ்த்தப்படுகிறது. சரபோஜி செல்வாக்குப் பெற்றிருந்த தோல்பாவைக் கூத்துக் கலைஞர்கள், பிற்காலத்தில் பிழைப்புக்காக காலத்தில் தஞ்சை அரண்மனையில் தமிழகம் முழுமைக்கும் இடம்பெயர்ந்தார்கள். இக்காலத்தில் தமிழகத்தில் மதுரை, தூத்துக்குடி, கன்னியாகுமரி கொண்டே இக்குகின்றானது மாறிவருகிறது.மராட்டியைத் தாங்கொழியாகச் தொண்டன்கணிதர் சாதியை உட்பிரிவான நிகழ்த்துகின்றனர். சாதியைச் இக்கலையை கலையாக

**கதை**

பாவை என்பது அழகிய பெண்பொம்மை. திருமாலின் மோகினி வடிவத்தைப் பாவை என்பர். தேவர்களும் அசுரர்களும் அமிழ்தம் கடைந்தார்களாம். கடையும்போது தோன்றிய நஞ்சைச் சிவபெருமாள் உண்டு அனைவரையும் காப்பாற்றினாராம்.

கடைசியில் தோன்றிய அமிழ்தத்தை உண்ண இருபாலாரும் சண்டையிட்டுக்கொண்டார்களாம். திருமால் 'பாவை' உருவில் தோன்றி வழங்கும்போது, தேவர்களும் முனிவர்களும் வாங்கி உண்டனராம். அசுரர் பாவையின் அழகையே பார்த்துக்கொண்டிருந்தார்களாம். அசுரர்களுக்குக் கொடுக்க வரும்போது அமிழ்தம் தீர்ந்துவிட்டதாம். அமிழ்தம் உண்டவர் என்றும் இளமையோடும். சாகாமலும் வாழ்கிறார்களாம். அசுரர்கள் பிணி மூப்புடன் வாழ்ந்து இறந்துபோகிறார்களாம். இப்படி ஒரு கதை. இந்தக் கதையை விளக்கி ஆடும் ஆட்டம் பாவை ஆட்டம்.

கட்டையால் செய்யப்பட்ட பொம்மையையும், தோலால் செய்யப்பட்ட பொமையாயும் ஆட்டிக் காட்டிக் கதை சொல்வதைப் பொம்மலாட்டம் என்பர். இந்தப் பொம்மலாட்டங்களும் 'பாவை' எனப்படும்.

**கூத்துமுறை**

ஓலை அல்லது துணியால் வேயப்பட்ட சிறிய அறையே. தோல்பாவைக் கூத்தின் அரங்கமாகும். இவ்வறையின் முன்பகுதியில் இயக்கிதியில்த்திளை இவ்வறையினுள் தக்குப்பஅக்கி உள்பகுதியில் உள்ள வெண்திரையை ஒட்டி ஆட்டப்படும். பாவைகளின் மீதி வானத்தெரியும் ஊடுருவும் போது பார்வையாளர்கள் மண் தரையில் அமர்ந்திருப்பர். கூத்தரங்கின் முன்பகுதியில் இசைக்கருவிகளை பாடுபவர்களும் செய்வார்கள். இசைப்பவர்களும் பின்பாட்டுப் அமர்ந்திருப்பர். பாக்கூத்தைக் குடும்பமாத்தான் கூத்தை நடத்துபவர் பலகுரலில் பேசி காட்டுபவராகவும், அவரின் குடும்ப உறுப்பினர்கள் இசைக் கருவிகளை வாசிப்பவர்களாகவும் இருப்பர்.

இக்கலைஞர்கள் தங்களின் இருப்பிடத்தில் இருந்து குடும்பத்தோடு கிளம்பி, பல ஊர்களில் நிகழ்ச்சி நடத்தி, மீண்டும் 6 மாதங்கள் கழித்து சொந்த கிராமத்திற்குத் திரும்புகின்றனர். ஆகவே இவர்கள் நாடோடிக் கலைஞர்களாகக் கருதப்படுகின்றனர்.

**சிலம்பாட்டம்**

சிலம்பம் என்பது ஒரு தடியடி தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். வழக்கில் இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். இது தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக் கலை ஆகும். சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக்கம்பினால் தொடுதல் (தொடு புள்ளி) போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. சிலம்பாட்டத்தைக் கற்றுக் கொள்ளக் குறைந்தது ஆறு மாதக் காலம் தேவை. இதற்கென சிலம்பாட்டக் கழகங்கள் பல தமிழகத்தில் உள்ளன. சிலம்பாட்டம் ஆடுவதற்குக் குறைந்தது இருவர் வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில்விளையாடுவர், தற்காலத்தில் ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் விழாக்கட்டத்தைக் கற்றுங்களில் இக்கலை திருவள்ளூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெருமளவு நடக்கிறது.

**வரலாறு**

மக்கள் தம்மை சிங்கம், புலி போன்ற விலங்குகளிடம் இருந்து காத்துக்கொள்ளக் கையாண்ட முறையே சிலம்பம் எனப்படும் கலையாக வளர்ந்துள்ளது என்பர். தமது கைகளில் எப்போதும் இருக்கக் கூடிய சிறிய ஆயதங்களான கம்பு (தடி), சிறு கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி விலங்குகளிடம் இருந்து தற்காத்துக்கொள்ள இந்தக் கலையைப் பயன்படுத்தினர்.

தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் முதலில் எடுத்தது சும்பு எனப்படும் ஆயுதமே ஆகும். இதுவே பின்னர் சிலம்புக் சுலையாக வளர்ச்சி பெற்றது. ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய ஈட்டி, கத்தி, வேல், வாள், கம்பு போன்ற பலவிதமான ஆயுதங்களைப்sஆகியவை அணிவர். காலில் சலங்கையும் கட்டுவர்.

ஆந்திரப்பிரதேசம், கேரளா போன்ற பிற மாநிலங்களிலும் கர்நாடகம். ஆடப்படுகிறது.

போன்ற பிற ஆட்டங்களும் உண்டு. ஆட்டம், மாடு ஆட்டம், கிளி ஆட்டம் கார்த்திகை ஒளிவிளக்குத் திருநாளுக்கு முதல்நாள் பரணிநாளில் விளையாடுவர். அதனை வால்பிடிப்பவர் தாக்கிக்கொண்டு அங்குமிங்கும் ஓட விளையாடுதல் இதன் நாட்டுப்புற விளையாட்டு ஆகும்.

**தமிழர்களின் விளையாட்டுகள்**

தமிழர்களால் வழிவழியாக விளையாடப்பட்டு வந்த விளையாட்டுக்கள், அல்லது பரவலாக விளையாடப்படும் விளையாட்டுக்கள் தமிழர்களின் விளையாட்டுகள் ஆகும். இதில் பல விளையாட்டுக்கள் தென்னிந்தியாவில் பரவலாக உலகமெங்கும் விளையாடப்படுபவை. விளையாடப்படுபவை .மேலும் பல

**புனல் விளையாட்டு**

**பொழில் விளையாட்டு**

**பந்தாட்டம்**

**மல்லாடல்**

**கழைக்கூத்து**

**வல்லாட்டம்**

**தற்காப்பு/ஆடற் கலைகள்**

தமிழர் ஆடற்கலைகள் பட்டியல்

வெளிக்கள விளையாட்டுக்கள்

ஓணப்பந்து விளையாட்டு

கிட்டிப் புள்ளு

கிளித்தட்டு, தாச்சி

சடுகுடு/கபடி

எட்டுக்கோடு

வழுக்கு மரம் ஏறுதல்

கயிறு இழுத்தல்

முட்டி உடைத்தல்/உறியடி

பாரிவேட்டை

சங்கீதக் கதிரை

கிளி கோடு பாய்தல்

போர்த்தேங்காய்

பல்லாங்குழி

ஒப்பு

இரட்டை மாட்டுப் பந்தயம்

மோடி விளையாட்டு

கண்ணாமூச்சி

குழை எடு

பேணி அடித்தல், பேணிப்பந்து, தகரப்பந்து

அம்பெறிதல்

கோழிச்சண்டை

வண்டிச்சவாரி

சில்லிக்கோடு

இளவட்டக் கல்

கீச்சு மச்சுத் தம்பலம்

ஊசி நூல் கோர்த்தல்

மரம் ஏறுதல்

தேங்காய் துருவுதல்

தட்டாங்கல்

பாட்டி பேத்தி

அல்லி மல்லி தாமரை

வீடு கட்டல்

வளையல் விளையாட்டு

ஊஞ்சல்

சோளக்கதிர்

சிறுவீடு

குத்து விளையாட்டு

குண்டு விளையாட்டு

வண்டியுருட்டுதல்

பூச்சி விளையாட்டு

மரங்கொத்தி (விளையாட்டு)

உள்ளக விளையாட்டுக்கள்

தாயக் கட்டை

சொக்கட்டான்

கொக்கான்

பல்லாங்குழி

ஆடும் புலியும்

பாம்பும் ஏணியும்

பாண்டி

பம்பரம்

ஆடுபுலி ஆட்டம்

மூன்றுகல் ஆட்டம்

செப்புசாமான்.

**குழந்தை விளையாட்டுகள்**

உச்சரிப்பு விளையாட்டு

வினா விடைச் சங்கிலி

பருப்புக் கடைதல்

ஆகியன கிராமபுற குழந்தைகள் விளையாட்டுகள் ஆகும்.

**அம்மானை**

பெண்கள் குழுக்களாக வினா, விடைகளை பாடல்களாகப் பாடப்படுவது அம்மானை. பாடலின் முடிவில் அம்மானை என்ற சொய் இடம் பெற வேண்டும்.

**ஊஞ்சல்**

ஊஞ்சல் விளையாட்டு. ஆலம் விழுது முதல் அம்பொன் வரை விளையாட்டுக் கருவிகளாக பயன்பட்டன.

**கழங்கு**

ஒரு காயைத் தூக்கி போட்டு பிடித்தாடும் ஆட்டம். புளியங்காய்,சிறு கற்கள் முதலியன கொண்டு ஆடப்படுவது.

**அலகு - 4**

**தமிழகத்தின் தாவரங்களும், விலங்குகளும்**

சங்க இலக்கியங்கள் ஆவணங்களாக விளங்குகின்றன. பழையனவற்றைப் பாதுகாக்கின்ற இயற்கையோடு இயற்கை மிக நுணுக்கமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு இந்த இலக்கியங்கள் மிகச்சரியான சான்றுகளாக விளங்குகின்றன. தமிழர்களின் இந்த நுணுக்கம், வானியல், தாவரவியல், விலங்கியல், தமிழர்களின் மொழியியல் போன்ற பல்துறைப் புலமை இவைகளெல்லாம் பல நூற்றாண்டுகள் காடு, மலை, கடல், விலங்கு, பறவை, வானம் என்ற இயற்கையின் எல்லா நிலைகளையும் அதன் ஆழ அகலங்களில் நுழைந்து அனுபவித்து வாழ்ந்ததன் மூலம் பெற்ற பட்டறிவின் வெளிப்பாடே என்று சொல்லலாம்.

தமிழிலக்கியத்தில் இருக்கக்கூடிய தாவார அறிவியல் உண்மைகள், தாவர மேலாண்மை, சுற்றுச்சூழல் அல்லது இயற்கை மீதான முழுமையான அன்பு இவைகளைப் பார்ப்பதற்கு முன்னால் தமிழர்களின் உயிர்க் கொள்கையைச் சற்று நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். காரணம், அத்த உயிர்க் கொள்கையே மிக அற்புதமானது. மேலைநாட்டு அறிஞர் பெருமக்கள் உயிர்க் கொள்கை, தாவரம் சார்ந்த கொள்கை இவைகளைப் பதிவுசெய்தது 19ஆம் நூற்றாண்டு. ஆனால் ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பாக இலக்கிய இலக்கண நூல்களின் வாயிலாகப் பல்வேறு அறிவியல் நுணுக்கங்களைத் தமிழர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

இரண்டறி வதுவே அவற்றோடு நாவே

**விலங்குகள்**

தொல் பழங்காலந் தொடங்கி உலக நாடுகளில் விலங்கினங்கள் குறித்த அறிவு நிலவி வந்துள்ளது என்பதற்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்பதற்குப் பல அறிவியல் உண்மைகள் நிறுவப்பட்டுள்ளன. 'ஸுவாலஜி' எனும் கிரேக்கச் சொல் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் விலங்கியலைக் குறிக்கும் பொதுச்சொல்லாய் நிலைபேறாக்கம் பெற்றுள்ளது. சிந்து சமவெளி கண்டுபிடிப்புகளில் விலங்கு வடிவங்களும் முத்திரைகளும் காணப்படுகின்றன. பழந்தமிழர்களிடையே விலங்குகள் குறித்த அறிவு மிகத் தெளிவாக இருந்துள்ளது என்பதற்குத் தொல்காப்பிய மரபியல் சான்று பகர்கின்றது. பதினைந்து வகைப்பட்ட ஆண்பாற் விலங்குகள் பற்றியும், பதின்மூன்று வகைப்பட்ட பெண்பாற் விலங்குகள் பற்றியும், அவ்வவற்றின் இளமைப்பெயர்கள் பற்றியும் தொல்காப்பிய மரபியல் நூற்பாக்கள் (நூற்பா.2 முதல் 26) உணர்த்துகின்றன.

செம்முகமந்தி, மாமுகமுசு, நரைமுக ஊகம், கருங்கலை, வருடை, ஆமான், இரலை,நவ்வி, மரையான்,கலைமான் (உழை), கடமா, கேழல். கணநரி, கோநாய், தீநாய், செந்நாய், எண்கு, வெருகு, வரிப்புலி, புள்ளிப்புலி, யானை, நீர்நாய், இல்லெலி, முயல், முளவுமா, தீர்வை, மகண்மா (தேவாங்கு). பன்மயிர்ப் பேரென் பற்றிச் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. செயற்பாடுகள், அவ்வவற்றின் குணங்கள், உடலமைப்புகள், பயன்பாடுகள் பற்றி இவ்வியலக்கியப் பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

**தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியத்தில் அகம் மற்றும் புறத்திணைக் கோட்பாடுகள்**

திணை தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியம் பற்றிப் பேசும் போது துறை பற்றி பேசாமல் தவிர்க்க முடியாது. தொல்காப்பிய அடிப்படையில் நோக்கினால்

திணைக்கோட்பாடு என்பது எடுத்துரைப்பியல் அல்லது கதைசொல்லலியல் எதுவாயினும் யார் கூற்று நிகழ்த்தவேண்டும், எந்த எந்தச் சூழல்களில் நிகழ்த்தவேண்டும் என வரையறுக்கின்ற ஒரு முயற்சியாகவே தொல்காப்பியத்தைக் காணஇயலும். குறிப்பாக களவியல், கற்பியல், பொருளியல் ஆகியவற்றின் உள்ளடக்கம் இதுவாகவே உள்ளது. ஆனால் இவ்வாறு தொல்காப்பியர் வரையறுத்த இந்த எடுத்துரைப்பியலைச் சங்க இலக்கியங்களைப் பிற்காலத்துத் தொகுப்புகளாக உருவாக்கித் திணை துறை வகுத்தோர் முழுதுமாகப் பின்பற்றவில்லை. அகநூல்களில் ஓரளவு பின்பற்றுகின்றனர், புறநூல்களில் பெரும்பாலும் பின்பற்றவில்லை என்பது இன்னும் சற்றே துல்லியமான கூற்றாக அமையும்.

ஒரு திணை, தமிழ்மொழிக்கே உரிய தனிக்கோட்பாடு. உயர் திணை, அல் திணை என்ற அமைப்பும் அவ்விரண்டின் சார்பாகவே பால் பகுக்கப்படுவதும் தமிழுக்கே உரிய தனிஅமைப்பு.

**அகத்திணை**

கவிதை எழுதுவது என்பதற்காக உருவானவை என்பது முதல்நோக்கு, மொழியின் எழுத்து- சொல் தொடர் அமைப்புகளை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பேசுவது போலவே, மொழியினால் விளையும் கவிதையை எந்த அடிப்படைகளில் படைப்பது எனச் சொல்வது பொருளதிகாரம். அதனால்தான் இல்லது இனியது நல்லது எனப் புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம் என்று வரையறை கூறினார் இறையனார் களவியல் உரையாசிரியர். இறையனார் களவியல் படைப்புக் கதையில் வரும் அகத்திணைக்கு பாண்டியனும் எழுத்தும் சொல்லும் கற்பது பொருள் அடிப்படையிலான கவிதை படைப்பதற்காகவே அன்றோ என்று கேட்கிறான். இங்குப் பொருள் என்பது இலக்கியப் பொருளையே குறிக்கிறது.

பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களும் கவிதையின் உள்ளடக்கத்தினைப் பற்றி விரித்துரைக்க, அதன் வடிவக் கூறுகளைப் பற்றிப் பின்னர் உள்ள நான்கு இயல்களும் கூறுகின்றன என்பது இங்கு கருதத்தக்கது.

இந்த நோக்கினின்றும் பெறப்படும் கிளை நோக்கு பின்வருமாறு அமையும். சங்க இலக்கியத்தைத் தொகுத்தோரோ அல்லது அவர்களுக்குப் பின் வந்தோரோ வழங்கிய குறிப்புரைகளே திணை- துறைக் குறிப்புகள். ஆதலின் இன்று நாம் அவற்றைப் பொருட்படுத்தத் தேவையில்லை. பொருத்தமாக இருப்பின் ஏற்றுக் கொண்டாலும் தவறில்லை. விட்டு விட்டு நாமாகவே இவை போன்ற குறிப்புகளை உருவாக்கிக் கொண்டாலும் தவறில்லை. ஏனெனில் சங்கப்பாக்களில் திணை- துறைக் குறிப்புகள் போன்ற வற்றை இன்றைய புதுக்கவிதைகளைப் படிக்கும்போதும் உருவாக்கிக் கொள்ளவே எண்ணுகிறோம். ஒரு கவிதையின் குரல் அல்லது பேசுவோர்; கேட்போர்; எந்தச் சூழலில் அக்குரல் ஒலிக்கிறது என்பவற்றை மனத்திற் கொண்டே அது பற்றி நாம் பேச இயலும். சங்கக் கவிதைகளுக்கு மேற்கண்ட

187 தமிழகத்தில் தோற்றுப்போகும் எளிய நிலத் தலைவர்களை அல்லது மக்களை ஆறுதல் படுத்த வேண்டி..

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று இவ்வுலகத்தது இயற்கை"

என்று சமூக நிகழ்வை இருத்தலியப் படுத்துவதையும், "கான்யாற்றில் அடித்துச் செல்லும் புணை போல வாழ்க்கை செல்கிறது. எனவே பெருமன்னரும் சிறு தலைவர்களும் ஒன்று தான், யாதும் ஊர் யாவரும் கேளிர்" என விதியை நம்பவைப்பதும், "இன்னாதம்ம இல்வுலகம் இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே" எனத் துன்பத்தை இயல்பு என ஆக்குவதையும் காணமுடிகிறது . **இயற்கை நிகழ்வு**

இத்தகைய நோக்கிற்கு சமண பௌத்த மதங்களின் ஆதிக்கம் ஓரளவு ◌ாரணமாகலாம் என்றாலும் இனக்குழுச் சமூகத்திலிருந்து மூவேந்தர்களால் ஆளப்படும் பெருநாட்டு நாகரிகத்திற்கு மக்கள் மாறிக்கொண்டிருந்ததே அடிப்படைக் காரணம். எவ்வாறாயினும் சங்கப்பாடல்களை இன்னும் ஆழமாக நோக்கினால் பலவிதத் தொடர்புகள், புதியதாக கிடைக்கக்கூடும். சமூக வியல், சமூக உளவியல், மானிடவியல் நோக்குகளில் ஆராயும் போது திணை அமைப்புப் பற்றிய செய்திகள் புலப்படும்.

## தமிழர்கள் போற்றிய அறக்கோட்பாடு

சங்க காலத்தில் மன்னராட்சி முறைமை இருந்தது. மன்னன் வழித்தே மலர்தலை உலகமும் சென்றது. எனவே மன்னன் தான் செய்ன் வழித்த செயல்களை எல்லாம் செய்திடலாம் என்ற தன்ளிச் செய்ய நினைத்தற்று இந்நிலையில் அரசன் தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கம் ஆனருந்ததுக. நடுவுநிலைமையோடு இருக்கவேண்டும் என்றால் அவனுக்கு மேலே ஒருவர், ஒரு கருத்து இந்நிலைக்கு அறம் கொண்டுவரப்பெற்று அறம் அரசனை வழிப்படுத்தியது. மன்னன் அறத்தின் பக்கம் நிற்கவேண்டும் என்ற விழைவு புலவர்களிடத்தில் இருந்தது. மதுரை மருதன் இளநாகனார் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் குறித்துப் பாடும்போது, செய்பவனாகவும், துறவறத்தான் இல்லறத்தானால் காக்கப்படுபவனாகவும் விளங்குகிறான்.

இவற்றின்வழி அறம் என்பது அரசர்கள், சாதாரண மக்கள் ஆகிய அனைவருக்கும் பொதுவான் நடுநிலைமையான வாழ்க்கை முறை என்பதை உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

## சங்க கால எழுத்தறிவும், கல்வியும்

மனித வாழ்வினை மேம்படுத்தி நல் ஒழுக்கத்தையும் மனவலிமையையும் பரந்த அறிவையும் வலிமையையும் கொடுப்பது சுய கல்வி. அண்ணல் காந்தியடிகள் கல்வியைப் பற்றி கூறும்போது 'குழந்தைகளிடமிருந்தும் சரி உடல், உள்ளம், ஆன்ம உணர்வு ஆகியவற்றில் சிறந்தவற்றை ஒருங்கே வெளிக்கொணர்வது தான் கல்வி என நம்புகிறேன்' என்பர். கல்வி வாழவின் அணியாகவும் தாழ்வின் துணையாகவும் விளங்குவது' எனக் கல்வியின் சிறப்புரைப்பர் அரிஸ்டாட்டில். நுண்ணறிவுப்

பயிற்சியோடு மனத் தூய்மையையும் ஆன்மீக நெறியையும் கற்பிப்பது கல்வி என மொழிவர் டாக்டர் இராதாகிருஷ்ணன்.

காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன் விலங்குகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள எழுப்பிய ஒலி கருத்துடன் கூடியதல்ல. இந்நிலையில் மற்றவர்களின் துணையை நாடிய போது கூடி வாழும் நிலை ஏற்பட்டது. அப்போதுதான் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்து மொழிப்பயன்பாடு அவர்களுக்கு இன்றியமையாதாயிற்று.

இயற்கையை எதிர்த்து வாழவேண்டிய மனிதனுக்கு கூரிய அறிவும் சீரிய உணர்வும் மிகுந்து தேவையாயிற்று. எனவே அவன் தனக்கு வேண்டிய அறிவை இயற்கையிடமிருந்தே கற்றான். எனவே மனிதர்களின் முதல் ஆசிரியர் இயற்கையே.

**மன்றங்கள்- பள்ளிகள்**

சங்க காலத்தில் கல்வி நிறுவனங்கள் பள்ளிகள் என்னும் பெயரில் எந்த இலக்கியத்திலும் குறிக்கப் பெறவில்லை. அதற்கு இணையாக மன்றம் என்ற பெயரில் இயங்கி வந்தன என்பதை

**கல்வியின் பயன்**

கல்வியின் பயன்களை இலக்கியங்கள் தெளிவாகச் சுட்டுகின்றன. சங்ககாலத்திற்குப் பின்னர் கல்வி என்பது சமயக் கல்வியாகத் தான் இருந்துள்ளது. சமயக் கல்வி சமய ஒழுங்கு முறைப்படி செயலாற்றுதலையும், நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்தியது.

சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் அறியாமை இருளை அகற்றி நல்வழிப்படுத்தலே கல்வியின் தலையாய பயனாகும். பிறர் நலம் நாடும் பண்பினைக் கற்றலினாய பயன்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம்.

கற்றதன் பயன் மனிதத் தன்மையோடு வாழ்தல் என்பதை உண்டால் அம்ம இவ்வுலகம் (புறம் - 182) என்று தொடங்கும் புறப்பாட்டு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. கற்றோர் இந்திரர் அமிழ்தம் கிடைப்பதாயினும் தனித்து உண்ணார்; பிறருக்குக் கொடுத்தே உண்பார். யாரிடமும் சினம் கொண்டு ஒதுங்க மாட்டார். பிறர் துன்பங்களைக் கண்டு தாங்களும் அஞ்சுவர்; புகழுக்காக உயிரையும் கொடுப்பர்; பழிவருமெனில் உலகமே கிடைப்பதாயினும் கொள்ளார். தனக்கென வாழாமல் பிறர்கென வாழ்வார் என்று விளக்குகிறது

**சங்க காலத்தில் ஏற்றுமதி இறக்குமதி**

**தரை வாணிகம்**

அயல் நாடுகளுக்குத் தரை வழியாகச் சென்று வாணிகஞ் செய்த பாத்தர் கழுதைகள், எருதுகள், வண்டிகள் ஆகியவற்றில் வாணிகப் பொருள்களை ஏற்றிக்கொண்டு கூட்டமாகச் சென்றார்கள். அவர்கள் போகிற மழிகளில், மனித வாசம்

இல்லாத பாலை நிலங்களில் வழிபறிக் கோளைக்காரர் வந்து கொள்ளையடித்தார்கள். அவர்களை அடித்து ஓட்டுவதற்காக வாணிகச் சாத்தர் தங்களோடு வில் வீரர்களையும் அழைத்துக் கொண்டு போனார்கள். தமிழ் நாட்டில் மட்டும் அன்று; இந்தியா தேசம் திருந்தார்கள். ஆகையினாலே வாணிகச் சாத்தர் அயல்நாடுகளுக்கு செய்யப் போகும்போது கூட்டமாகச் தங்களோடு படை வீரர்களையும் அழைத்துக் கொண்டு போனார்கள். வாணிகச் சாத்தை வேடர்கள் கொள்ளையடித்ததைச் சங்க நூல்கள் கூறுகின்றன, மருதன் இளநாகனார், பாலை நிலத்தின் வழியே சென்ற வாணிகச் சாத்தைக் கொள்ளையிட்ட வேடரைக் கூறுகிறார்.த்துறது

'மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயவில் செல்சாத்து எறியும் பண்பில் வாழ்க்கை வல்வில் இளையர்.'

கடியலூர் உருத்திரங் கண்ணனாரும், வழிப்பறிக் கொள்ளையிட்ட வில் வேடரைக் கூறுகிறார்.

**கடல் வாணிகம்**

கரிகால் சோழனுடைய முன்னோனான ஒரு சோழன் கடற்காற்றின் உதவியினால் கடலில் நாவாய் ஓட்டினான்.

'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!'

என்று புறநானூறு 66 பாடல் கூறுகிறது.

பழய காலத்துப் பாண்டியன் ஒருவன் தன் அடி, அலம்பக் கடலில் நின்றான...இவரது படையில் வீரர்கள் அதிகம் இருந்தனர். வெற்ந்த நகரமாக கங்கைகொண்ட சோழபுரத்தை கோவிலொன்றையும் சோழகங்கம் உருவாக்கினார். உருவாக்கி எழிலார்ந்த என்ற ஏரியையும் இந்நகரில் இலங்கையில் சோழர் ஆட்சியை நிலைநாட்டியதுடன் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் சீன எல்லை வரை சோழப்பேரரசின் ஆதிக்கத்தை ஏற்படுத்த உலகின் முதல் கடற்படையை தோற்றுவித்த பெருமை ராஜேந்திர சோழனைச் சாரும். இப்பொழுது கோரமண்டல் என குறிக்கப்படும் வங்களா விரிகுடா சோழர்களின் எரி அக்காலத்தில் வழங்கப்பட்டது. சோழமண்டல கடற்கரையே பின்னர் தவறாக கோரமண்டல கடற்கரை என ஆனது. ராஜேந்திர சோழன் கடல் கடந்து சோழர் ஆதிக்கத்தை

ஏற்படுத்துவதற்கு முன்பாக ஆட்சிப்பொறுப்பேற்ற சில ஆண்டுகளில் சோழப் படைகளுக்கு தலைமையேற்று தமிழகத்தின் வடபகுதியிலிருந்த அரசுகள் மீது படையெடுத்தார்.

முதலில் கர்நாடக பகுதியிலிருந்த இரட்டபாடி, வனவாசி. கொள்ளிப்பாக்கை, மானியக்கடகம் ஆகிய பகுதிகளில் இருந்த அரசுகளை வென்று சோழரின் மேலாண்மையை ஏற்கச் செய்தார். இவரது படையில் ராஜராஜனின் தளபதியாக இருந்து தஞ்சாவூர் கோவிலின் திருச்சுற்று மாளிகையை முழுவதுமாக கட்டிய கிருஷ்ணன் ராமன் படைத்தளபதியாக செயலாற்றினார். ராஜேந்திர சோழரின் படைகள். ஆந்திர பகுதியின் துங்கபத்திரை நதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்ட இடைதுறை நாட்டை கைப்பற்றினார். சாளுக்கிய படைகளைத் தோற்கடித்து மேலும் முன்னேறிய ராஜேந்திர சோழனின் படைகள் இந்தியாவின் கிழக்கு பகுதியில் இருந்த அரசுகளையும் வெல்லத்திட்டமிட்டன. இதற்கு இடையில் சோழரின் கடற்படை இலங்கை மீது படையெடுத்து ஐந்தாம் மகிந்தன் என்ற மன்னரை வீழ்ச்சியுற செய்தது. தனது தந்தை ராஜராஜன் காலத்தில் இலங்கை வீழ்த்தப்பட்டிருப்பினும் ஐந்தாம் மகிந்தன் சோழரின் ஆதிக்கத்திற்கு எதிராகப் படைகளைத் திரட்டியதை அறிந்த ராஜேந்திரன் அம்மன்னனை வீழ்த்த கடற்படையை ஏவினார்.

ஐந்தாம் மகிந்தன் சோழரின் படைகளைக் கண்டு பயந்து காட்டி ஒளிந்து கொண்டார். ராஜேந்திர சோழனின் வட இந்திய படையெடுப்ப மீண்டும் தொடர்ந்தது. கலிங்க நாட்டை கடந்து ஒட்டர தேசம், கோசல நாடு தண்டபுக்தி ஆகிய நாடுகளின் அரசுகளை அடிபணியச் செய்தது.வங்காள் நாட்டை ஆட்சி செய்த கோவிந்த சந்தன் என்ற மன்னன் சோழரி207 ஆதிக்கத்திற்கு அடிபணிந்தார். உத்தர லாடத்தை ஆட்சி செய்த மகிபாலனை வென்று சோழர் படைகள் கங்கையை அடைந்தது. தோல்வி கண்ட மன்னர்களை கங்கை நீரைக் கொணரச் செய்து அந்நீரினைக் கொண்டு சோழ சாம்ராஜ்ஜியத்தைப் புனிதமடையச் செய்தார் மன்னர் ராஜேந்திரன்.

ராஜேந்திர சோழன் பல கப்பல்களை கடலில் செலுத்தி மேற்குறிப்பிட்ட அனைத்து நாடுகளிலும் சோழர் ஆதிக்கத்தை நிலைநிறுத்தி அம்மன்னர்களுடன் நட்புறவுடன் நடந்து கொண்டமை அவரது ஆட்சி நிர்வாகத்திறமையை எடுத்தியம்புகிறது. கடல் கடந்து வெற்றி பெற்ற நாடுகளில் நேரிடை ஆட்சி செய்வது என்பது இயலாத காரியம் என நன்கறிந்த மன்னர் ராஜேந்திர சோழன். எனவே அம்மன்னர்களை அடிபணியச் செய்து ஆட்சியை அவர்களிடமே ஒப்படைத்தார். இவ்வனைத்து வெற்றிகளையும் சேர்த்து கடாரம் கொண்டான் என பட்டம் பெற்றார். இப்பெயரை அவர் மதிப்புடன் ஏற்றுக்கொண்டமைக்கு காரணம் தமிழர்கள் முதன் முதலில் வணிகர்களாகவும், பணியாளர்களாகவும்.

குடியேறிய பகுதி கடாரம் ஆகும். இத்துறைமுக நகரம் இன்றைய பினாங்கு நகருக்கு வெகு அருகில் உஆகும். இப்பகுதியில் தாதுப் பொருள்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. தமிழ் இலக்கியங்களில் ஒன்றான பட்டினப்பாலையில் காழகம் என வழங்கப்படும் துறைமுக நகரம் இதுவே ஆகும். அக்காலத்தில் தமிழ் வணிகர்களும் இரும்பையும், பொன்னையும் வெட்டி தாதுப்பொருள்களையும், கருவிகளையும் உருவாக்கும் கலையை தமிழர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

காழகத்துப் பொன் உலகெங்கிலும் பேசப்பட்ட காலத்திலேயே தமிழர்கள் கடல் வாணிகம் மேற்கொண்டனர். இத்துறைமுகம் மலைகள் சூழ்ந்த பாதுகாப்பு பகுதியில் இருந்த மிகச் சிறந்த துறைமுகமாக அக்காலத்தில் விளங்கியது. சீனாவிற்கும், இந்தியாவிற்கும் இடையில் செல்லும் கப்பல்கள் இத்துறைமுகம் வழியாகவே சென்று வந்தன. சங்க காலம் முதல் தமிழர்களின் கடல்வாணிகம் சிறந்த நிலையில் இப்பகுதியில் நிலவி வந்தது.11-ம் நூற்றாண்டில் இப்பகுதியில் சீன வணிகர்களின் அச்சுறுத்தல்கள் மிகுந்தன. தமிழ் வணிகர்களுக்கும் இப்பகுதியில் வாழ்ந்த தமிழர்களுக்கும் இதனால் பல இன்னல்கள் நிகழ்ந்தன. ஸ்ரீவிஜயத்தை ஆண்ட அரசர்களும் சீன அரசுகளின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழர்களுக்கு ஏற்பட்ட துயரத்தைப் போக்க மாமன்னன் ராஜேந்திரன் பெரும் கப்பற்படையை உருவாக்கி இவ்வரசுகளை அடிபணியச் செய்து தமிழர்களுக்கும், தமிழ் வணிகர்களுக்கும் ஆதரவு நல்கினார். உலகத் தமிழரின் வாழ்வு சிறக்க கடற்படையைத் திரட்டி உலகம் போற்றும் மாமன்னராக இன்றளவும் விளங்கி வருபவர் ராஜேந்திர சோழன்.

**அலகு - 5**

**இந்திய விடுதலைப் போரில் தமிழர்களின் பங்கு**

**இந்திய விடுதலைப் போரில் தமிழர்களின் பங்கு**

திபி 1600இல் இந்தியாவில் கிழக்கிந்திய கம்பெனி அமைக்கப்பட்டது. 1639ல் சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது. 1757ல் மீளாசிப் போர் நடந்தது. இதில், ராபர்ட் கிளைவ் வெற்றி பெற்றார். வாணிபம் செய்ய சந்தை தேடி இந்தியா வந்த ஆங்கிலேயர்கள் தமது அரசியல் நடவடிக்கையிலும் உள்ளே நுழைந்து நமது நாட்டையும் கைப்பற்றிக் கொண்டனர்.

தமிழ்திரு நாடுதன்னை பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா அமிழ்தில் இனியதடி பாப்பா -நம் ஆன்றோர்கள் தேசமடி பாப்பா -பாரதி.

இந்திய சுதந்திர வரலாற்றில் வாழ்வாங்கு வையத்துள் வாழ்ந்த தமிழர் தம் பங்களிப்பு தலையாயதும் தவிர்க்க முடியாததுமாகும். இந்திய விடுதலைக்காக தங்கள் இன்னுயிர் ஈந்த தியாகிகள் மிகுதி. வரி கேட்டு இன்னல்கள் செய்த வெள்ளையர்களை எதிர்த்து தீரத்துடன் முதன் முதலாக புலியாகப் பாய்ந்தவர் பூலித்தேவன் என்பவர். இந்திய சுதந்திர வரலாற்றில் இவரது போராட்ட காலம் இருட்டடிப்புசெய்யப்பட்டது. 1755ல் நெல்லையின் நெற்கட்டும்சேவல் கோட்டையை அவனது படைகளையும் விரட்டியடித்து தென்னகத்தின் சுதந்திர தாகத்துக்கு வித்திட்ட முதல் மாவீரன் பூலித்தேவனே.

**வேலு நாச்சியார், மருது சகோதரர்கள்**

பூலித்தேவனைத் தொடர்ந்து, 1780ல் சிவகங்கை வேலு நாச்சியார் முப்படைகளைத் திரட்டி வெள்ளையர்களுடன் மோதினார். இவருக்கு உறுதுணையாக இருந்த அவரது ஆட்சியாளர்களான மருது சகோதரர்களும் கிழக்கிந்திய கம்பெனியை அடித்து நொறுக்கி விரட்டியடித்து வெற்றி கண்டனர்.

பாஞ்சாலங்குறிச்சி பாளையங்கோட்டை மன்னனாகத் திகழ்ந்தார். வரி கேட்டு வந்த வெள்ளையர்களை விரட்டியடித்தார். பீரங்கிகளுக்கும், குண்டுகளுக்கு மத்தியில் வாளும், வேலும் எடுபடவில்லை. இதனால் வெள்ளையர்களுக்கு எதிரான போரில் தோல்வியடைந்தார். என்றாலும் அவர்களுக்கு அடிபணிய மறுத்ததால் தூக்கலிடப்பட்டார். இவரது தம்பி ஊமத்துரையும் வெள்ளையர்களை எதிர்த்து நின்று வீரமரணம் அடைநதார்.

**தீரன் சின்னமலை (1756-1805)**

பிரிட்டிஷாரை எதிர்த்து நிற்கும் திப்பு சுல்தானுக்கு தோள் கொடுத்தவர் தீரன் சின்னமலை.

**சி.இராஜகோபாலாச்சாரி (1878-1972)**

தமிழகத்தில் சேலம் நகரில் பிறந்த இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்.இராஜாஜி என்று அழைக்கப்பட்டவர்.காந்தியுடன் சேர்ந்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டார். அதில் குறிப்பிட்டதக்கது வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம். இந்திய தேசிய காங்கிரஸில் பெரும் பங்கு வகித்தவர் . வந்தே மாதரம்'- என்ற தனது கனல் போன்ற கவிதை வரிகளால் மக்களிடையே சுதந்திர வேட்கையை விடுதலைக்காகவும் போராடியவர். ஏற்படுத்தியவர். பெண்

**வரகனேரி வேங்கடேச சுப்பிரமணிய ஐயர் (வ.வே.சு.ஐயர், 1881-1925)**

திருச்சியைச் சேர்ந்த இவர், இந்திய சுதந்திர போராட்டத்தில் முக்கிய பங்காற்றியவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இலண்டன் இந்தியா விடுதியில் தங்கியிருந்த அவருடன் 30 பேர் சேர்ந்து விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டனர். வ.வே.சுவும் துப்பாக்கிப் பயிற்சி பெற்றார். மற்ற புரட்சி இளைஞர்களுக்கும் அப்பயிற்சியை அளித்தார். 1909ல் தசரா பண்டிகையைத் தேசிய விழாவாக இந்தியா ஹவுசில் கொண்டாடினர். 1925ல் பாபநாசம் அருவியில் தவறி விழுந்த தனது மகளைக் காப்பாற்ற முனைந்த போது வ.வே.சு.மறைந்தார்.

**மாவீரன் வாஞ்சிநாதன்** **(1886 - ஜூன் 17, 1911)**

ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் போராடிய தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு புரட்சியாளர். வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா ஆகியோரின் மேடைப் பேச்சுக்களால் வாஞ்சியும் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமானார். வ.உ.சிக்கு சிறை தண்டனை வழங்கிய52 இந்தியாவின் பிற்பகுதிகளில் தமிழ்ப் பண்பாட்டின்

**காதல்**

தமிழர் காதலை அன்பின் ஐந்திணை என்றனர் இஃது முருகனும் கொண்ட உளமொத்தத் குபவர்கள் அறிவும். செல்லமும் இக்காதல் நாடகத்தில் தலைவன் தலைளி நற்றாய் செவிலித்தால் பொன்றோரும் ஊர்மக்களும் பாத்திரங்களா 3வர் இக்காதல் வாழ்வு அரத்திலிருந்து பாறுபடாமல் அன்னே விப்பாட்டாக அமைவும்

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு"

**வீரம்**

பண்டைய தமிழர்கள் வீரத்தைத் தொல்காப்பியப் புறத்திணை இயல் கூறுகின்றது. பெரும்பாலும் தற்காப்பு முறையில் தான் போர் பெற்றது தேர்ப்படை யானைப்படை குதிரைப்படை காலாட்படை மேலும் வீரர் அல்லாதவர்கள் புறங்காட்ட புண்பட்டார். முதியோர், இளையோர். இவர்கள் மீது படைக்கலம் செலுத்தவசகா என்பதும் புறநானுற்றால் அறிய முடிகிறது.

**நட்பு**

சங்ககாலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்து வாழ்த்தனர். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு".

உள்ளன்புடன் மனம் மகிழ்ந்து நட்பு கொள்ளதே உன நட்பாகுமென்றார்

கபிலரும் பறம்பு மலைத்தலைவன் பாரியும் நட்பாயிருந்தன பாரியின் மகளிர் இருவரையும் பாரி இறந்தபின லர மணமும் வைக்கிறார். மேலும் கபிலர் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதலை கண்டு பறம்பு நாட்டின் வளம் பாரியின் சிறப்பு, அவன் வீரம், ஆழத்தைக் காட்டுகிறது. சேரமன்னனிடம் கூறும் நிலை அர்கள் நட்பின்

கோப்பெருஞ்சோழன் தம் மக்களிடம் நாட்டை விட்டு மணம் நொந்து வடக்லிருந்து உயிர் துறக்க முயல்கிறான் அ கோப்பெருஞ்சோழனை தேரில் மலே

நட்புக்காண்டிருந்த புல்ய பிசிராந்தையார் நாமும் நண்பனுடன் வடக்கிருந்து உயிர்துறக்க விந்து விரும்பியவாறு உயிர் துறக்கிறா பாராமலே

“அழிவி னவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கள்

அல்லல் உழப்பதாம் நட்பு"

என்ற வன்ளுவரின் வாக்குப்படி தீமையை நீக்கி செலுத்தி, துன்பம் வரும்போது உடனிருந்து என்பதற்குத் தாமே சான்றாகிறார் பிசிராந்தையார். அனுபவிப்பதே நட்பாகும்

அதியமான் நெடுமானஞ்சியிடம் நட்பு கொண்ட தொண்டை மானிடம் சென்று அதியமான் வீரம் வெளிப்படுமாறு வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடி நடக்க விருந்த பெரும் ஆறிவார் தம் அமிழ்தங்க இலக்கியங்களால் அறியப்படும் செய்திகளாக்கும் அதியமானும் அமிழ்தினும் இனிய நெல்லிக்கனியை தானுண்ணாது ஒன்வைக்குக் கொடுத்து மகிழ்ந்தான். சங்க காலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்துப் போற்றினர்.

**விருந்தோம்பல்**

"விருந்து" என்ற சொல்லுக்குப் 'புதுமை' என்பது பொருள் உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை 'விருந்து' என்றனர் தமிழர் அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

"செல்லிருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு"

இந்திய தேசிய இயக்கம் மற்றும் இந்திய பண்பாட்டிற்குத் தமிழர்களின் பங்களிப்பு

என்கிறார் திருவள்ளுவர். விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உன்னே உண்ணுதல் மைக்கு பருந்தாலிய அமிர்தமாக இருந்தாலும்

வேண்டப்படுவதில்லை என்பதை வள்ளுள், விருந்து புறத்ததார் தானுண்டல் சாவா

“மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

என்று கூறுவதிலிருந்து விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக

இருந்தமை அறிய முடிகிறது.

கொடை

அரசர்கள் கொடை வள்ளல்களாக இருந்திருக்கிறார்கள். தம்மைப் பாடி வரும் புலவர்களுக்கும் மற்றவருக்கும் பொன்னையும் பொருளையும் வரையாது கொடுத்து மகிழ்ந்தமை சங்க இலக்கியங்களால் உணர முடிகிறது. பாரி, ஓரி, காரி, பேகள்

போன்றோர் கடையேழு வள்ளல்கள் என்று போற்றப்பட்டனர்.

**கற்புடைமை**

மக்களின் இல்லறம் நல்லறமாக நடத்தமை இலக்கியங்களால் அறிய முடிகிறது. பெண்கள் தற்காத்துத்தத் கொண்டான் பேணி சொற்காத்தும் சோர்வு இல்லாதவர்களாகக் கற்புக் கடப்பூண்டு இருந்தமை அறிய முடிகிறது. திருவள்ளுவர்

"தெய்வம் தொழாஅள் கொழுதன் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை"

கூறுகிறார். காலத்தில் பெய்து காக்கும் மழைக்குச் சமமானவர்களாகக் கற்புடைய பெண்டிர் மறித்து வணங்கப்பட்டனர். ஆண்கள் போர் முதலியவற்றால் இறந்து படுதலின், ஆண் இளம் குறைந்தே இருந்தமையால் ஒரு ஆண் இரண்டு அல்லது மூன்று பெண்களை மணந்து வாழ்ந்தமை அறிய முடிகிறது.

**உலக ஒருமைப்பாடு**

பண்டைத் தமிழர்கள் நாகரிகம் பண்பாட்டில் சிறந்து இருந்தனர்.

தமிழ்நாட்டில் உழவு, நெசவு, வாணிகம் போன்ற தொழில்களும் அவற்றின் சார்பு தொழில்களும் சிறந்திருந்தன. கடல்கடந்து வெளிநாடுகளுக்கும் சென்று தமிழர் வணிகம் செய்து சிறந்தனர். நமது பண்பாடு, நாகரிகம், மொழி யாவும் வெளிநாடுகளில் சிறக்கக் காரணம் பண்டைத் தமிழர்களே. கணியன் பூங்குன்றனார் என்னும் புலவரின் புறப்பாடல் ஒன்றே நம் தமிழரின் உலக ஒற்றுமைக் கொள்கையை உலகுக்குப் பறைசாற்றும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா"

தமிழரின் உள்ளம் உயர்ந்ததேயாகும். கணியன் பூங்குன்றனாயின் வாதும் வாவரும் கேளிர் என்ற புறப்பாடல் வரி ஐக்கியநாடுகள் சபை துழைவு பெற்றிருக்கிறது என்று எண்ணி மகிழத்தக்கது. இவ்வாறு தமிழ்ப் பண்பாடானது இந்தியப் பண்பாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது.

**சுயமரியாதை இயக்கம்**

திராவிடர் கழகத்தின் ஆரம்பப் புள்ளி சுயமரியாதை இயக்கம் ஆகும். பெரும்பாலும் திராவிடர் கழகத்தைப் பற்றிப் பேசும் இன்றைய தலைமுறையினர் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றிப் பேசுவதில்லை. சுயமரியாதை இயக்கம் சமுதாயத்தின் பிற்பட்ட மற்றும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, மக்களின் வாழ்வியல் உரிமைக்காகவும், அவர்களின் மனித சமத்துவத்தை வலியுறுத்துவதற்காகவும் 1925-ஆம் ஆண்டு பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களால் தமிழகத்தில் தொடங்கப்பட்ட இயக்கம் 1944 ம் ஆண்டு முதல் இவ்வியக்கம் திராவிடர் கழகம் என்று மாற்றப்பட்டுத் திராவிடர்களின் நலன்களில் அக்கறை கொண்ட கட்சியாகச் செயல்பட்டது. ஆனால் திராவிடர் கழகத்திற்கான விதை போடப்பட்டது.

பெரியார் 1919-ஆம் ஆண்டுத் தனது வணிகத்தொழிலை நிறுத்திவிட்டுக் காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டார். 1922-இல் சென்னை

இராசதானியின் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருப்பூரில் நடைபெற்ற கூட்டத்தில் அரசுப் பணிகளிலும், கல்வியிலும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை, காங்கிரஸ் கட்சி ஆங்கில அரசுக்கு வலியுறுத்த வேண்டு என்பதை மிகத்தீவிரமாக முன்னிறுத்தினார். அவரின் முயற்சி அன்றைய காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களின் வர்க்க பேத மற்றும் பிறசாதியினை வேற்றுமை கொண்டு பார்க்கும் தன்மையால் தோல்வியுற்றது. அதனா 1925 இல் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி சுயமரியாதை இயக் தொடங்கினார் பெரியார்.

இவ்வமைப்பு பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டுவத்தில்கின்ற சமூகத்திடமிருந்து இவர் மனத்திப் பெடுக்கவும், அவர்களைச் சமுதாயத்தில் மேல்மட்டத்திற்கு உயர்த்தவும் பாடுபட்டது. இவ்விலுமத்தியக எழ தமிழகத்தில் மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர் மற்றும் சில்மி வாழ் இந்தியர்கள் என்றுமின்றி மலகிலும் பரவியது. சிங்கப்பூரில் தமிழவேன் ஜி சாரங்கபாணி தலைமையில் பரவியது.

சுயமரியாதை இயக்கம் முக்கியக் கொள்கைப் பரப்புரையாக, சமுதாயத்தின் எனைத்திற்கு உரிய மூடப் பழக்க வழக்கங்களையும், பாம்பரை வழக்கங்களையும் பின்பற்றப்படுவதைத் தொடர்ந்து எதிர்க்கும் நிலையை எடுத்தது. மக்களை அறிலின்மையிலிருந்து மீட்டெடுக்கவும், தெளிவுடையவர்களாக மாற்றவும் இதன் கொள்கைகள் வழிவகைச் செய்தன. பகுத்தறிவுச் சிந்தனையுடன் மக்களின் செயல்பாடுகள், ப பின்பற்றப்படவேண்டிய கடமைகளாகப் பலவற்றை இவ்வியக்கம்

சுயமரியாதைக்காரர்கள் பிரமாணப் புரோகிதரில்லா. சமயச் சடங்கில்லா திருமணங்கள் நடைபெற வலியுறுத்தினர். ஆணும், பெண்ணும் சமம் அவர்கள் வேறுபாடின்றி, சரிதிகர் சமமாக வாமும் முறையை வலியுறுத்தியது.

சாதி மறுப்பு திருமணத்தையும், கைம்பென் திருமணத்தையும் ஊக்கப்படுத்தியது. அளவில்லா குழந்தைகள் பெறுவதைத் தடுத்துக் குடும்பக் கட்டுப்பாட்டை 1920-afal Ja வலியுறுத்தியது. கோவில்களில் சட்டத்திற்குப் புறம்பாகப் பின்பற்றப்படும் தேவதாசி முறையையும், குழந்தைத் திருமணத்தையும் தடை செய்தது. இதனினும் முக்கியக் கொள்கையாக அரசு நிர்வாகப் பணி, கல்வி இவற்றில் இடவொதுக்கீடு முறையைக் கடைப்பிடிக்க மதராஸ் அரசு நிர்வாகத்தை 19283லயே வலியுறுத்தியது. இந்தப் மற்றும் தத்துவங்களை முழுநேரச் செயல்பாடுகளாகப் பெரியார் 1925-லிருந்து செயல்படுத்தி வந்தார். இதைப் பரப்புவதற்கு எதுவாகத் தொடங்கப்பட்டது தான் குடியாக இதழ்; 1925ல்

**இந்திய மருத்துவத்தில் சித்த மருத்துவத்துவத்தின் பங்கு**

இந்தியாவில் சித்த மருத்துவமானது மிகப்பழைமையான மருத்துவ முறையாகும். சித்த மருத்துவத்தில் துறவிகளான சித்தர்கள் முயன்று. ஆராய்ந்து செயல்படுத்தி வெற்றி பெற்றதால் 'சித்தா' எனப்பெயர் பெற்றது. பறினெட்டு சித்தர்கள் இந்த சித்தமருத்துவத்தின் வளர்ச்சிச் இடயெரியம் உழைத்தார்கள். இந்திய நாட்டிசித்தர் இடுகளிலும், நடைமுறையில் சசர்ந்ளது. சிந்த அதிகமாக தமிழ்பேசும் மருத்துவ முறையானது இளிநாடுகளில் மருத்துவ முறையை

**சித்த மருத்துவத்தின் வரலாறு**

இந்தியாவில் மனித இளம் மிகவும் வளம் நிறைந்த இடத்தியே தோன்றியது இங்கு மனித இனத்தின் கலாசாரம் பண்பாடு இருத்தியானதில் இதன் மூலமாக மனிதஉரம் நாகரிகம் முதலானவை இந்தியாவில் இருந்து பரவியிருக்கலாம். இந்திய வரலாற்று கூற்று படி ஆரியர்கள் வருவதற்கு முன்பே திராவிடர்கள் இந்தியாவில் இருந்தார்கள். அதிலும் தமிழர்கள் அதிகம் காணிப்ாவிடார்கள், தமிழர்களின் கலாச்சாரம் மற்றெல்லா கலாசாரத்தை விட மிக வேகமாக வளர்ந்தோங்கியது. நடுந்தியாவின் மொழிகள் இரண்டு பிரிவுகளாக இருந்தது. வடக்கே சமஸ்கிருதமும், தெற்கே திராவிட மொழிகளும் பிரதான மொழிகளாக இருந்தது. மருத்துவ அறிவியல் மனிதனின் நீடித்த சுக வாழ்விற்கு அடிப்படை கூறாக நாகரீகத்துடன் ஒன்றியிருந்தது. இதனால் மருத்துவ முறைகளும் மனிதன் தோன்றிய காலம் தொட்டே இருந்து வருகிறது.

சித்த மருத்துவ முறைகள் தெற்கேயும், ஆயுர்வேதம் வடக்கேயும் வளர்ச்சி பெற்றது.இந்த மருத்துவ முறைகளுக்கு தனி மனிதனின் பெயரை சூட்டாமல், மனித குலத்தை தோற்றுவித்தவரின் பெயரையே வைத்தனர். பாரம்பரிய கூற்றுகளின் படி சித்த முறைகள் முதற்கடவுளான சிவனிடம் இருந்து பார்வதிக்கும், பின்பு நந்தி தேவருக்கும், பின்பு சித்தர்களுக்கும் கைமாறியது ஆதி காலத்தில் சித்தர்கள் பெரும் அறிவியல் ஆராய்ச்சியளர்களாக திகழ்ந்தார்கள்.

பாரம்பரிய வழிமுறைபடி, சித்த மருத்துவ முறையானது அகத்தியர் என்னும் சித்தரின் வழி தோன்றலே ஆகும். இன்றும் பல புத்தகங்களில் அகத்தியரின் மருத்துவ முறைகள் காணப்படுகிறது. அது இன்றைய மருத்துவர்களால் பயன்படுத்தபடுகின்றது.

**சித்த மருத்துவத்தின் அடிப்படை**

சித்த மருத்துவக் கோட்பாடுகள் மற்றும் முறைகள் ஆயுர்வே முறைகளை ஒத்திருக்கும் வேதியல் கூற்றுபடி, நமதுஉடற் கூறுகள் இயற்கையை சார்ந்து இருக்கும். ஆயுர்வேதாவில் ஏற்றுகொள்ளப்பட்டது போலி உடலானது ஐந்து அடிப்படை தாதுக்களால் ஆனது அவை நீ காற்று, ஆகாயம் மற்றும் நெருப்பு ஆகும். அதுபோல் உடல் எடுத்து கொள்ளும் பகுத்தும், உணவும் மேற்சொல்லப்பட்ட ஐந்து அடிப்படை கூறுகளால் உருவாக்கப்பட்டதாகும்.

இந்த ஐந்து கூறுகளின் கலவைகளின் அளவுகள் வேறுபட்டு மருத்துவத்தின் வாயிலாக பயனளிக்கும் ஆயுர்வேதாவின் மருத்துவ கருத்துகளைப் போல, சித்த

முறையிலும் பல பிரிவுகள் உள்ளதாக கருதப்படுகிறது. ஏழு அடிப்படை உடல் மூலக்கூறுகள், மற்றும் கழிவு பொருட்களாகிய மலம், சிறுநீர், வியர்வை ஆகும்.மனிதனுக்கு அடிப்படையான ஆதாரம், உணவு ஆகும் இதுவே உடல் கூறுகளில் திசுக்களை வளர்க்கும். கழிவு பொருட்களாகவும் உருமாறும். மேற்கண்ட செயல்பாடுகளில் உண்டான சமநிலை உடலின் நலத்தை குறிக்கிறது. இந்த சமநிலை குறைந்தால், தவறினால், சமமற்ற நிலையால் உடலில் நோய்கள் உருவாகும். இந்த முறையானது, வாழ்க்கையில் இழந்த நிலை மீட்க சமநிலை ஆரோக்கியத்தை பேண வேண்டும்.இந்த சம நிலையை, ஆரோக்கியத்தை பேண வேண்டும். இந்த சமநிலையை அடைவதற்கு மருத்துவமும்-தியானமும் துணை செய்கிறது.

சித்த மருத்துவத்தில் வேதியியல்

சித்த மருத்துவ முறையில் வேதியியல் பெரும்பங்காற்றி வருகிறது. மருந்துகள் தயாரிப்பதற்கும் அடிப்படை உலோகங்களை தங்கமாக மாற்றுவதற்கும் வேதியியல் உதவி புரிகிறது. செடிகள் மற்றும் உலோகங்கள், கனிமங்கள் ஆகியவைகளின் தன்மைகள் முழுவதும் இந்த துறையில் ஆராயப்படுகின்றன. சித்தர்கள், இவ்வகையான வேதியியல் மாற்றங்கள் பற்றி நன்கு அறிந்திருந்தனர். காய்ச்சி வடித்தல், ஆவியாக்குதல், பண்டைக் காலத்தில் நீண்ட காலம் அழியாதிருக்க வேண்டும் எனக் கருதப்பட்ட செய்திகள் கற்களில் வெட்டப்பட்டன. இவ்வாறு கல்லில் பொறிக்கப்பட்ட செய்தியே கல்வெட்டு எனப்படுகின்றது. பெரும்பாலும், மன்னர்களின் ஆணைகள், அவர்கள் செய்த பணிகள் போன்றவை கல்வெட்டுக்களாகப் பொறிக்கப்பட்டன. இவை தவிர வீரர்கள், பிரபுக்கள், அதிகாரிகள் போன்றோர் தொடர்பிலும், முக்கிய நிகழ்வுகள் தொடர்பிலும் கல்வெட்டுக்கள் உள்ளன.

கல்வெட்டுக்கள், பெரும்பாலும் பொதுமக்கள் பார்ப்பதற்காக வெட்டப்படுவதால் இவை பொது இடங்களிலேயே அதிகம் காணப் படுகின்றன. கோயில்கள்,குகைகள்,பொது மண்டபங்கள், வெற்றித் தூண்கள், நடுகற்கள் எனப்படும் இறந்தோர் நினைவுக் கற்கள் என்பவற்றில் கல்வெட்டுகளைக் காணலாம். கல்வெட்டு பொறிக்கும் வழக்கம் உலகின் பல பகுதிகளிலும் காணப்பட்டுள்ளது. தொல்லியல் ஆய்வுகள் இறந்துபட்ட அல்லது இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறு மொழிகளிலுமான கல்வெட்டுக்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளன.

கல்வெட்டுக்கள் பல ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கக் கூடியவை. ஆதலால், மிகப் பழங்கால வரலாற்றுச் செய்திகள், நிகழ்வுகளுக்கான நம்பகமான சான்றுகளாக இவை திகழ்கின்றன.பல கல்வெட்டுக்கள் ஒரு மொழியில் மட்டுமின்றி, ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளிலும் ஒரே செய்தியைக் குறிக்கும்படி அமைந்துள்ளன. இத்தகைய கல்வெட்டுக்கள் வழக்கொழிந்து மறக்கப்பட்டுவிட்ட மொழிகள் பலவற்றை வாசித்து அறியவும் அவற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் உதவுகின்றன.

**தமிழ் நாட்டில் கல்வெட்டுக்கள்**

தஞ்சைப் பெரிய கோவிலில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுக்களின் ஒரு பகுதி. தமிழ் நாட்டின் மிகப் பழைய கல்வெட்டுக்கள் நடுகற்களில் வெட்டப்பட்டவை ஆகும். தொல்காப்பியம் நூல்களிலுள்ள செய்திகளும் இதற்குச் erdrpra பழந்தமிழ் தொல்காப்பியத்தில், போர்க்களத்திலே வீரமரணம் அடைந்தோருக்கும் கல்லெடுத்தலும், அக்கல்லில் அவர்தம் வீரச் செயல்களைப் பொறித்தலும் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இவ்வாறாக நடுகற்களில் தோன்றிய கல்வெட்டுக்கள் பல்லவர் காலத்தில் வேறு தேவைகளுக்கும் பயன்படத் தக்கதாக வளச்ச்சியடைந்தன. பல்லவர்களின் தொடக்க காலக் கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியிலும், இடைக்காலத்தில் சமசுகிருதத்திலும் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல், பிற்காலப் பல்லவர் காலத்தில் தமிழிலும் பொறிக்கப்பட்டன.

இவர்களுக்குப் பின்னர் சோழ மன்னரும். பாண்டியரும் கல்வெட்டுக்களைப் பொறிக்கும் வழக்கம் உடையோராக இருந்தனர். இதனால் கல்வெட்டுக்கள் பெரிதும் வளர்ச்சியுற்றன. இவ்வாறு பொறிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களின் மூலமே தமிழ் நாட்டின் இடைக்கால வரலாற்றின் பெரும்பகுதியை அறிந்து கொள்ள முடிந்தது.

2005 ஆம் ஆண்டு இந்தியத்தொல்லியல்ஆய்வுமையம் வெளியீட்ட அறிக்கையின்படி உலகிலேயே இலத்தீனுக்கு அடுத்ததாக இந்தியாவில் சுமார் 100,000 கல்வெட்டுகள் உள்ளது. இதில் 60,000 கல்வெட்டுகள் தமிழ் நாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டின், ஆதிச்சநல்லூர் புதைபொருட்களில் பெருங்கற்காலக் குறியீடுகள் மற்றும் தமிழி எழுத்துகள் காணப்படுகின்றன.

**கையெழுத்துப்படிகள்**

பாறைகளில் பனையோலைவைப் தமிழர்கள் வந்த பயன்படுத்தத் தொடங்கினர். பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட காலம்வரை பனையோலையில் எழுதுகின்றமுறை ஆசியநாடுகள் அனைத்திலும் இருந்திருக்கிறது. இவ்வாறு எழுதப்பட்ட அனைத்தும் எழுத்தோலைகள் எனப்படுகின்றன. நூலாக எழுதப்பட்ட ஓலைகள் கட்டித் தொகுக்கப்பட்டன. இவற்றைப் பொத்தகம் என்றும், பொத்தகக்கலளி என்றும் வழங்குவர். இதிலிருந்து உருவானதே புத்தகம் எனும் சொல் கையெழுத்துப்படி அல்லது எழுத்துப்பிரதி எனப்படுவது கையால் எழுதப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஆக்கத்தின்படி ஆகும். இதனை அச்சுப்படி அல்லது எண்ணிமப்படியில் இருந்து வேறுபடுத்திப்பார்க்கலாம். தமிழ்ச்சூழலில் அச்சுக்காலத்துக்கு முன்பு அனைத்து ஆக்கங்களும் கையெழுத்துப்படிகளாகவே அமைந்தன, சுவடிகளும் இவற்றுள் அடங்கும்.

**எழுத்தோலையின் அளவு**

ஒவ்வொருவருக்கும் பாட்டெழுதும் போது குறிப்பிட்ட அளவு (விரற்கடை அளவு) எழுத்தோலையைப் பயன்படுத்த வேண்டுமென்பதைச் பாட்டியல் நூல்கள் வரையறை செய்துள்ளன. இதன்படி நான்மறையாளர்க்கு 24 விரற்றானமும், அரசருக்கு 20 விரற்றானமும், வணிகருக்கு 18 விரற்றானமும், வேளாளர்க்கு 12 விரற்றானமும் இருக்க வேண்டும் என்று கீழ்காணும் கல்லாடனார் வெண்பாவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**ஓலைகளின் வகைகள்**

**நீட்டோலை**

திருமணம் மற்றும் இறப்புச் செய்திகளுக்கான ஓலை 'நீட்டோலை" என அழைக்கப்பட்டன.

**மூல ஓலை**

ஓலைச் செய்தியைப் படியெடுத்து வைத்துக் கொள்ளும் முறை அந்தக் காலத்திலேயே இருந்துள்ளது. இந்த ஓலைகளை "மூல ஓலை" என அழைத்தனர்.

**சுருள் ஓலை**

ஓலை ஆவணங்கள் நாட்டுப்புற மகளிர் அணிந்து வந்த சுருள் வடிவமான காதோலை போல் சுருட்டி வைத்துப் பாதுகாக்கப்பட்டன இலை "சுருள் ஓலைகள்" எனப்பட்டன. இதை "கருள்பெறு மடியை நீக்கி" என பெரியபுராணத்திலுள்ள பாடல் மூலம் அறிய முடிகிறது.

**குற்றமற்ற ஓலைமூளியும் பிளப்பும் இல்லாத ஓலை "குற்றமற்ற முலை எனப்பட்டது.**

**செய்தி ஓலைகளின் வகைகள்**

எழுத்தோலைகளில் உள்ள செய்திகளைக் கொண்டும் அவை தனிப் பெயர்களில் அழைக்கப்பட்டன.

**நாளோலை**

தமிழகத்திலுள்ள கோவில் செய்திகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஓலை "நாளோலை" எனப்பட்டது. கற்றறிந்தார் எத்தும் கலித்தொகையை முதன் முதலில் பதிப்பித்தவர் தமிழ்த்தந்தை எனப் பல்லோராலும் அழைக்கபெறும் இரசன்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஆவார். 1887 ஆம் ஆண்டில் முதற்பதிப்பாகம் கலித்தொகை தமிழ் உலகிற்கு அறிமுகமானது அவருடைய பதிப்புப் பணிக்குப்பின் தமிழ்த்தாத்தா என அழைக்கப்பெறும் டாக்டர் சாமிநாதையர் அவர்களுடைய முதற்பதிப்பாகிய பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியார் உரையும் 1889-இல வெளிவந்தது. இப்பதிப்பிற்குப்பின் எட்டுத்தொகை பதிப்பித்தார். தூல்களுள் ஒன்றான புறநானூற்றினை 1894இல் 1903-ம் ஐங்குறுநூற்றினைப் பதிப்பித்தார். 1904-இல் பதிறுப்பத்தினை வெளியிட்டார். நற்றிணை பின்னத்தூர் நாராயணசாம் ஐயர்

உரையுடன் யந்திரசாலையில் 1915 சென்னை சைவ வித்தியாநுபாலன வெளிவிடப்பெற்றது. இவருடைய பதிப்புப்பணியைப் பின் தொடர்ந்து சௌரிப் பெருமாள் அரங்களார் குறுந்தொகையை அழகிய முறையில் பதிப்பித்து 1915இல் வெளியிட்டார். 1918 இல் வெளியிட்ட பரிபாடலானது உ வே.சாவின் முதற்பதிப்பாக வெளிவந்தது. ரா.ராகவையங்கார் அவர்கள் அகநானூற்றினை முதற்பதிப்பாக 1920 இல் நம்பர் விலாசம் இராஜகோபாலய்யங்கார் மூலம் வெளியிட்டார்.

### பத்துப்பாட்டின் பிற பதிப்புகள்

இதுவரை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களுக்கு ஏராளமான பதிப்பு நூல்கள் தோன்றியுள்ளன. ஆய்வுப்பதிப்பு, மூலப்பதிப்பு, மலிவுப்பதிப்பு எனப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இனி ஒவ்வொரு பதிப்பாசிரியர்களுடைய நூல்களையும் தனித்தனியாகக் காணலாம். பொ.வே.சோமசுந்தரனார் அவர்கள் பத்துப்பாட்டினை இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளார். அவருடைய மறுபதிப்பு விவரம் வருமாறு: முதற்பதிப்பு 1956, 1962, 1966, 1968, 1971. 1961 ஆம் ஆண்டில் வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியாருடைய பத்துப்பாட்டுப் பதிப்பு வெளிவந்துள்ளது. மலிவுப்பதிப்பாக மர்ரே பதிப்பு இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது.

### திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் தனித்தனியாகவும் சில நூல்களை உரையாசிரியர்கள் வெளியிட்டுள்ளனர். திருமுருகாற்றுப்படையினை வெளியிட்ட பல்வேறு உரையாசிரியர்களுடைய காலவரிசை வருமாறு 1902 திருமுருகாற்றுப்படையினைத் சரவணப்பெருமாளைர் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். பின்னர் 1917 இல் முதற்பதிப்பாக வெளியிட்ட ஆறுமுக நாவலர் 1947 இல் 16 ஆம் பதிப்பாகவும் வெள்யிட்டார்." திருமுருகாற்றுப் படை மூலமும் பரிமேலழகர் உரையும்" என்ற தலைப்பில் 1924 இல் மகாதேவ செட்டியார் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். 1927 இல் திருமுருகாற்றுப்படைச் சிற்றாராய்ச்சி" என்ற பதிப்பு நூலினைத் எம். ஆறுமுகப்பிள்ளை அவர்கள் வெளியிட்டார். திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரையினை 1937 இல் பண்டிதர் சு. அருணம்பலம் அவர்கள் வெளியிட்டார். 1937 இல் திருமுருகாற்றுப்படை மூலமும் பொருட்சுருக்கமும் பதவுரையும் குறிப்பும் என்ற தலைப்பில் தை-ஆ களகசபாபதி முதலியார் அவர்கள் பதிப்பித்தார். 1945 இல் வை.மு.கோ.பதிப்பும் வெளிவந்தது. ஏறத்தாழ திருமுருகாற்றுப்படைக்கு மட்டும் பதினைந்து உரையாசிரியர்கள் உரை எழுதி பதிப்பித்துள்ளனர்.

### பொருநராற்றுப்படை

பொருநராற்றுப்படைக்கு இரு உரையாசிரியர் உரை எழுதியுள்ளனர். மகாதேவ முதலியார் மற்றும் பொ.வெ.சோமசுந்தரனார் ஆவர்.

**சிறுபாணாற்றுப்படை**

சிறுபாணாறுப்படைக்கு நான்கு உரையாசிரியர்கள் உரை எழுதிப் பதிப்பித்துள்ளனர். (வை.மு.கோ வி. கந்தசாமி முதலியார், மு. பி.

பாலசுப்பிரமணியன், பொ.வே.சோமசுந்தரனார்)

**பெரும்பாணாற்றுப்படை**

வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார்.

பொ.வே.சோமசுந்தரனார் .அருணணம்பலம் முதலான உரையாசிரியப் பெருமக்களும் உரை எழுதிப் பதிப்பித்துள்ளனர். ரா.ராகவையங்கார்.

**முல்லைப் பாட்டு**

எழுதியுள்ளார். 1903 இல் மறைமலையடிகள் அவர்களுடைய முதற்பதிப்பாக முல்லைப்பாட்டு வெளிவந்துள்ளது. தவிர வை.மு.கோ.கனகசபாபதி முதலியார். கூ.ப.சந்தோஷம், பொ.வே.சோமசுந்தரனார், முதலானோர் எழுதிய உரைகளும் வெளிவந்துள்ளன.

**மதுரைக்காஞ்சி**

மதுரைக்காஞ்சிக்கு பொ.வே. சோமசுந்தரனார் அவர்கள் எழுதிய உரை மட்டும் கழ வெளியீடாக வெளிவந்துள்ளது. ((முதற்பதிப்பு 1956)

**நெடுநல்வாடை**

நெடுநல்வாடைக்கு வை.மு.கோபாபாலகிருஷ்ணமாசாரியார் பதிப்பும் (1931) பொ.வே.சோமசுந்தரனார் அவர்கள் எழுதிய கழக வெளியீடும் வந்துள்ளன.

**குறிஞ்சிப்பாட்டு**

கழக வெளியீடாக பொ.வே.சோமசுந்தரனார் உரை மட்டும் (1956) வந்துள்ளது.

**பட்டினப்பாலை**

பட்டினப்பாலைக்கு வை.மு.கோ (1933, 1938) உரையும், மறைமலையடிகள் எழுதிய கழக உரையும் (1956), ரா.ராகவையங்காரின் முதற்பதிப்பு 1951 இலும், சாமி.சிதம்பரனாரின் முதற்பதிப்பு 1967

**மலைபடுகடாம்**

மலைபடுகடாத்திற்கு பொ.வே.சோமசுந்தரனார் உரைமட்டும் கழக வெளியீடாக வந்துள்ளது.

**எட்டுத்தொகை நூல்களின் பிற பதிப்புகள்**

பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரின் முதற்பதிப்பிற்குப்பின் வெளிவந்த மறுபதிப்புகள் பற்றிய விவரம்.

முதற்பதிப்பு 1952 இல் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடாக பின்னத்தூரார் வெளியிட்டார். அடுத்த பதிப்பிளை 1956 இல் வெளியிடார். இவரே நற்றிணை நானூறு' என்ற பதிப்பு நூலினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீட்டில் மூன்றாம் பதிப்பாக 1962 இல் வெளியிட்டார்.

**குறுந்தொகை**

சௌரிப்பெருமாள் அரங்கனாரின் உரைக்குப்பின் எண்ணிலடங்கா உரையாசிரியர்களும் உரை எழுதியுள்ளனர். அடுத்து 1920 இல் காரா. நமச்சிவாய முதலியார் பதிப்பு வெளிவந்தது. 1930 இல் முதற்பதிப்பாக இராமரத்தினம் ஐயர் பதிப்பும், 1933 இல் சோ அருணாசல தேசிகரின் குறுந்தொகை மூலமும் வெளிவந்துள்ளன.

**ஐங்குறுநூறு**

உ.வே. சாவின் முதற்பதிப்புக்குப் பின் இரண்டாம் பதிப்பாக 1920 இல் வெளிவந்தது.இவருடைய பதிப்புக்குப் பின் இரண்டாம் பதிப்பாக 1920 இல் வெளிவந்தது.இவருடைய பதிப்புக்குப் பின் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை அவர்களுடைய பதிப்பானது மூன்று தொகுதிகளாக 1957 இல் வெளிவந்தது.

**பதிற்றுப்பத்து**

உவே. சாவின் முதற்பதிப்புக்குப்பின் வந்த மறு பதிப்புகள் 1920. 1941, 1945, 1949, 1957 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன இவருடைய பதிப்பினை அடுத்து ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்களுடைய பதிப்புகள் 1950. 1955, 1958, 1963, 1968 வெளிவந்துள்ளன.

**கலித்தொகை**

எட்டுத்தொகை வரிசை நூல்களுள் முதன் முதல் பதிப்பிக்கப் பெற்ற நூல் கலித்தொகையேயாகும். சி. வ. தசமோதரனார் அவர்களுடைய பதிப்பில் நச்சினார்க்கினியர் உரையும் உள்ளது. இவருடைய பதிப்பினைத் தொடர்ந்து இ. வை அனந்தராமையரவருடைய பதிப்பு (1925) மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளது. முதல் தொகுதியில் பாலைக்கமியும், குறிஞ்சிக்கலியும் (1925) இரண்டாம் தொகுதியில் மகுதக்கலியும், முல்லைக்கலியும் (1925) என இரு தொகுதிகளாக வெளியிட்டார். நெய்தற்கலியை மட்டும் 1931 இல் தனியாகப் பதிப்பித்து வெளியிட்ட இவர் 1930 இல் மூலத்தையும் பதிப்பித்துள்ளார். இவருடைய பதிப்பினை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தார் 1984 இல் வெளியிட்டுள்ளனர்.

## அகநானூறு

சா.ராகவையங்கார் அவர்கள் அகநானூற்றினைப் பதிப்பிக்க வேண்டு மென்ற எண்ணத்துடன், பல எடுகளைப் பரிசோதித்து மயிலாப்பூர் கம்பர் விலாசம், இராஜகோபாலய்யங்கார் மூலம் மூலத்தை மட்டும் பதிப்பித்து வெளியிட்டார். அகநானூற்றின் ஒரு கூறாகிய களிற்றியானைநிரையை உரையுடன் 1926 இல் பதிப்பித்தார். இவருடைய பதிப்பிற்குப்பின்

## புறநானூறு

உ.வே.சா. அவர்களுடைய புறநானூற்றின் மறுபதிப்புகள் வருமாறு: 1923, 1935, 1950, 1956, 1983, 1971, புறநானூற்றினை உரையுடன் வழங்கிய இவர் 1938 இல் மூலம் மட்டும் வெளியிட்டுள்ளார். 967 இதுரையாமிப்பிள்ளை அவர்கள் புறநானூற்றினை இருபகுதிகளாக 1947.